தெணியான்

# பாடும்மீன்

கௌரவ ஆசிரியர்
நீலாவணன்



பங்குனி 1967 40 சத.

கலை - இலக்கியத் திங்கள் இதழ்.

ஒலி ஒளி அமைப்பிலே ஓர் புதுமை

அதைப் பார்த்தவேளை

பிரமை! பிரமை!!

இதைத் தருகின்ற ஸ்தாபனம்

# "சுந்தரம்ஸ்"

இங்கே

* புதிய இசைத்தட்டுக்களுடன் ஒலி பெருக்கியும்,
* பல வர்ணங்களை அள்ளிக்கொளிக்கச் செய்யும்மின்னொளிச் சாதனங்கள்,
* லைற்மெசின் வாடகைக்கும், சைக்கிள்,
* சைச்கிள் உபகரணங்கள்,
* மின்சார உபகரணங்கள்,
* றேடியோ பெற்றரி விற்பனைக்கும்,
* பெற்றரி சார்ஜ் செய்யவும்,
* வீட்டுக்கு மின்சார இணைப்பு

வேலைகட்கும் விஜயம் செய்யுங்கள்.

கிளை :—

இல. 3, உள்றோட். ஆரையம்பதி – 1.
காத்தான்குடி.


விபரங்கட்கு:—

**சுந்தரம்ஸ் சைக்கிள் சொப்,**

**உள்றோட், ஆரையம்பதி—1.**

தெணியான்

265



பாடல்: 1 | பங்குனி 1967. | பண்: 2

## வெளுத்துக்கட்டு

'உழைப்பவர்தம் உகலமிது
போடி யாரே!
உம்போல உட்கார்ந்து
ஊரை மேய்க்கும்.
பிழைப்புடையார் பெரியாராய்
வாழ, நாங்கள்
பேசுதற்கும் உரிமையற்ற
புழுக்கை யாமோ!
புழுக்களல்லர் தொழிலாளர்!
கவனம்! நாளை
புரட்சித்தீ உம்வாயைப்
பொசுக்கித் தின்னும்!
இழக்காரம் பேசாதே!
எதிர் காலத்தை
எதிர்க்க உன்னல் இயலாதே!?
என்பார் போல...

ஊதுகிருன் பறைகுழலை;
அதனை, ஓம்ஓம்
உண்மை யெனத் தவிலடிப்பான்
ஒருவன்! சாவில்
வாது செய்த வண்ணுனே
கல்லில் மோதி
வஞ்சினத்தைத் தீர்க்க
அதோ பயிற்சி செய்வான்!
ஆதலினுல்..., ஊர்ப்போடி
உலக நாதா,
அவமானம் ஏதேனும்
ஒருநாள் நேரும்!
வேதனையும் சோதனையும்
விளையக் கூடும்!
விடாதே உன் வீரத்தை;
வெளுத்துக் கட்டு!

# இந்த இதழில்......


### கதைகள்

மருதூர்க் கொத்தன் — மூக்குத்தி.
சி. பி. சத்தியநாதன் — சீட்டுக்காசு
நோவன்ஞ — — பழி
சா. தருமலிங்கம் — கூத்து

### கட்டுரைகள்

புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை
— இலக்கியத்தில் சமநிலை.
கே. ஆர். அருளையா B. A. (Hons)
— மேலும் கீழும்.

### கவிதைகள்

நீலாவணன் — வெளுத்துக்கட்டு.
அரு. கணேஷ்—நினைவின் அலைகளிலே

### சிறப்பு அம்சம்

கேள்வி பதில்.
விருத்தாந்த சித்திரம்.
காமம் செப்பாது.


கதை கவிதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே. கருத்துகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

—(ஆ-ர்)

43ம் பக்கம் பார்க்க. — புகைப்படம்: ராணி ஸ்ருடியோ, கல்முனை.

# கடிதங்கள்

ஆசிரியர், பாடும்மீன்,
பெரிய நீலாவணை,
கல்முனை.

தங்கள் முயற்சி வெல்க.

கலாநிதி கைலாசபதி.
இலங்கைப் பல்கலைக் கழகம்.

ஃ ஃ ஃ

பாடும்மீன் கிடைத்தது. படித்து மகிழ்ந்தேன். மகிழ்ந்தேன் என்பதைவிட விசனமே மிகுதி. நல்ல முயற்சிக்கு மட்டக்களப்பும் மற்றையத் தமிழ்நாடும் என்ன உதவி செய்யப்போகின்றன என்ற சிந்தனையில், நான்கு கதைகள் மூன்று கட்டுரைகள், கவிதைகள், கொள்ளை மலிவுதான் நாற்பது சதத்திற்கு. ஈழத்தில் வெளியாகிக்கொண்டிருக்கும் மற்றைய மாதப் பத்திரிகைகளுடன் ஒப்பிடுகையில் பெருமைப் படக் கூடியதாகவே இருக்கிறது.

வ. அ. இராசரெத்தினம்,
திரிகூடம், மூதூர்.

ஃ ஃ ஃ

கதைகள் நான்கும் அற்புதம். உருவகக்கதைகளை ஒதுக்கிவிட்டீர்களே உங்கள் தனித்துவத்தைப் போற்றுகிறேன்.

அப்துல் ரஹீம்;
சாய்ந்தமருது, கல்முனை.

ஃ ஃ ஃ

பாடும்மீன் தொடர்ந்து பண்ணிசைக்கட்டும்.

நந்தி,
இலங்கைப் பல்கலைக் கழகம்.

ஃ ஃ ஃ

தரமான பத்திரிகைகளுக்குத் தமிழுலகில் எவ்வளவு வரவேற்பு இருக்கும் என்பதில் எனக்குச் சற்றுக் கவலையாக உள்ளது.

முகமட் பஷீர்,
கொழும்பு — 12.

நெருஞ்சிமுள் சிறுகதை என் நெஞ்சில் ஒட்டிவிட்டது. அது ஒன்றே போதும் பாடும்மீன் வாழ்வதற்கு. வி. சி மெம்பர் ஒரு சிறந்த சித்திரம். சிரிக்க வைக்கிறது.

க. விநாயகமூர்த்தி,
செட்டிபாளையம்.

ஃ ஃ ஃ

பாடும்மீன் படித்தேன். வி.சி மெம்பர் காசிநாதர் பலே ஜோர் இது போன்ற சித்திரங்கள் பின்னடைந்த நமது கிராமங்களைச் சிந்திக்க வைக்கட்டும். பாடும்மீன் தொடர்ந்து பாட என் வாழ்த்துக்கள்.

இ. கனகரெத்தினம்,
அம்பிளாந்துறை.

ஃ ஃ ஃ

யார் இந்த ஏ. ஜே? தமிழ் இலக்கிய விமர்சனத் துறைக்கு ஒரு விடிவு பிறந்ததென்ற தெம்பு பிறக்கிறது.

எஸ். குமாரசாமி,
திரிகோணமலை.

ஃ ஃ ஃ

பலே சங்கு சக்கரன், குறும்பா தமிழுக்குப் புதிய வடிவமில்லை என்பதை ஆணித்தரமாகவலியுறுத்தியுள்ளார்

மா. வேலாயுதன்,
நாவலப்பிட்டி.

ஃ ஃ ஃ

பாடும்மீன் பல்லாண்டு வாழ்க!

செ. வரதராசா,
நல்லூர், யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

தங்கள் முயற்சி தொடர்ந்து வாழ்க

எஸ். ஜே. ராஜன்,
கொழும்பு—11.



# நமது பாதை

பாடும்மீன் வாசக நண்பர்களுக்கு வணக்கம்.

'பத்தாயிரம் பிரதிகள் அச்சிட்டோம். வெளியீட்டு விழா மண்டபத்திலேயே பாதி விற்பனையாயிற்று. மீதியும் இரண்டொரு நாட்களிலேயே விலை போயிற்று.' என்று தடித்த எழுத்துகளில் போட்டுப் பெருமைப் படக் கூடிய அளவுக்கு இல்லா விட்டாலும், நாங்கள் எதிர்பாராத அளவுக்கும் அதிகமாக — அமோகமாகப் பாடும் மீனுக்கு, நாட்டின் நாலாதிசைகளிலும் இருந்து நல்லாதரவு கிடைத்துள்ளது. அதற்காக நன்றி பாராட்டுகிறோம்.

முதல் இதழ் பற்றி பல்வேறு பட்ட அபிப்பிராயங்களும் ஆலோசனைகளும், பல்வேறு கோணங்களில் இருந்தும் நம்மை நோக்கிப் படையெடுத்திருக்கின்றன. பெரும்பாலான அபிப்பிராயங்களை ஆராய்ந்தால்......

'பொழுது போக்கு அம்சங்கள் எதுவும் இன்றி, தனியே இலக்கிய நோக்கத்துக்காக மாத்திரம் ஒரு பத்திரிகையை நடத்தி வெற்றி பெற முடியாது.'

'அழகு அழகான அட்டைப் படங்கள், கவர்ச்சி மிக்க வண்ணப் படங்கள், கதைப்படங்கள், சுடச் சுடச் சினிமா, அரசியல், செக்ஸ் எது வேண்டும். எந்த எந்த வாசகனுக்கு எது எது பிடிக்குமோ அதையெல்லாம் தாங்கி, அணி — அணியாக ஈழத்தில் வந்து குவியும் எண்ணிறந்த வார — மாத வெளியீட்டுப் பத்திரிகைப் பரவையிலே பாடும் மீன் எதிர் நீச்சல் நீந்தி நிலைத்து உயிர் வாழ முடியுமா?'

இத்தகைய அபிப்பிராயங்கள் நம்மை பய முறுத்துவனவாகவும், அதே நேரத்தில் நமக்கு ஒரு வித துணிவையும் நம்பிக்கையையும் ஏற்படுத்துவன வாகவும் இருக்கின்றன.

கடந்த ஆண்டில் ஈழத்தமிழகத்துக்கு வந்து, தமது மணி விழாவைக் கொண்டாடிப்போன கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்களைக் கொழும்பில் சந்திக்கக் கிடைத்தது. அவரோடு உரையாடிக் கொண்டிருந்த சமயத்தில், எங்கள் உரையாடல் ஈழத்

துப் பத்திரிகை முயற்சிகள் பற்றியும் திரும்பியது. 'ஈழத்து எழுத்தாளர்களின் படைப்புகளைத் தான் உங்கள் தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் உதாசீனம் செய்கின்றன. அவர்கள் என்ன எழுதுகிறார்கள் என்றுவது தெரிந்து கொள்ள தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் வாசகர்கள் ஆர்வம் காண்பிக்கிறார்களா?' என்று திரு. கி. வா. ஜ. அவர்களிடம் கேட்டு வைத்தோம். அவர் சொன்னார்.

'உங்கள் நாட்டில் இருந்து தமிழ் நாட்டுக்கு எங்கே பத்திரிகைகள் வருகின்றன? அப்படி ஏதும் பத்திரிகைகள் அங்கு வருவதாக இல்லை. அப்படித்தான் பத்திரிகைகள் அங்கு விற்பனைக்கு வந்தாலும். அவற்றைத் தமிழ் நாட்டு வாசகர்கள் வாங்கி ஆதரிப்பார்கள் என்று சொல்வதற்கும் இல்லை. இங்குள்ள பத்திரிகை ஆசிரியர்களும் எழுத்தாளர்களும் விரும்பி ஏதாவது பத்திரிகைகளை இலவசமாக அனுப்பி வைத்தால் மாத்திரம் உண்டு. ஈழ நாட்டிலிருந்து பத்திரிகைகள் அங்கு வரலாம். ஆனால் அவை தமிழ் நாட்டுப் பத்திரிகைகளோடு போட்டி போட்டு வென்று விட முடியாது' ஏன் சொல்லுகிறேன் என்றால்... இலங்கையில் நல்ல முறையாக 'பிளாக்'குகள் செய்து எடுக்க முடியாது. அதற்கான வசதிகள் தமிழ் நாட்டில் இருப்பது போல இங்கு கிடையா அதனால் பத்திரிகைத் தொழிலில் எங்களோடு நீங்கள் போட்டி போடமுடியாது., என்று.

ஈழ நாட்டுப் பத்திரிகைகளின் தரம் போதாது என்று திரு. கி. வா. ஜ. சொல்ல வில்லை; கவர்ச்சி போதாது, ஈழ நாட்டுப் பத்திரிகைகள் தாங்கி வரும் 'பிளாக்'குகள் போதாது என்று தான் கூறினார். சிலேடையாகப் பேசவல்லவரான அவர், ஒருவேளை கவர்ச்சி என்ற வார்த்தையிலேயே தரம் என்ற அர்த்தத்தையும் பாய்ச்சி இருக்கலாம். அவர் பேச்சை எப்படி எடுத்துக் கொண்டாலும் அங்கே ஒரு கருத்து வெளிப்படையாகவே தெரிகிறது. தமிழ் நாட்டிலிருந்து நம் நாட்டுக்கு வந்து குவியும் பத்திரிகைப் படை. எடுப்பை ஓரளவு கட்டுப் படுத்தாமல், ஈழ நாட்டில் பத்திரிகைகள் நடத்தி வெற்றி பெற முடியாது. என்பதுதான் அந்த வெட்ட வெளிச்சமான உண்மையாகும். அதைச் செய்யக் கூடிய தகுதி ஈழ நாட்டு எழுத்தாளர்களிடம் நிச்சயமாக இல்லை.

பொழுது போக்கு ஒன்றையே தேடி அலையும் மட்டரகமான வாசகனுக்கு, அவன் விரும்பிய வற்றையெல்லாம் கவர்ச்சிப் படங்கள் மூலம் — 'பிளாக்'குகள் மூலம் சுடச் சுட வழங்க வல்லவை தமிழ் நாட்டு இதழ்களே — என்பதையும் அதை ஈழ நாட்டுப் பத்திரிகைகளால் செய்யமுடியாது என்பதையுமே திரு. கி. வா. ஜ. அவர்கள் மனந் திறந்து கூறினார்கள்.

சினிமாக் கூத்துக்களையும் பொழுது போக்குக் குறளி வித்தைகளையும் திரு. கி வா. ஜ. அவர்கள் கூறுவதுபோல 'பிளாக்'குகளில் கண்டு அனுபவிக்கின்ற, கல்வி அறிவு அதிகம் அற்ற பாமரங்களுக்கு, கற்றவர்க்கு மாத்திரமே இன்பந் தருவதாகிய இலக்கியக் கலை இன்பம் தருவதில்லை என்பது நமக்கும் தெரியும். அத்தகைய வாசகர்களிடம் நமக்கு அலுவல் கிடையாது. அவர்களிடம் நாம் ஆதரவு கோரவும் இல்லை.

இலக்கியம், சமுதாயத்தை உயிர் ஓவியமாகப் பிரதிபிம்பித்துக் காட்டும் ஓர் அற்புதக் கண்ணாடி. அது ஒரு நாட்டின் முகத்தை மட்டுமல்ல, அதன் மொழியை மட்டும் அல்ல, அந்த நாட்டின் இதயத்தை சீரிய சிந்தனைகளை, அதற்கும் மேலாக அதன் ஆத்மாவையே பிரதிபிம்பித்துக் காட்டுவது. ஒரு நாட்டின் படைப்பு இலக்கியம், அந்த நாட்டின் சமுதாயக் கண்ணாடியே, அந்தக் கண்ணாடி எந்த நாட்டில் உருவாக்கப்பட்டதோ, அந்த நாட்டின் சமுதாயத்தையே அது பிரதிபிம்பிக்கிறது. மனிதம் என்ற ஒரு பொதுவான தன்மையைக் கடந்து பார்க்க நேரும் பொழுது, அவை பிறிதொரு நாட்டுக்கு அந்நிய மானவையே.

இலங்கை மணித்திரு நாடு எங்கள் தாய்நாடு. இது ஒரு தனிநாடு. தமிழ்நாடு இலங்கையின் தாய் நாடு என்று சிலர் பேசிக் கொள்வதெல்லாம் வெறும் பம்மாத்து.

சமுதாயத்தின் எழுச்சிகளை வீழ்ச்சிகளை உயர்வு தாழ்வு, மேடு பள்ளங்களை சித்தரித்துக் காட்டுகின்ற இலக்கியக் கண்ணாடிகளில் — தமிழ் நாட்டுக் கண்ணாடிகளில், தனித்து நிற்கும் ஒரு நாட்டின் சமுதாயமாகிய நாம் நம்முகத்தையும் தரிசிக்க நினைக்கிறோம். அடுத்தது காட்டும் பளிங்கு அல்ல இந்த இலக்கியக் கண்ணாடி. ஒருநாட்டின் இலக்கியப் படைப்பாளி தொகுத்தவைகளை மாத்திரந்தான் அக்கண்ணாடிகளில் நாம் தரிசிக்க முடியும். அந்தக் கண்ணாடிகளில் நம் முகத்தையோ மொழியையோ இதயத்தையோ ஆத்மாவையோ நாம் தரிசிக்கநினைப்பது வெறும் பேதைமை. மனிதம் என்ற உறவு முறையிலே இந்தத் தமிழ்நாட்டுக் கண்ணாடிகள் காட்டுகின்ற சித்திரங்களில், நம்மை நாமே ஏற்றிப் பார்த்துக்கொள்வதைத் தவிர, அந்த முகங்களுக்கும் நமக்கும் உள்ள வேறுபாடுகளோ அனந்தம்.

நாம் எப்படி இருந்தோம்? இப்பொழுது எப்படி இருக்கிறோம்? இனிமேல் எப்படி இருக்க ஆசைப்படுகிறோம்?

எங்கள் முகத்தை-இதயத்தை-ஆத்மாவின் பரிபாஷையை-மொழிவளத்தை, எங்கள் சமுதாய ஏற்றத் தாழ்வுகளை நமக்கு நாமாகப் படைத்துப் பார்த்துக்கொள்ளக் கூடாதா? ஏனைய மானுட சமுதாயங்களோடு நம்மை ஒப்பிட்டுப் பார்க்கும் உரைகல்லாக, நமது இலக்கியங்களை நாமே படைத்து நமது சமுதாய முன்னேற்றங்களுக்காக அவைகளைப் பயன்படுத்தக் கூடாதா? 'கவர்ச்சிப் பிளாக்'குகள் செய்யும் வசதிகள் நமக்குக் குறைவு தான். அந்தக் கவர்ச்சிப் பிளாக்குகளில்தான் இலக்கியத்தை நுகர முடியும் என்று நம்புகிறவர்கள் அப்படியே அதை நுகரட்டும்.

நம்நாட்டின் தனித்துவம் வாய்ந்த இலக்கியக்கலை வளர்ச்சியடைய வேண்டும்.. என்று கருதுகின்ற போதம் நிறைந்த வாசகர்கள், கேவலம் கவர்ச்சிப் படங்களிலும் பொழுது போக்கு அமிசங்களிலும் மயங்கிக்கிடக்கமாட்டார்கள் தரமான நம் நாட்டு இலக்கிய முயற்சிகளை ஊக்கப்படுத்துவதில், தேசியப் பற்றும் சுதந்திர வேட்கையும், சிந்தனைத் தாபமும் கொண்ட நம்நாட்டு வாசகர்கள் பின்னிற்கப்போவதில்லை, என்பதை நிலைநாட்டுவதுபோல அமைந்திருக்கிறது, பாடும் மீன்

முதல் இதழுக்குக் கிடைத்த அமோகமான வரவேற்பு. நம்நாட்டிலே தரமான வாசகர்கள் இல்லை என்பதும் — தரமான இலக்கியப் படைப்பாளிகள் தோன்றவில்லை என்பதும் வெறும் கட்டுக்கதை, என்பதை நிரூபித்துக்காட்டியிருக்கிறது பாடும்மீன்.

'பாடும்மீன் கிடைத்தது, படித்து மகிழ்ந்தேன். மகிழ்ச்சியைவிட விசனமே மிகுதி. நல்ல தரமான முயற்சிக்கு மட்டக்களப்பும் மற்றைய தமிழ்நாடும் என்ன உதவி செய்யப்போகின்றன? என்ற சிந்தனையில்! நான்கு கதைகள், மூன்று கட்டுரைகள், கவிதைகள் கொள்ளை மலிவுதான் நாற்பது சதத்திற்கு. ஈழத்தில் வெளியாகிக் கொண்டிருக்கும் மற்றைய மாதப்பத்திரிகைகளோடு ஒப்பிடுகையில் பெருமைப் படக்கூடியதாகவே இதழ் இருக்கிறது.'

பாடும்மீன் முதல் இதழைப் படித்துவிட்டு ஈழத்தின் பிரபல சிறுகதை — நாவல் ஆசிரியர் ஒருவர் இப்படி எழுதியிருக்கிறார். இவரைப் போலவே, பத்திரிகையின் தரம் பற்றி இலக்கிய ஆர்வம்மிக்க பல அன்பர்கள் நம்பிக்கையான, ஆர்வம் தரவல்ல அபிப்பிராயங்களை எழுதியுள்ளார்கள்.

'பாடும்மீன் வளர' என இதயசுத்தமாக வாழ்த்தி ரூபா இருநூறு தந்து பாடும்மீன் இதழ் ஒன்றை வாங்கிப் பெருமை செய்த செம்மனச் செல்வர்களும் நம்மத்தியில் இருக்கிறார்கள்.

கிராமம் கிராமமாகச் சென்று பாடும்மீனுக்கு சந்தா சேர்த்த வேளையில் நம்மை மலர்ந்த முகங்களோடு வரவேற்று உபசரித்து, பாடும்மீன் தொடர்ந்து பாட தங்கள் ஆசியைத் தெரிவித்து, சந்தாதாரர்களாகச் சேர்ந்துகொண்ட ஆயிரத்துக்கும் அதிகமான அன்பர்களை நினைந்து நாம் பெருமிதம் அடைகிறோம்.

ஈழத்தில் தலைசிறந்த எழுத்தாளர்களும், கவிஞர்களும், கலைஞர்களும் பாடும்மீன் வளரத் தம்மாலான உதவிகளையெல்லாம் செய்வதாக அன்போடு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்,

இத்தகைய உறுதி வாய்ந்த ஆதரவுகளைப் பயன்படுத்திப் பாடும்மீன் தனது புனிதமான இலட்சியப் பாதையில் தொடர்ந்து முன்னேறி ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியில் தன் பங்கையும் நிறைவேற்றும் என்பதை நமது வாசக நண்பர்கள் நிச்சயம் நம்பலாம். அந்த நம்பிக்கையோடு பாடும்மீன் இரண்டாவது பண்ணின் சுவையைத் துய்த்து உங்கள் மேலான அபிப்பிராயங்களை எங்களுக்கு எழுதுவீர்கள்.

வணக்கம்.

கூழுடையார் கூழளிப்பார் கோமக்கள் பொன்னளிப்பார்
ஆழி மணி முடிவேந்தர் அகனிலத்தை எமக்களிப்பர்
கீழ் மக்கள் வசையளிப்பார் கேள்வியிலார் நகையளிப்பார்
வாழ்வளிப்பர் மாமுனிவர் மறைமுதல்வன் வீடளிப்பான்.

—விபுலானந்த அடிகள்.

## கேள்வியும் பதிலும்

# சரஸ்வதி

செல்வன். எஸ். எம். சின்னலெவ்வை.
ஏருவூர் 1.

கேள்வி:— யாப்பு இலக்கணம் என்ருல் என்ன?

பதில்:— யாப்பு, பாட்டு, கவிதை, செய்யுள், பா என்பன ஒரு பொருட் சொற்கள். பாட்டின் உறுப்புகள், அமைப்பு, வடிவங்கள் பற்றிய இலட்சணங்களைக் கூறுவது யாப்பு இலக்கணம்.

கேள்வி:— இராமாயணம், கம்பராமாயணம் இரண்டிற்கும் இடையிலே நல்ல விளக்கம் தரக் கூடியதாக எது அமைந்துள்ளது?

பதில்:— இரண்டும் விளக்கமானவையே. இராமாயணம் என்பது, இராமகதையைக் கூறும் காவியம். வடமொழிப் புலவராகிய வால் மீகியே இதனைப் பாடியவர். இதே கதையை கம்பரும் பாடினுர். கம்பர் பாடிய இராமாயணம், கம்பராமாயணம் எனச் சிறப்பாக வழங்கப்படுகிறது.

வே. சிவலிங்கம்.
காரைதீவு. 3.

கேள்வி:— பாடும்மீன் எப்படியான இலக்கியங்களை வளர்க்க விரும்புகிறது?

பதில்:— உங்கள் கேள்வியைப் பார்த்தால் இலக்கியங்கள் பலவகை என்று கருதுவதாகத் தெரிகிறது. பாடும்மீன் வகை இலக்கியங்களை அல்ல, வாழும் இலக்கியத்தை வளர்க்க விரும்புகிறது.

கேள்வி:— இலக்கியம் இன்றேல் இலக்கணமில்லையா? இலக்கணமின்றேல் இலக்கியம் இல்லையா?

பதில்:— எள்ளில் இருந்து எண்ணெய் எடுக்கிருேம். எண்ணெயில் இருந்து எள்ளை எடுக்கலாமா? இலக்கியம் எள். இலக்கணம் எண்ணெய்.

ஏ. ஆபூபக்கர்.
சாய்ந்தமருது.

கேள்வி:— முழுக்கமுழுக்க ஆபாஸமாக எழுதுவதால் மட்டும் இலக்கிய உலகம் செழிக்குமா?

பதில்:— அந்த மனே வியாதிக்குப் பெயர் மனேதத்துவமாம்! அதனுல் இலக்கியம் செழிக்குமோ என்னவோ, அதை நம்பி இருப்பவர்களின் வயிறு பிழைக்கும்!

கேள்வி:— உருவகக் கதைகள் அனேகமாக வெளிவருகின்றதில்லையே. ஏன்?

பதில்:- உருவக் கதைகளா? வெளிவருகின்றனவே! சுதந்திரன் பத்திரிகையில் கவிதையாக வெளிவந்த 'குறிக்கோள்' தினகரன் இலக்கிய பரிசோதனைக் களத்தில் 'மரபு' என்ற பெயரில் உருவகக் கதையாக வந்து ஜமாய்த்ததே! படிக்கவில்லையா?

வே. யோகிதாஸ்.
இங்கினியாகல.

கேள்வி:— தொல்காப்பியர் காலத் தமிழுக்கும் இக்கால சினிமாத் தமிழுக்குமுள்ள வித்தியாசம் என்ன?

பதில்:— முன்னையது சங்கைக்குரிய தமிழ். பின்னையது 'ஜங்கி'க் குரிய தமிழ்!

எஸ். எம். றமளான்.
மருதமுனை.

கேள்வி:— இலக்கியம் என்ருல் எதனைக் குறிக்கும்?

பதில்:— செம்மை சான்ற சமுதாய வாழ்க்கை நெறியினூடாக, நித்யத்துவமான உண்மையைத் தேடி அடைய வழிகாட்டியாக, உணர்ச்சியில் வல்ல கலைஞர்களால் படைக்கப்படும் செஞ்சொல் உயிர்ச் சித்திரங்களைக் குறிக்கும்.

கேள்வி:— இலக்கியம் மனித வாழ்க்கையை எவ்வாறு பண்படுத்துகிறது?

பதில்:— இந்த இதழில் வெளியாகி இருக்கும், 'இலக்கியத்தில் சமநிலை' என்ற புலவர்மணி அவர்களின் கட்டுரையைப்படியுங்கள்.

கே. புஷ்பம்.
கொழும்பு. 2.

கேள்வி:— திருமண மான பின்பும் பல ஆண்கள் காதல் செய்வது ஏன்?

பதில்:— அவர்களை வேறு என்ன செய்யச் சொல்கிறீர்? திருமணம் செய்வது மனைவியோடு காதல் செய்யத்தானே!

கேள்வி:— ஒரு மனைவியிடம், கணவன் எல்லா ரகசியங்களையும் சொல்ல வேண்டுமா?

பதில்:— சொல்லலாம்... அவனுனுடைய கடந்தகால — நிகழ்கால — எதிர் காலக் காதல் கதைகள் தவிர!...

வி ஜெயகாந்தன்.
திருக்கோணமலை.

கேள்வி:— உலகிலுள்ள இலக்கிய நூல்களை யெல்லாம் தீயிட்டுக் கொளுத்தி விட்டு, எழுத்தாளர்களையும் சிறையில் பூட்டி வைத்தால் என்ன நடக்கும்?

பதில்:— உலகம் ஒரு 'அங்கொடை' யாகி விடுமே என்று அஞ்சுகிறீரா? அஞ்சற்க! தமிழ் நாட்டுச் சினிமா நடிகர்கள் கதை எழுதத் துவங்கி விட்டார்கள்!

பெ. மகேஸ்வரன்.
பதுளை.

கேள்வி:— 'பாடும் மீன்' இதழ் சினிமாவுக்கு ஆதரவு இல்லை என்று தெரிகிறது. ஆனல் கலை — இலக்கியத் திங்கள் இதழ் என்று போட்டிருக்கிறது. சினிமாவும் ஒரு கலைதானே, சினிமாவை ஏன் 'பாடும் மீன்' சேர்த்துக் கொள்ளக் கூடாது?

பதில்:— சினிமாவும் ஒரு கலைதான் அதற்காகச்... சினிமா இல்லாதது கலை இல்லையா? கலைகள் யாவும், சினிமாவுக்குள்ளே அடங்கி விடவில்லை.

ஏ. பி. முகம்மது, சாய்ந்தமருது.

கேள்வி:— மட்டக்களப்புத் தமிழகம் ஆசிரியரையும் அவரின் குடும்பத்தையும் சிலர் பந்திக் கிழுப்பது ஏன்?

பதில்:— இலங்கையில் மாத்திரமல்ல, இந்தியாவிலுங் கூட, கணவனும் மனைவியும் சாகித்தியப் பரிசு பெற்றுர்கள் என்று சரித்திரம் இல்லை. அத்தகைய புகழ் வாய்ந்த குடும்பத்தின் இலக்கியக் கைகளால் குட்டுப் பட்டால், தாங்களும் சாகித்தியப் பரிசு பெறலாமே என்ற நப்பாசையாக இருக்கக் கூடும்! அவர்கள் எங்கே குட்டப் போகிருர்கள்! நாய்கள் குரைத்துக் கொண்டே இருக்கின்றன. சந்திரன் சிரித்துக் கொண்டே நடக்கிருன்!

சி. வி. ராஜா.
யாழ்ப்பாணம்.

கேள்வி:— பலருடைய காதல் ஏன் தோல்வியில் முடிகிறது?

பதில்:— அது அப்படித்தான் முடிய வேண்டும் என்றிருப்பதால்!

கேள்வி:— காதலுக்குக் கண்ணில்லை என்பது உண்மையா?

பதில்:— அனுபவ சாலிகளைக் கேட்டுச் சொல்கிறேன்.

கு. செல்வமணி.
மட்டக்களப்பு.

கேள்வி:—கீழ் வகுப்புகளில் கெட்டிக்காரர்களாக விளங்கும் மாணவர்கள் கூட ஜீ: சி. ஈ. பரீட்சையில் தோற்கிருர்களே?


பதில்:— திரையிடப் படும் அத்தனை படங்களையும் பார்த்து தீர்த்து விட்டுப் பள்ளிப் பாடங்களையும் படிக்க அவர்களுக்கு நேரம் ஏது? அதுதான் களைத்துப் போகிருர்கள். *

கல்முனை நகரில்......

நயம், நம்பிக்கை, நாணயமுள்ள

ஸ்தாபனம்

# ரட்ணம் ஸ்ரோர்ஸ்.



எங்களிடம்:

சாய்ப்புச் சாமான்கள் பாடசாலை உபகரணங்கள், சினிமா பாட்டுப் புத்தகங்கள், மற்றும் தினசரி, வார, மாத இதழ்கள் அனைத்தும் கிடைக்கும்.

வினியோகஸ்தர் :

தினபதி, தந்தி, சுவீப்ரிக்கட். ராஜா லேகியம்.

வருக

எங்கள் விசேஷ தயாரிப்பான
நறுமணம் கமழும்

—: ரட்ணம் பீடாவை :—

ஒருமுறை சுவைத்துப்பாருங்கள்.


வருக

# ரட்ணம் ஸ்ரோர்ஸ்


240, வாடிவீட்டுத் தெரு,

கல்முனை.


# பாடும்மீன்



பாடும்மீன் முதலாவது இதழ் கல்முனை பாத்திமாக் கல்லூரி மண்டபத்தில் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது. விழா மண்டபத்திற்குச் செல்லும் வழியில் அமைக்கப்பட்ட பந்தலின் கீழ் பாடும்மீன் நிருவாகிகள்.




கல்முனை, தமிழ் இலக்கியக் கழகத் தலைவர் ச. சிவலிங்கம் B.Sc. அவர்கள், விழாவுக்கு வந்திருந்தவர்களை வரவேற்றுப் பேசுகிறார்.




பண்டித, புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை பாடும்மீன் வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கி பாடும்மீனை வாழ்த்தி தலைமையுரை நிகழ்த்துகின்றார்.


# வெளியீட்டு விழா.



பாடும்மீன் கௌரவ ஆசிரியர் நீலாவணன் முதல் இதழை வெளியிட்டு வெளியீட்டுரை நிகழ்த்துகின்றார்.



கௌரவ ஆசிரியரிடமிருந்து, டாக்டர் எம். முருகேசபிள்ளை ரூபா இருநூறு கொடுத்து முதல் பிரதியை வாங்கி பாடும் மீனை வாழ்த்துகின்றார்.



கல்முனை தமிழ் இலக்கியக் கழகச் செயலாளர் கவிஞர் மு. சடாட்சரன் விழாவின் இறுதியில் நன்றியுரை கூறுகின்றார்.

# வகுப்பிலே நடந்தது ...

ஆரம்பப் பள்ளி தொடக்கம்,

ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஊடாக,
பல்கலைக் கழகம் வரை,

வகுப்பறைகளில்

எத்தனையோ சுவையான நிகழ்ச்சிகள்
நடைபெறுகின்றன.

சரியாகச் சொன்னால்,

அவைகளே

அலுப்பும் அலுவலும்

நிறைந்த நமது வாழ்விலே

பசுமையான நினைவுகளைத்

தூண்டுவன.

அத்தகைய நிகழ்ச்சிகள்

இப்பகுதியில் இடம்பெறும்.

மாணவர்கள்,

ஆசிரியர்கள்,

தமது மாணவ ஆசிரிய வாழ்க்கையை
இன்றும் மறக்காதவர் -

யாவருமே

இதில் கலந்து கொள்ளலாம்.

*முக்கிய குறிப்பு :-*

பிரசுரத்திற்குத் தகுதியானதுஎன ஏற்றுக்கொள்ளப்படும் 'வகுப்பிலே நடந்தது' சம்பவத்திற்கு தகுந்த சன்மானம் அளிக்கப்படும்.

## *திருத்தமோ திருத்தம்!*

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரியில் நடந்த சம்பவம் இது:

அங்கு நடுத்தர வயதைக் கடந்த பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர் ஒருவர் கடமை பார்த்துவந்தார். அவர் தமிழ் சிறிதும் தெரியாத சிங்களவர்.

ஒருமுறை பரீட்சை நடந்தது. 7ம் வகுப்பின் ஆங்கில மொழி விடைத் தாள்களுக்குப் பதிலாக, தவறுதலாக அவரிடம் தமிழ்மொழி விடைத்தாள் கொடுக்கப்பட்டுவிட்டது.

தவறை அடுத்தநாள் உணர்ந்த பரீட்சைப் பொறுப்பாசிரியர், அந்த ஆங்கில ஆசிரியரிடம் ஓடினார்.

ஆங்கில ஆசிரியரோ அன்று லீவு எடுத்திருந்தார். அந்த வாரம் முழுவதுமே அவர் லீவுதான்.
கடைசியாக அடுத்த வாரம் அந்த ஆங்கில ஆசிரியர் தரிசனம் கொடுத்தார்.

பரீட்சைப் பொறுப்பாசிரியர் அவருக்குக் கொடுக்கவேண்டிய, 7ம் வகுப்பு ஆங்கில விடைத்தாள்களுடன் அவரிடம் போய் ஒரு போடு போடும் நோக்கமாக,

''என்ன மிஸ்டர்...... தாங்கள் 7ம் வகுப்பு ஆங்கில விடைத்தாள்களைத் திருத்திவிட்டீரா ?'' என்று கேட்டார்.

''ஆம், ஆம் திருத்திவிட்டேன்! புள்ளிகளும் பதிவாயிற்று இந்தாருங்கள்'' என்று விடைத்தாள்களை மேசையில் தூக்கிப்போட்டார்!

பரீட்சைப் பொறுப்பாசிரியர் திகைத்துப்போனார். அந்த விடைத்தாள்களின் மேலுக்கு சிவத்த நிறப் பென்சிலால் புள்ளிகளும் இடப்பட்டிருந்தன.

''இது எப்படி முடியும்? தாங்கள் திருத்தவேண்டிய 7ம் வகுப்பு ஆங்

*[19ம் பக்கம் பார்க்க.]*

மருதூர்க் கொத்தன் ★

# மூக்குத்தி

—(★)—

அந்தக் கலையை வாழ்விப்பதற்கான யோக்கிய தாம்சங்கள் சகலமும் அவளிடம் சம்பூரணமாக இருக்கின்றன.

பரம்பரை வழியில் பசையற்ற கணவனைக் கட்டிக் கொண்டவள். பிதுர் சம்பத்தென்னும் காந்த சக்தியின் மையால் பசையுள்ள கணவன் என்ற இரும்பைக் கவர அவளால் முடியாது போய்விட்டது.

கணவனோ, தட்டிச் சுருட்ட வக்கற்ற கோழைத் தனத்தாலும் ஏய்த்துப் பிழைக்க லாயக்கற்ற மந்தமதியாலும், குறுக்கு வழிகளைக் கைக்கொள்ளும் சாதுர்ய சூனியத்தாலும் வார்க்கப்பட்ட தூய்மைவாதி. கிராமத்தவர் பாஷையில். 'ஈமானிஸ்லாம்' படித்தவன். ஏவல் விலக்கல் தெரிந்தவன். நடந்த இடத்துப் புல்லுஞ் சாகாத 'சாலிஹான' பிள்ளை.

இவற்றோடு குணசாலியான அந்தக் கணவன், சொர்க்கத்தின் சப்ரமஞ்சத்தையோ, நரகத்தின் சீலம்பாயையோ நிரப்பச் சென்றுவிட்டதற்கான அடையாள விளம்பரமாக வெள்ளி மணிகட்டாத வெறுங்கழுத்துக்காரி: அடுப்பங் கரியும், தலையில் தடவும் தைலக்காவியும் படிந்து பேத முற்றுங்கூட வெள்ளைச் சேலையென்னும் நாமமிழக்காத புடவை கட்டியவள் என்ற காரணமுஞ் சேர்ந்து விட்டிருக்கின்ற படியினால், மரியம்பீபி பாயிழைக்குங் கலையை வாழ்விக்கப் பிறந்தவள்தான்.

மரியம்பீபி பாயிழைக்கின்றாள். அந்தக் கலையில் அவள்,- பழகிப் பழகிப்பட்ட இயந்திரம்!

'முதலைக்குட்டிக்கு நீந்தக் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை: என்ற பழமொழிக்குச் சித்தி நபீஸா நிரூபணமாயமைந்தவள்.

செம்மலர்கள் திரண்டு, அவயவங்கள் வளர்ந்து உயிர்த்த சிற்பமாக, தண்ணெழில் சிந்திய பச்சிளங் குழவியாக தனது மடியை அலங்கரித்த அந்தக் காலத்தில்— தலைப்பிள்ளை பெற்றும் மணக்கோலம் மாறாத அவ்வின்பப் பொழுதில் தன்மகளையிட்டு அவளின் எதிர்காலத்தையிட்டு, மரியம் பீவி எவ்வளவு கனவுகளைக் கண்டிருக்கிறாள்; கற்பனைகளில் சஞ்சரித்திருக்கிறாள்! அவளது வானவிற் கற்பனைகளில் மிகச்சிறு துளியாகவாவது, தனது மகள், பொங்குமிளமைக் குமரிப் பராயத்தில், தனக்கு அருகருகாயிருந்து பாய்முடைவாள் என்பது இடம்பெற்றிருக்கவில்லை.

கற்பனைகளில் கனவுகளிற் கண்டவை சூனியமாயும், கற்பனையையும் கடந்து நின்றவை நிதர்சனமாயும் சம்பவிப்பதுதான் எதிர்காலத்தின் நிச்சயம்.

இதை உற்றுணர, அன்று அவளுக்கு அனுபவம் பற்றாதிருந்தது. அவளோ, கொழு கொம்மைச் சுற்றிப் பூத்துக் குலுங்கி, இன்ப மதர்ப்பில் மயங்கி, வாழ்க்கையின் கரடு முரடுகளை அறிய முடியாதிருந்த இளங்கொடி.

தாய்க்குப் பக்கத்திலிருந்து மகள் நபீஸாவுந்தான் பாயிழைக்கிறாள். அவள் சரியாகத் தொழில்பட ஆரம்பித்துள்ள புது யந்திரம் அவளது செம்பயற்றம் விரல்கள் பாய் முடைவதில் எவ்வளவு இலாவகம்! எவ்வளவு நளினம்; எவ்வளவு விரைவு!

பன்னோடு பன்னிணைந்துதானே பாய்! நபீஸாவும் பன்னோடு பன்னிணைக்கிறாள். அந்த இணைப்பு— மகளை மணவறையிற் காணும் ஜீவன் முக்திக்காக சதத்தோடு சதஞ் சேர்க்கும் தாய்க்காரியின் கையை ஆற்றும் பேருதவி.

குப்பை மடுவில் நட்ட. கரும் புத்தளிர் தென்றலில் அலைப்புறும் லாவகத்தில். அசைந்தசைந்து ஆண்வாடை இல்லையென்ற யதேச்சையுடன், சித்தி நபீஸா போன்ற பருவம் கண்விழித்த கட்டழகிகள் பாயிழைக்கும் பேரழகை, தட்டுவேலியில் ஒன்றி நின்று பருகக் கிடைத்த சந்தர்ப்பத்தை பரீத் லேசிலே இழக்க விரும்புவானா? வாய்ப்புக் கிட்டும் போதெல்லாம். குமரிகளின் அங்கலட்சணங்களை அளந்து சுவைத்துப் பரவச மடைவதுதான் வாலிப லட்சணம் என்ற மனப் போக்குக் கொண்டவனல்லவா அவன் வீடு வீடாகச் சென்று பாய்வாங்குந் தொழில் அப்படியான சந்தர்ப்பங்களை மாரிபோல் வழங்கவுஞ் செய்தது.

பராயப் பட்டதற்குப் பிறகு, நபீஸாவை நேருக்கு நேர் காணத் துடித்த அவனது அவா நிறைவேற இன்றுதான் வாய்ப்புக் கிட்டியிருக்கிறது. அதுவும் அலங்கார பூஷிதமற்று இயற்கையாகவே துலங்கும் பேரெழிலைச் சுயேச்சையான கோலத்தில் தரிசிக்கக் கிடைத்திருக்கிறது. கிடைக்காமற் கிடைத்த இந்தப் பாக்கியத்தை எண்ண எண்ண அவனுள்ளே மகிழ்ச்சி கரை புரள்கிறது. வழக்கத்துக்குமாறாக பாய்வாங்க வரும் வேளையை மாற்றிய தனது யுக்தி, திட்டமிட்டபடி பலிதமானதை நினைக்க அந்த மகிழ்ச்சி அணை உடைத்த வெள்ள மாகவே பொங்குகிறது.

நபீஸா முன்னாலிருந்த தண்ணீர்க் கோப்பையில் கை நனைத்துப் பன்னிலே தெளிக்கிறாள்—பரீதோ, வரங் கேட்கும் யாசக உணர்வு வதனத்தில் விரிய நெஞ்சைத் தடவிவிடுகின்றான்.

நீர் தெளித்த கையோடு. அடுத்த வழியை எடுக்க மாறியிருந்து பாயை இழுத்துவிட்டுப் பாரமேற்றிய கல்லை மறுபக்கம் மாற்றி வைத்துவிட்டு நிமிர்கிறாள். நிமிர்ந்தவள் வேலியிலே முளைத்திருந்த பரீதின் முகத்தைக் கண்டாளோ இல்லையோ! மின்சாரம் பாய்ந்த பாவனையில், அதிர்வு உடலெங்கும் பரவ, பாயிலே கிடந்த முன்றானையை வாரியெடுத்துச் சட்டென்று உள்ளே பாய்ந்து விடுகிறாள். வாயிலே போட்டு நனைத்த 'சொக்லட்' கரைந்து விட்டதே என்று கைசேதப்படும் குழந்தையின் ஏக்கம் பரீதுக்கு. அவனைப் பொறுத்தவரை முன்றானையை மாத்திரம் அவள் வாரியெடுக்கவில்லை; அந்த எடுப்போடு கண்கொண்ட விருந்தையுமல்லவா வாரிச் சென்று விட்டாள்.

பாய் பின்னுவதிலே வசமாகியிருந்த மரியம் பீவி, மகளின் பாய்ச்சலால் உலுப்பப்பட்டு முக்காட்டைச் சரிசெய்த வண்ணம் தலை நிமிர்கிறாள். நல்லகாலம்; அவன் நீறாகி விடவில்லை?

''அவசரமாகப் பாய்தேவை, முடிஞ்சிற்றா எண்டு பார்க்க வந்தன்.''

பரீதின் வாயிலிருந்து வார்த்தைகள் இடறி உதிர்கின்றன. குரலிலே சுருதி பேதலித்த ஓசையின் அலறல்! சொன்ன வேகத்தோடு திரும்பியவன்.

''பாய் முடியல்லப் போல இருக்கு சாயந்தரமாக வாறன்''

என்று கூறி முடித்தானோ இல்லையோ, இடத்தைக் காலி செய்கிறான்.

பெண்களைத் தனகும் துணிச்சலும், எதற்கும் அஞ்சாத ஆண்மையும் எங்கே? இந்த வினா அவன் நெஞ்ச விசும்பில் கறங்காட்டமாடுகிறது. நபீஸாவின் வசீகரத்தின் முன்னும், நெஞ்சைக் குடைந்து வினவிய மரியம் பீவியின் பார்வையின் முன்னும், தனது ஆண்மையும் துணிவும் 'மில்டன்' பட்டமசியாகக் கரைந்ததை நினைக்க என்னவோ போலிருக்கிறது, பரீதுக்கு. அவன் காணாத கட்டழகிகளா! கதைத்துச் சல்லாபிக்காத கன்னிகளா! நபீஸாவின் அழகிலே மயக்குக்குப் பதிலாக

மென்மையும், உள்ளத்தின் பிரதி பலிப்பான தூய்மையும் இருப்பதை அவன் தோல்வி உணர்த்தி விட்டதா?

பெண்மையின் தூய அழகு, துடுக்கான வாலிபத்தின் ஆபாச உணர்வுகளையும் நெறிப்படுத்த வல்லதா?

இந்த வினு அவன் நெஞ்சப் பறையில் மெல்ல ஒலிக்கவே ஒலிக்கிறது!

தனது வருகைக்கு கற்பித்த பொருத்தமான காரணத்தை யெண்ணி அலேபாயும் நெஞ்சைத் தேற்றுகிருன். வாழ்ந்து கெட்டு, வாழ்க்கை அனுபவங்களை நுகர்ந்து சலித்த மரியத்தின் நெஞ்சம், மஞ்சள் வெயில் காந்தும் மாலேயிற்தான் பாய் தலேக்கட்டப் படும் என்பது தெரிந்திருந்தும் மதியத்தில் வந்து போகும் பரீதின் அந்தரங்கத்தைக் காரண காரியங்களோடு தொடர்புறுத்தி ஆராய்கிறது, என்பதைப்பாவம், அவன் அறியவில்லே!

பரீதின் மனம் எதையோ ஆழமாகத் தேடுகிறது. தேட்டத்தின் முடிவாய், வலம்புரிச்சங்கோடு நீர் மட்டத்தை வந்தடைந்த சுழியோடியின் மகிழ்ச்சிப் பிரகாசம் அவன் வதனத்தில் குறிதீட்டுகிறது.

மரியத்தின் குடிசையான தொழிற்சாலேயின் தினசரி உற்பத்தியான இரு பாய்களுக்கும் தனது வீட்டு, மூன்று ரூபாய்களை ஐந்தாகவும், அசந்தர்ப்பத்தில் ஆறுகவும் விருத்திபண்ணும் ஆற்றலிருக்கிறது என்றவகையிலேயே கொண்டாடப்பட்டுவரும் உறவைப் புதுப்பித்து அர்த்தமுள்ளதாக்க முடியாதா? என்று நினேக்கையில் நடக்குந் தெருவும், சுற்றுச் சூழலும் அவனுக்கு ஆனந்த மயமாகக் காட்சியளிக்கின்றன.

வீட்டுக்கு வந்த மகனின் குஷியைக் கண்ட தாய்க்கு எதுவுமே பிடிபடவில்லே. அவள் கன்னத்தை ஒரு தட்டுத் தட்டி, நாடியைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கிவிடுகிருன். கையுணுவுதலாகக் கொண்டு வந்த பூவரசந் தண்டிற் சிறுதுண்டைக் கிள்ளி, தாயின் மூக்கிலே, மூக்குத்தி அணிந்த தடத்திலே பொருத்திவிட்டுக் கண்ணுடிக்கு முன்னுலே போய் நிற்கிருன். நெஞ்சை முன்னிறுத்திய கம்பீரத்தோடு, தனது பிரதி பிம்பத்தை ஏற இறங்கப் பார்த்துப் பெருமைப்பட்டுக்கொண்டான்.

பரீதோ தாய்க்கொரு பிள்ளே. உள்ள இடத்துப் பிள்ளேயென்ருல் செல்லத்துக்குக் கேட்கவா வேண்டும்? தாய் செய்னம்பு, கூத்துப் பொம்மையென்ருல் அவன் அதை ஆட்டுவிப்பவன்! அவன் சேட்டைகளும், குறும்புகளும் மற்றவர்களுக்குச் சகிக்க முடியாதவை.

'கைம் பெண்சாதி வளர்த்த களிசடை,
அக்கம் பக்கத்தவர்களின் அவனேப் பற்றிய விமரிசனம்.

செய்னம்புவும் கைம்பெண் சாதிதான். பாயிழைத்தோ, நூலிழைத்தோதான் சீவிக்கவேண்டுமென்ற அளவுக்கு அவள் கணவன் விட்டுவைக்கவில்லே. குச்சவெளிக் காரியான அவளது மாமியார், தனது நில புலன்களேயெல்லாம் காசாக்கிக் கொண்டுவந்து மகனேயும் மருமகளேயும் சீருஞ் சிறப்போடும் வாழவைத்துவிட்டுச் செல்லவேண்டிய இடத்துக்குச் சென்று விட்டாள்.

என்னதான் சொத்துச் சுகமிருந்தாலும்,— ஆண்பிள்ளேக்கு ஒரு தொழில் முயற்சி வேண்டுந்தானே. தார் வீதியில் வீட்டோடு சேர்த்துக் கடையுமிருந்த படியால் வியாபாரம் மிகச்சாத்தியம். செய்னம்பு, கணவன் செய்த பாய் வியாபாரத்தை மகனுக்குப் பழக்கினுள். வீடு வீடாகச் சென்று பாய் வாங்கவேண்டியிருந்ததால், அத்தொழில் பரீதின் பெருவிருப்பத்துக் குரியதாயமைந்ததில் வியப்பெதுவுமில்லே.

வாசல் அடுப்பில் ஏற்றப்பட்டிருக்கும் பெரும் பானையில் நீர் குமிழிவிட்டுக் கொதிக்கிறது. மூடி திறந்த சோடாப்புட்டியில் சோடா நீர் பொங்குவது போல, பானையில் நீர் மலமலத்துக் கொதிக்கிறது. மரியம் கோழிச் சாயத்தூளைக் கொதிநீரிலே கொட்டுகிறாள். ஒரு கணப் பொழுதுக்குள் எவ்வளவு பேதலிப்பு. வெண்ணுரை செந்நுரையாகி விட்டிருக்கிறது.

அதிஷ்டத்தின் அல்லது துரதிஷ்டத்தின் பாதிப்பால் நொடிக்கும் நேரத்துக்குள்மனித வாழ்க்கையும் இப்படித்தான் பேதலிக்கின்றதோ?

நபீஸா, கீலங்கீலமாகக் கிழித்த பன்னைப் பிடியளவு பிடித்துக் கட்டுக் கட்டாகக் கட்டுகிறாள். மரியம் பன்கட்டுகளை ஒவ்வொன்றாகப் பானையில் விட்டுக் கணையால் புரட்டி வெளியே எடுக்கிறாள். சற்றைக்கு முன் வெளிறுண்ட மஞ்சளாயிருந்த பன் சுரீரென்று சிவப்பேறிவிட்டது.

''என்னகா மச்சி எந்த நேரமும் பாயும் பன்னுந்தானு''

பரீதின் தாய் செய்னம்புவின் குரல். அவளின் குரல் கேட்டு நபீஸாவும், மரியமும் ஏககாலத்திற் தலை நிமிர்த்துகின்றனர். நபீஸா எழுந்து குடிசைப்பக்கமாக நகர்கிறாள்.

''படைச்சவன், பன்னைப் படைச்சதுமில்லாம எங்களையுஞ் சேத்துப் படைச்சுப் போட்டானே!''

என்று கூறிவிட்டு,

''வாங்க மச்சி, மனே மாமிக்குப் பாய்போடு''

என்று சொல்வதற்குள் நபீஸா குடிசைத் திண்ணையில் பாய் விரித்து விடுகிறாள்.

''இருங்க வாருங்கமாமி!''

பாய வாசலுக்கு கொண்டா மனே; காத்துருகத்தா இரிக்கும்!''

இருந்து தேனீர் பருகி தாம்பூலந் தரித்த முடிவில் செய்னம்பு நபீஸாவை அழைத்துத் தன்னருகில் இருக்கச் செய்கிறாள்.

போன வாரத்துக்கு முந்தின வாரம் நபீஸாவின் மூக்கைக் குத்திக் கம்பி மாட்டி விட்டுப் போயிருந்தாள், செய்னம்பு. சென்ற கிழமை வந்து கம்பியைக் கழற்றிக் சுள்ளி பாய்ச்சிவிட்டுப் போனவள் மறுபடி இப்பொழுதுதான் வந்திருக்கின்றாள்.

காய்ந்து விட்டிருக்கும் அந்தத் தடத்தையே கூர்ந்து நோக்கிய போது செய்னம்புவின் வதனத்தில் மகிழ்ச்சி கலை பரப்புகிறது. நபீஸாவுக்கோ நாணம் தலை குனிய வைக்கிறது.

செய்னம்பு மடியை அவிழ்த்து அதிலிருந்து சிறு வல்லுகமொன்றை எடுத்துப் பிரித்து.. ... அதனுள்ளிருந்து அவள் வெளியே எடுத்தது மாற்றுக் குறையாத தகதக தங்கத்தாற் செய்த மூக்குத்தி! மூக்குத்தியின் மேற்பூவின் மத்தியிலும், தொங்கும் கீழ்ப்பூவிலும் பதித்திருப்பவையோ இளஞ் சிகப்பு வர்ண இரத்தினக் கற்கள்.

செய்னம்பு, நபிஸாவின் மூக்குத் தொளையிலே மாட்டியிருந்த குச்சியைக் கழற்றி எறிந்து விட்டு அந்த இடத்தில் மூக்குத்தியைப் பொருத்துகையில் ...... அப்பப்பா: பெண்மைக்குத்தான் எவ்வளவு நாணம்! நாணமென்ற அணிகலன், பெண்மையின் மாற்றை மட்டுல்ல சௌந்தர்யத்தையுந்தான் எவ்வளவுக்கு உயர்த்துகிறது!

நபிஸாவின் தலை பழப்பாக்குக் குலையாகத் தொங்குகிறது. செய்னம்புவின் விழிக்கோடுகளில் இரு பளிங்கிப் புழுக்கள் ஊர்கின்றன. மரியம் பீவியின் நெஞ்சம் 'அல்ஹம்து லில்லாஹ்—அல்லாஹ்வுக்கே புகழ் என்ற சொற்றொடரை ஆனந்தப் பரவசத்துடன் மெல்லுகிறது.

''மனே! என்ன அவருக்குக் கலியாணம் பேசின நேரத்தில என்ர மாமியா இந்த மூக்குத்திய எனக்குப் போடக்குள்ள இப்படித் தான் நானும் வெக்கப்பட்டு ஒஞ் சினன். அவக்கு அவட மாமியா போட்ட மூக்குத்தியாம், இது. நம் மட ஊரிலே மூக்குத்தி போடுற வழக்கமும் இல்ல. இந்த ஊராளு கள் என்னென்ன வசையெல்லாம் சொல்லுவாளுகளோ? எண்டு நான் பயப்புடாத பயமா? என்னவந்தா லும் சரியெண்டு என் மாமியாட விருப்பத்த நான் ஏத்துக்கிட்டன். ஒண்டுக்கும் யோசிக்காத மகள். போகப் போக எல்லாம் சரியாப் போகும்.''

நெஞ்சுருக்கத்தோடு சொல்லி முடித்த செய்னம்பு, நபீஸாவின் நாடியைத் தாங்கி நிமிர்த்துகிருள். குவளைகளிரண்டிலும் பனிப்பது தேனு? ஆமாம், இன்பக் கனவின் கம்மலில் பூரித்த கன்னிமையின் ஆனந்தப் பிழிவு!

* * *

வேலியில் நிற்கும் முள்முரு ங்கை, வாசலில் சுக நிழல் பரப்பிய வேம்பு, மூலையில் நிற்கும் ஒலியை, எல்லாம் இலை உதிர்த்து தசையற்ற எலும்புக் கூடுபோல வெறிச் சோடிப்போய் நிற்கின்றன. கச் சான் விளைத்த கொடுமைக்கு கண் கண்ட சாட்சியங்களாக அவை நிற் கின்றன. அவை வசந்தத்தின் வரு கைக்கு கட்டியமுங் கூறுகின்றன வா? இலை உதிர்த்த அம்மரங்களில் என்ன கவர்ச்சியைக் கண்டு விட் டாளோ? வாசலில் கால் நீட்டியி ருந்து பன் வாட்டும் நபீஸாவின் கண்கள் அந்த மரங்களைத்தான் வெறிக்கின்றன.

பெண்மையைப் பூமிக்கு உரு வகித்த மதிவல்லாரை மரியாதைப் படுத்தத்தான் வேண்டும்! கரு நீலக்கடல், தண்புனல் ஆறு பூம் பொழிற்சோலை — வான் அளக்கும் மலை — இன்ன பிறவற்றை மற்ற வர் பார்வைக்குக் காட்டிக் கவின் பெறக் காட்சி தருகின்ற பூமி, கனன்று கொண்டிருக்கும் அக்கி னிக் குழம்பையும் தன்னுள்ளே மூடி மறைத்து வைத்திருக்கிறதே!

தீக்குழம்புக்கு நிகரான வேக் காட்டை, நபிஸாவும் தன் நெஞ்சி னுள் பூட்டிவைக்கத்தான் வைத்தி ருக்கிருள். பூமி — எவ்வளவு தான் பூசி மினுக்கினுலும். அதனகத்தே குமுறும் தீக்குழம்பின் வெம்மை பாலைவனமாகக் கோடிகாட்ட வில்லையா? நபீஸாவின் மனவேக் காடும், அவளையுமறியாமல் அவள் வதனத்தில் விலாசமிட்டுத்தான் இருக்கிறது.

ஆபரணத்தின் மத்தியில் வைத்து இழைக்கப்படும் வைரக் கல்போல, அந்தக்கல் தங்கத்தின் மாற்றை உயர்த்திக் காட்டுவது போல, நபீஸாவின் நாசியிலே தொங்கி அவள் கொள்ளையழகை மேலும் மிகைப்படுத்திய மூக்குத்தி இப்போது இல்லை. அது தொங்கிய தடம் வெள்ளைத் திரையில் விழுந்த கரும்புள்ளி போல பளிச் சென்று துலங்குகின்றது.

பட்டுப்போன பாவனையிற் தோன்றும் முள்முருங்கையை வெறித்தவளாய், பன்வாட்டிக் கொண்டிருக்கின்ற நபீஸா, பரீதின் சிறிய தாய்க்காரி ஆசுரு வந்ததை யோ? அவள் நின்ற இடத்தில் நின்றவாறே வீடுவளவையெல்லாம் துருவிப்பார்த்ததையோ? அவ தானிக்கவில்லை. அவள் சோலி அவ ளுக்கு!

''எங்கமனே உம்மாவைக் காணல்ல போலிருக்கி''

ஆசுருவின் குரல் கேட்டுத்தான் மனம் எங்கெல்லாமோ அலைந்த ஈர்ப்பில் சுற்றுச் சூழலை மறந்து விட்ட தன்நிலை நபீசாவுக்குப் புரிய வந்தது.

''ஆ......! ஆரது?''

என்றவாறே தலைநிமிர்த்துகி ருள்.

''ஆரது......? சின்ன மாமியா? பன்வாட்டின பராக்கில நீங்க வந்தத நான் காணல்ல. உம்மா வெளியே போயிருக்காங்க.''

எழுந்து திண்ணையிலே பாய் போடுகிறுள்.

''இருக்க வாங்க மாமி''

பாயிலமர்ந்த ஆசருவுக்கு வட்டாவும், படிக்கமும் வைத்துவிட்டு, அடுப்படியில் அமர்கிருள், நபீஸா. தாய் மரியமும் வந்து விடுகிறுள்.

''காலமில்லாக்காலம்
காக்கா பொண்டி வந்திருக்கா.
பாவக் கொடியும்
பறட்டை பத்திப்
போச்சுதுகா......''

திண்ணையிலே ஆசருவைக் கண்ட மரியம் பீவிக்கு ஏற்பட்ட உணர்ச்சி வேகத்தில் அவள் வாய், ஒரு கவிதையே பாடித்தள்ளி விட்டது.

''நல்லவடிவாப் பாத்தி புடிச்சி எருப்போட்டுத் தண்ணி ஊத்தினு பறட்டக் கொடியும் தளைக்குந் தானகா......''

''என்னத்தச் செய்தாலும் தளைக்கக் கூடியதுதானே தளைக்கும்?''

நபீஸா தேனீர் ஊற்றி இருவருக்கும் கொடுக்கிறுள். தேனீரைப் பருகிக் கொண்டே ஆசுரு தொடர்கிறுள்.

''சும்மாயிருந்த புள்ளர மூக்கக் குத்தி, மூக்குத்தியும் போட்டவளுக்கு அதக்களத்தவும் மனம் வந்திற்றே — எங்க தாத்தா இருக்காவே மச்சி, அவட மண்டைக்க ஒண்டுமே கிடையாது. மகன் ஆட்டுருப்போல யெல்லாம் ஆடுவா. மனிசன மனிசன் அறிய வேணும். ஆத்துமீனப் புளியங்காய் தான் அறிய வேணுமெண்டு சும்மாவா சொன்னுங்க. உம்மாவும் மகனும் இப்ப நல்ல பாடம் படிச்சிற்ருங்க.''

ஆசுருவின் பேச்சு என்னமோ மரியத்துக்கு சுவாரஸ்யப்படவில்லே வீடு தேடி வந்தவளோடு முகங்கோண நடக்கவும் முடியவில்லே. அவள் பேச்சை வாங்கியும் வாங்காமலும் தன் பாட்டுக்கிருக்கிறுள். நபீஸாவோ பன்வாட்டுகிறுள். ஆசுருவின் பேச்சுத் தொடர்கிறது.

''எல்லாத் தொளுப்புறியளும் என்ட புள்ளேயப்போல குணசாலியா இருப்பாளுகளா? அல்லா பாத்து என்புள்ளர தலேயிலதான் நல்ல எழுத்து எழுதியிருக்காணுக்கும்! புள்ளே...! இங்கவா மனே! ஒங்க மாமி இந்த மூக்குத்திய ஒனக்குப் போட்டுட்டு வரச் சொன்ணு. அவக்கு வர வெக்கமாயிருக்காம்.''

மரியத்தின் நாவும் எதையோ சொல்ல உன்னிப் பின் வாங்குகிறது. ஆசுரு மேலும் தொடர்கிருள்.

''தங்க முடியத் தலேயில போட்டாத்தானே முடிக்கும் அழகு!''

என்று சொல்லிக் கொண்டே மூக்குத்தியைச் சுற்றியிருந்த தாளோடு கீழேவைக்கிருள் ஆசுரு. மரியமும் தனது மடியை அவிழ்த்து தட்டானிடம் வாங்கி வந்த கல்பதியாத கலப்புத்தங்க மூக்குத்தியை, சிவப்புக்கல் பதித்த சுத்தத் தங்க மூக்குத்திக்குப் பக்கத்திலே வைக்கிருள்.

ஊரிலே இல்லாத வழக்கந்தான் விரும்பியோ விரும்பாமலோ போட்டாயிற்று. சூட்டியவளே கழற்றிய போது ஏற்பட்ட வெறுமை, கழற்றியவளுக்கு அழகாக இருந்ததோ என்னவோ பெற்றவளுக்குப் பெருங் குறையாகவும் அவமானமாகவும் இருந்தது. ஏழை என்பதற்காகத் தன்மானம் அற்றுப் போய்விடுமா? தனது நெஞ்சை அரித்த குறையை நிவர்த்திக்க மரியத்தின் பெற்ற மனம் கொண்ட சங்கற்பம் பலித்ததில் அவளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி!

மண்ணெடுத்த குழியை மண்ணைக் கொண்டும் நிரப்பலாம்! குப்பையைக் கொட்டியும் நிரப்பலாம்!

மரியம் வாழ்ந்து கெட்டவள். ஆத்திரத்தில் உணர்ச்சி வசப்பட்டு ஒரு முடிவுக்கு வரக்கூடாது, என்பதைத் தெரிந்து வைத்திருப்பவள்! பிழை செய்வதும் மனித இயல்பு; செய்த பிழையை எண்ணித் திருந்த முயல்வதைத் தடுக்கக் கூடாது; என்பதையும் அறிந்து வைத்திருப்பவள். தலையாலே வந்த சீதேவியை காலாலே தட்டி விட்ட பாவி நீதானே! என்று நாளையொரு சந்தர்ப்பத்தில் தன் மகளே, தன்மேல் பழிசுமத்தவுங் கூடும்! என்ற எச்சரிக்கையையும் தன்னுள் நிறுவிக் கொண்டாள். அவள் சொல்லுகிறாள்.

''மகள்! நீமுந்திப் போட்டிருந்த அழகான, பெறுமானமான மூக்குத்திய ஒண்ட இளயமாமி கொண்டாந்திருக்கா. நானும் என்ர தகுதிக்கித் தக்கணதாக ஒண்ட வாங்கி வந்திரிக்கன். இதில விரும்பியதப் போட்டுக்க மகள். ஆருக்காகவும் ஒண்ட மனசுக்கு ரெண்டகம் செய்யாதே''

நபீஸாவுக்கோ தர்ம சங்கடமான நிலை. அவள் தலைமேல் சுமத்தப்பட்டிருக்கும் சுமையின் பளு சாமான்யமன்று! அவளது எதிர்கால வாழ்க்கையைத் தெரிவு செய்யும் பொறுப்பு! மற்றவர்களுக்குப் பங்கில்லாத வகையில் — மற்றவர்களைக் குறைசொல்ல இடமில்லாத வகையில், அவள் கையிலேயே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

நபீஸா சிந்திக்கத் தெரிந்தவள்! சீர்தூக்கத் தெரிந்தவள்! சிந்தனையின் ஆழமான சுவடுகள், பங்கய வதனத்தில் முத்திரை பதிக்கின்றன! சிந்தனையில் தெளிந்த பாவனை பிரகாசிக்கின்றது!

தலையிலே முக்காட்டைப் போட்டுக் கொண்டு, அடக்க ஒடுக்கமாக வந்து மனதுக்குள்ளே ''பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹ்ஹீம்— அருளும் அன்பும் மிக்க ஆண்டவனின் பெயர் சொல்லி ஆரம்பிக்கின்றேன்'' என்று கூறி தன் மனம் விழைந்ததை வலக்கையினல் எடுக்கின்றாள்.

சிவப்புக்கல் பதித்த சுத்தத் தங்க மூக்குத்தி பாயிலே பரிதாபமாகக் கிடக்கிறது. *

## எனக்குப் பிடித்த கருத்து

'எனக்குப் பிடித்த கருத்து'என்னும் இப்பகுதிக்கு ஒவ்வொருவரும் தமக்குப் பிடித்த கருத்துக்களை எழுதி அனுப்பலாம். ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க உதவும் கருத்துக்களே எதிர்பார்க்கப்படுகின்றன.

## திருத்தமோ திருத்தம்........

[12ம் பக்கத் தொடர்ச்சி]

கில விடைத்தாள்கள் இதோஉள்ளதே, தங்களுக்குத் தவறுதலாக தமிழ்மொழி விடைத்தாள்கள் அல்லவா தரப்பட்டிருந்தது"என்றார் பரிட்சைப் பொறுப்பாசிரியர்.

அப்போதுதான் ஆங்கில ஆசிரியர் விழித்தார்.

''மன்னிக்கவும் தாங்கள் கொடுத்தது ஆங்கில விடைத்தாள்கள்தான் என்ற எண்ணத்தில் புள்ளிகளைப் போட்டுவிட்டேன்''என்றார் அந்தத் தமிழ் தெரியாத சிங்கள ஆசிரியர்

உதவியவர்:
நாவலப்பிட்டி சுந்தரலிங்கம்.

## கதையும் கருத்தும்

'நேர்பாதை' என்னும் பத்திரிகையின் ஆசிரியர், ஒரு முறை வெளியே உலாவப் போயிருந்தார்.

வழியில் ஒரு தோட்டத்தில், ஒரு கமக்காரன் தன்னுடைய பயிர்களுக்கு குழை குத்திக் கொண்டிருப்பதை அவர் கண்டார்.

பயிர்களுக்குள் ஏன் குழை குத்துகிருய்? என்று, அவனைக் கேட்டார் பத்திரிகை ஆசிரியர்.

வெயிலில் என்பயிர்கள் வாடாமல் இருக்க இவற்றைக் குத்துகிறேன். குழை பயிருக்கு ஆதரவாக, சில நாட்கள் மட்டுமே இருக்கும். பின்னர் அவைகளை எடுத்து விடுவேன் என்ருன் அந்தக் கமக்காரன்.

அதைக் கேட்டு சிறிது உற்சாகம் வரப் பெற்றவராய் நடந்தார் ஆசிரியர்.

சில மாதங்கள் கடந்த பின் ஒரு நாள் மீண்டும் அந்தத் தோட்டத்துக்கு வந்தார் பத்திரிகாசிரியர். பயிர்களைப் பார்த்தார். அங்கு குழைகளே அதிகம் செழித்து வளர்ந்திருப்பதைக் கண்ட அவர், திடுக்கிட்டவராக, கமக்காரனைப் பார்த்து, என்ன இது? எங்கே பயிர்களைக் காணவில்லை? என்று கேட்டார்.

குழைகள் தான் இந்த மண்ணில் செழித்து வளருகின்றன். இந்தக் குழைகளையே சனங்கள் இப்பொழுது காசு கொடுத்து வாங்குகின்றுர்கள். நமக்கு வேண்டியது பணந்தானே. அதற்காக வெறுங் குழைகளை மாத்திரந்தான் இப்போது உண்டாக்குகிறேன்என்ருன் கமக்காரன்.

எதுவும் பதில் பேசாமல் நடந்த ஆசிரியர் நேர்பாதை, வீட்டுக்குப் போனபின் நெடுநேரம் யோசித்துக் கொண்டிருந்து விட்டு முடிவிலே தற்கொலை புரிந்து கொண்டார்.

## நினைவின் அலைகளிலே

நீரோடை பாட்டிசைக்க,
நீகரையில் வீற்றிருக்க,
ஓடி நான் வந்தே
உனையணைக்க, என்மடியில்
வேரோடு சாய்ந்த முல்லை
மென்கொடியாய் நீ சிரித்து
ஏதோ மொழிந்தாய்.
இதழ் தந்தாய் நான்சுவைக்க!
ஆரா அமுதம்
அருந்தி அதே நினைவு
மாருமல் என்றன்
மனதைக் குடைந்துருக்க,
போராட ஏலாமல்,
பொங்கும் எனைப்பிணைந்து
தீராத இந்நோயைத்
தீர்த்துக் கடைத் தேற்று!

★

நீயாக ஓர்நாள்
நினைவின் அடிச்சுவட்டில்
மாயங்கள் காட்டி
மயக்கக், கனியிரண்டும்
ஆயத் துணிகையிலே
அஞ்சி வெட்கி ஓடுகிருய்
அந்த நினைவின்
அலைகளிலே ... என்னிதயம்
ஓயா தலைந்து
உருளும் துரும்பாக!
உன் துணையில் அல்லால்
ஒரு நொடியும் வாழ்வறியேன்!
பாயாத மானே,
பனிமதியே, என் வாழ்வு
பாழோ? பொருளற்ற
பாட்டாய் முடிந்திடுமோ!

—★ அரு. கணேஷ். ★—

# மேலும் கீழும் 2

## மஹாகவி உமர்க்கையாம்

கே. அர். அருளையா B. A. (Hons) Dip.-in-Ed.

மஹாகவி உமார்க்கையாமின் பால்ய நண்பன் ஒருவன், பார்ஸீகத்தின் ஓர் மாகாணத்தை ஆட்சி செய்யும் வாய்ப்பைப் பெற்றான். அவனது பேருதவியால் கலைவிருத்திக்கென ஆண்டுதோறும் ஒரு பெருந்தொகைப் பணத்தைப் பெற்று கவலையின்றி வாழ்ந்தார் உமார். கணிதம், மெய் ஞானம், விஞ்ஞானம் முதலிய துறைகளில் அயராது தொடர்ந்து ஆராய்ச்சி செய்தார். இடையிடையே ஓய்வு வேளைகளில் புலனறிவுக் கப்பாற்பட்ட விடயங்கள் பற்றியும் சிந்திக்கத் தொடங்கினார். சிருட்டிகர், சிருட்டிகள் இவ்விரண்டுக்கு மிடையே உள்ள தொடர்பு—பக்தி—விசுவாசம், இம்மை—மறுமை,—மோட்சம் — நரகம், மரணம் — வாழ்க்கையின் நோக்கம், விதி அல்லது ஊழ் உள் பொருள் ( Reality ) முதலிய சூக்கும விடயங்கள் கவிஞரின் உள்ளத்தைக் கவர்ந்தன; சிந்தனையைத் தூண்டின. கற்பனையும் சிறகெடுத்துப் பறந்தது. அற்புதக் கவிதைகள் விளையலாயின.

உள்ளத்தின் குமுறல்கள் உயிர்த் துடிப்புகள், இதயத்தின் உணர்வுகள், இதயத்தின் அந்தரங்கத்தில் உள்ள ஆறுத ஈறல்கள் யாவும் திரண்டு உருண்டு சொல்வடிவெடுத்துக் கவியாக மிளிர்கின்றன. சுருங்கக் கூறின் கூண்டினுள் சிறைப்பட்ட கோர வேங்கையின் கூக்குரலைத் தான் கவிஞரின் பாடலிற் கேட்கின்றோம். கவிஞரின் முடிவுகள் துன்ப உணர்ச்சியைத் தூண்டுவதாயினும் கசப்பு மனப்பான்மை காண்டல் அரிது. எள்ளி நகையாடும் பாணியிலும் சில பாடல்கள் அமைந்துள்ளன.

ஆறறிவு படைத்த மனிதனின் வாழ்க்கை, 'சோகம் நடிக்கின்ற நாடகம்' ஆயினும், சோர்வையும் சோகத்தையும் போக்க அருமருந்தன்ன வழியையும் கூறுவார். சிருட்டிகருக்கும்—சிருட்டிகளுக்கும் உள்ள தொடர்பு எத்தகையது? என கவிஞர் கூறுகிறார் என்பதை ஆராயுமுன் விளக்கம் கருதி, கிறிஸ்தவ மறையாகிய பரிசுத்த வேதத்தில் மனிதனின் சிருட்டியைப் பற்றிக் கூறிய விபரங்களை அறிந்துகொள்ளல் நலம்.

புனித இஸ்லாமிய மறையாகிய பரிசுத்த குறுவானும் இவ்விடயம் பற்றி, பரிசுத்த வேதத்தைப்பெரும்பாலும் ஒத்திருக்கிறதெனக் குறிப்பிடல் வேண்டும். 'வானத்தையும் பூமியையும் பூமியிலுள்ள சராசரங்களையும் சிருட்டித்தபின்னர், மனிதனை மண்ணினால் உருவாக்கி உயிர் ஊட்டினார். அவனுக்கு உதவியாக ஒரு பெண்ணையும் சிருட்டித்து இருவரையும் "ஏதென்" என்னும் தோட்டத்தில் அமர்த்தினார்.

தோட்டத்தின் நடுவேயுள்ள ஜீவ விருட்சத்தின் கனிகளை தவிர்ந்த ஏனைய விருட்சங்களின் கனிகளை ருசித்துப் புசித்து அனுபவிக்கலாம் என்னும் கட்டளையையும் இட்டார், சிருட்டிகராகிய கர்த்தர். சிருட்டிகரின் சென்ம விரோதியான சாத்தான், அவரின் திட்டங்களைக் கவிழ்க்க எண்ணி சர்ப்பத்தின் வேடந்தாங்கி ஆதித்தம்பதிகளிடம் வந்து, அவர்களை வஞ்சித்து ஜீவ விருட்சத்தின் கனிகளை உண்ணச் செய்கிறான். பாவம் அவர்களது வாழ்க்கையில் புகுந்தது.

சிருட்டிகரின் கட்டளையை மீறியதற்காக இருவரும் சபிக்கப்பட்டு, தேவனுடைய சமூகத்திலிருந்து விலக்கப்பட்டார்கள் ஆதி மனிதன் தனது உன்னத பதவியை இழந்தான். நித்திய வாழ்வை இழந்து நிலையற்ற வாழ்வைப்பெற்ருன். மரணமும் அவனது வாழ்வில் இடம் பெறலாயிற்று. அன்று தொடக்கம் இன்று வரை மனித வாழ்வே போராட்டமாயிற்று.'

இனி, கவிஞர் மனிதனின் படைப்பைக்குறித்து என்ன கருத்துக் கொண்டுள்ளார் என்பதைப் பார்ப்போம்.

மனிதனைப் படைக்கும் பொழுதே அவனுக்கெதிராகப் பல துரோகங்களும் சூழ்ச்சிகளும் இழைக்கப்பட்டுள்ளன, பிறத்தல் அல்லது பிறவாதிருத்தல் என்னும் இரு நிலைகளுள் தாம் விரும்பிய ஒன்றை தெரிவு செய்யும் உரிமை மனிதனுக்கு கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது அவனுக்கு அளிக்கப்படவில்லை. 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் வழக்குப்படி, என்னிடம் ஒரு வார்த்தை தானும் கேளாமல் என்னைப் படைத்துவிட்டானே என ஏங்கிக் கண்ணீர் வடிக்கிருர் கவிஞர்.

நான் கேளா திப்புவியில்
நண்ணிய தெவ் விடத்தினின்றே?
நான்கேளா திதை விட்டு
நண்ணுவதெவ் விடத்துக்கோ?

இத்தகைய சிந்தனையற்றதும், ஈவிரக்கமற்றதுமான அடாதசெயலை நினைக்கும் பொழுதெல்லாம் பொங்கி எழுகின்ற துன்ப உணர்ச்சியை முழுகடிக்க "மொந்தை மொந்தையாய் கள்ளைக் குடித்து நினைவுகளை மறப்போம் என்கிருர்" கவிஞர்.

இந்தப் புதுமையான புரட்சிகரமான விஞக்களின் மூலம் மனிதப் படைப்பினுள் பொதிந்து கிடக்கின்ற அநீதியினைஅடிப்படையையே தொட்டு அசைத்து விடுகிருர். இதுவே சிருட்டிகர் செய்த முதல் குற்றம். மேலும் மனிதனின் விருப்பு வெறுப்புகளை அறியாது அவனைப்படைத்து 'ஏதென்' என்னும் அலங்காரத் தோட்டத்தில் வாழவிட்டபின் அவனைச் சும்மா விட்டாரா? தனக்கு விதிக்கப்பட்ட நிபந்தனையைத் தன்ஞல் இயன்ற வரை கடைப்பிடித்துக் காத்து வந்தான் மனிதன். அவனை வீழ்த்த சர்ப்பத்தைக் கருவியாகக்கொண்டு வலை விரிக்கப்படுகிறது. வஞ்சிக்கப்பட்டு வீழ்ந்தான்; பாவம் அறியாத பரிசுத்த மனிதன், பாவியெனக் குற்றம் சாட்டப்பட்டான். இது யாருடைய சதி? யாருடைய சூழ்ச்சி? உண்மையான பாவியார்? சிருட்டிகரா? அல்லது சிருட்டியா? கவிஞர் சொல்கிருர்.

இற்ற மண்ணுல் மனிதனையும்
எழுப்பி ஏதென் ஆள விட்டு
சுற்றும் அரவும் அவ்விடத்தே
சூதாய்ப் பதுங்க வைத்தவனே;
முற்றும் பாவி என அவன்தன்
முகத்தில் கரியைப் பூசிய அக்
குற்றம் நீங்க மன்னிப்புக்
கொடுத்து நீயும் பெறுவாயே.
(தேவி)

இதே பொருளை மிகவும் தெளிவாகவும் அழுத்தம் திருத்தமாகவும் கூறுவார் யோகியார்.

சாந்தத் துறக்கத்தும்
சர்ப்பத்தைப் புகுத்தினையே
ஜீவர் முகம் காரடையச்
செய்யும் பவம் நினதே; நின்
பாவம் மன்னித் தோம்; எம்
பாவ மதும் மன்னிப்பாய்!

வழியில் குண்டு குழி வெட்டி, வலை விரித்து வீசிப் பிடித்தபின் முகத்தில் கரி பூசி, பாவியெனக் குற்றஞ் சாட்டி தண்டனையாம் நரகத்தில் தள்ளுவேன் எனக்கூறும் கண்டனைக்கு ஏதேனும் பொருளுளதோ? நியாயமோ? நீதியோ? நல்லறமாகுமோ? ஒருவன் செய்த சிறிய பிழைக்காக, அவனது பிற்சந்ததியினரான கோடான கோடி மக்களை வாட்டுதல் வதைத்தல் சரியா

குமோ? அஃதெவ்வாறுயினும் அற்ப மனிதனுக்கு விரோதமாக, சிருட்டி கராகிய நீ இழைத்த பஞ்சமாபாத கமான துரோகச்செயல்களை, சிருட் டியாகிய நான் மன்னிக்கவும் உன்னுடன் ஒப்புரவாகவும் தயார். உன்னை மன்னித்தும் விட்டேன். என்னுடைய பாவத்தையும் நீ மன்னித்துவிடு. என்று கூறுகிறுர். இப் பாடல் பரம் பொருளுக்கே விடுத்த ஒரு சவால் போல அமைகிறது. வாசித்ததும் முதலில் சிரிப்புத்தான் வருகிறது. பின்னர் இனந்தெரியாத ஒரு பயங்கரம் கலக்கின்றது. நம் தமிழகத்து நக்கீரரையும் ஞாபகமூட்டுகின்றது.

படைப்பின் அற்புதங்களையும் விசித்திரங்களையும் பார்த்து ரசித்து வியப்பினுல் மெச்சிய எமக்கு, ஒரு புதிய கோணத்திலிருந்து நோக்குவதால் ஏற்படும் ஒரு புதிய காட்சி புலனுகின்றது; பயங்கரமான சோகக்காட்சிதான்சந்தர்ப்பங்களின் சதிக்குள்ளான மனிதன் இவ்வுலகத்தில் தோன்றிய நாள் முதல் இறுதிவரை, அவனை வாட்டுகின்ற மூன்று பகைவர்கள் உளர். பஞ்சம்— பிணி— மரணம் இம்மூன்று பரம வைரிகளுடன் மகா பராக்கிரமம் படைத்த பரம் பொருளையும் சேர்த்துக் கொள்கிறுர் கவிஞர். எனவே ஒரு கணப் பொழுது இவ்வுலகில் வாழ வேண்டுமாயினும், தன்னம்பிக்கையோடும் தணியா முயற்சியோடும் வாழ வேண்டும். பிற உதவிகளை எதிர் பார்க்க வேண்டியதில்லை.

வான்வெள்ள களிப்பின் கீழ்
மாந்தரெலாம் வீணுகக்
கூனிக் குறுகிப் போய்
குழுபடையாய் குமைகின்றுர்
வான் நோக்கிக் கை குவித்து
வாழ்த்தாதீர் உதவிக்காய் ... ...

என மனுக்குலத்தின் அவல நிலைக்காகப் பரிதாபப்பட்டு மிக வருந்தி ஏங்குகிறுர் கவிஞர்.

சிருட்டிக்கு எதிராகச் சிருட்டிகர் செய்த மூன்றுவது குற்றத்தைக் கவனிப்போம். கட்டிக் களி மண்ணுல்மனிதனைஉருவாக்குகிறுர். எனவே, மனிதனுக்கு களிமண்ணுக்குரிய கீழான சுபாவங்கள் தான் இயல்பாக அமையும். மிருக குணங்களைத் தான் மனிதனிடமிருந்து எதிர் பார்க்கலாம். நெருப்பில் குளிர்ச்சியையும் நாகத்திடம் நல்ல முதையும் எதிர் பார்க்கலாமா? மண்ணிடமிருந்து திண்மையை எதிர் பார்த்தல் தகுமா? தீமையை விதைத்து நன்மையை அறுவடை செய்யலாம் என்று காத்திருத்தல் முறையாகுமா? கட்டிக் களி மண்ணுல் படைத்தமனிதனிடம் களி மண்ணுக்குரிய குணங்களை வாழ்க்கையிலும் காட்டி ஒழுகும்படி கேட்கலாம். எதிர்பார்க்கலாம். வலியுறுத்தி வற்புறுத்திக் கேட்டாலும் பிழையாகாது. கொடுத்ததைத் திருப்பித்தர மறுத்தால் தண்டிக்கலாம். இது நீதி; நியாயமும் ஆகும்.இதை விட்டு சிருட்டிகராகிய கர்த்தர், சிருட்டியாகிய மனிதனிடமிருந்து, அவனது இயற்கைக்கு மாறுன பல குணங்களை வற்புறுத்திக் கேட்பது மல்லாமல், கேட்டதைக் கொடுக்க மறுக்குங் கால் தண்டனைக்குள்ளாக்கி நரகக் கிடங்கில் தள்ளப்படுவானென்றும் பயமுறுத்தப் படுகிறுன். பொன்னுெத்த சாந்தம் — தயவு — இரக்கம் — அன்பு — தியாகம் — நல்லொழுக்கம் முதலிய நல்ல குணங்களுக்கு மனிதன் எங்கு போவது? யாரிடம் கடன் வாங்குவது? எவரிடம் உண்டு?

அது ஒரு புறமிருக்க சிருட்டிகருக்கும் சிருட்டிக்கும் மேற்குறிப்பிட்டுள்ள விடயத்தில் ஏதும் பொருத்தனை ஒப்பந்தம் உண்டா? மனிதனைப் படைத்ததற்குக் கைம்மாருக நயம் நாடி நன்மை செய்து அவரைத் தேடி அவரிடம் திரும்புவேன் என மனிதன் வாக்குறுதி கொடுத்து உடன் படிக்கை எழுதினுனு? அப்படியான ஒன்றைச் சிருட்டிகர் ஒருதலையாக ஏற்படுத்தி இருப்பினும், ஆதி மனிதனே அவன் பிரதி நிதியாகிய நானே, அவ் வொப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு கைச்சாத்திடவில்லை. என்னிடம் ஒரு வார்த்தை கூடக் கேளாமல் என்னைப்

படைத்தாய். அதுவும் களிமண்ணாலே படைத்தாய். படைத்துவிட்டுப் பத்தரை மாற்றுப் பசும்பொன் கேட்கிறாய். தராத ஒன்றை என்னிடம் கேட்கிறாய். என்னிடம் இல்லாத ஒன்றைக் கேட்கிறாய். என் இயற்கை அமைப்புக்கு மாறானவற்றைக் கேட்கிறாய். கேட்பது மட்டுமல்லப் பயமுறுத்துகிறாய். இந்த அடாத செயலை, வல்லடி வழக்கை ஆரிடம் சொல்லி அழுவேன்? யாரிடம் முறையிட்டு நீதி கோருவேன். அப்பீலும் கேட்க முடியாது அப்பனே! ஏன் வழக்காளி நான். எதிரி சிருட்டிகர். நீதியரசர் சிருட்டிகர்! எதிரியும் நீதியரசரும் ஒருவரானால் வழக்கின் முடிவு தெரியுந்தானே.

கட்டிக் களிமண்ணுடலை
கடனாகக் கொடுத்துப் பின்
கெட்டிப்பொன் நெறிஎன்னை
கேட்பதுவும் சரியாமோ?
ஒப்புக்கொள் ளாக்கடனை
கொடுத்திடென ஒறுத்திடுதல்
ஒப்புவதோ வியாபாரம்
உதவியிலா வறியனிடம்-(யோகி)

மண்ணுக்கீடு பொன் கேட்டால்
வலியில் மனிதனென் செய்வான்
கண்ணிச் செய்த ஒப்பத்தம்
கண்ணிற் கண்ட தொன்றுமிலை
திண்ண மாக இவ் வழக்குத்
தீரா வழக்கே ஆகுமப்பா
எண்ணி முடிவு செய்திடுவார்
யாவருள்ளார்எங்குள்ளார்-தேவி

உலக மதங்களின் அடி அத்திவாரங்களையே அசைக்கக்கூடிய ஆணித்தரமான கருத்துகள் இவை. குறிப்பாக உணர்த்துவன இன்னும் பல உள. விரிவஞ்சி நிறுத்துகிறோம்.

மதப் பற்றுடையவர்களும், பக்தர்களும் கவிஞரின் கருத்துக்களை எவ்வாறு ஏற்பினும், அவரது மதிநுட்பத்தையும — தர்க்க ஆற்றலையும் ஆழ்ந்த சிந்தனையையும் புத்தம் புதுமையான பொருள் அழகையும்-மனோ தைரியத்தையும் வியந்து சுவைக்காமல் இருக்க முடியாது. கற்றோரும் மற்றோரும் கனவிலும் நினையாத-கற்பனையிலும் எண்ணாத சற்றே கசப்பான - புரட்சிகரமான கருத்துகள் தான். எவர் எதைச் சொன்னாலும் இளித்த வாயுடனும் கண்மூடிதனமாகவும் அடிமை மனப்பான்மையுடன் ஆராய்ச்சி இன்றி ஏற்றுக் கொள்ளுதல் தகாது என்ற பகுத்தறிவு வாதமும் கவிஞரின் பாடல்களில் சுடர்விட்டு ஒளிர்கின்றன.

கவிஞர் எழுப்பிய கடுவினாக்களுக்குச் சுடுவிடை சொன்னவர் யாருமிவர். சொல்லலும் மிக அரிது.

# காதல் என்னும் கதை


மலரினும் மெல்லியது காதல். சிலரே அதில் வெற்றி கண்டவர்கள்.

வாழ்க்கையில், பிற துறைகளில் பெரும் புகழும் வெற்றியும் ஈட்டிய, சரித்திர புருஷர்கள், விஞ்ஞானிகள், கலைஞர்கள் ஆகியோர் காதலில் எவ்வளவு தேறியுள்ளார்கள். என்பது ஒரு ரஸமான விஷயந்தான்.

இத்த ரஷமான விஷயத்தை பாடும் மீன் வாசகர்களுக்கு அடுத்த இதழ் தொடக்கம் எழுத இருக்கிறார் திரு. சசி.

## உங்களுக்குத்
## தேவையான

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை
V. R. இரண்டு யானை மார்க் சுருட்டும்,
கோண்டாவில் S. A. T. V.
இரண்டு சிங்கம் மார்க் சுருட்டும்,
திறம் புகையிலையும்
மற்றும்
கல்கி பீடி, R. V. G. பீடிகளும்,
சாய்ப்புச் சாமான்களும்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளச்
சிறந்த இடம்



# சிவநடராசா ஸ்டோர்ஸ்

உரிமையாளர்:— த. சி. தம்பையா.
இல. 12, பஜார் ஸ்ரீட்,
மட்டக்களப்பு.

தொலைபேசி எண்:
**319.**

கிளை ஸ்தாபனம்: ஏறுவூர்.
தொலைபேசி எண்: 892.

# சீட்டுக்காசு

—(★)—

★ தான் கண்ணை மூடிய பின், தனதுஇறுதிச் சடங்குகள் சிறப்பாக நடைபெற வேண்டும் என்று விரும்பினுள் மாரிமுத்துக் கிழவி. அந்த ஆசையோடுதான் கடந்த நான்கு மாதங்களாக ஓடி ஓடி உழைத்துச் சீட்டுக் கட்டி வருகிருள். அந்த ஆசையில் மண் விழுந்தது போல் அரிசித்தட்டுப்பாடு வந்தது.

★ கூப்பன் அரிசியையே நம்பி வாழ்ந்த அன்னம்மாவின் குடும்பம், இலவச அரிசியின் பற்ருக் குறைவு காரண மாக அரிசிக்கார கதீசா உம்மாவையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. கடந்த சில நாட்களாகச் ''சோ'' என்று பெய்து கொண்டிருக்கும் அடை மழையால் அரி சிக்காரக் கதிசாவைக் காணுது தவித்து, பின் தனது மகனை எங்கோ அனுப்பி ஒரு ரூபா அறுபது சதம் கொடு த்து ஒரு கொத்துஅரிசி வாங்கியிருந்தாள் அன்னம்மா. '' பகல் வேளை மட்டுமே சோறு '' என்ற சட்டத்தை அவள் கணவன் வேலுப்பிள்ளை ஓவசியர் கொண்டு வர அதை அமுலாக்குவதில் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் அன்னம்மா, தன் வாழ்க்கையில் முதன் முறையாக ஏற்பட்டிருக்கும் சோற்றுப் பஞ்சத்தைப்பற்றி நூல் ஒன்றையே எழுதிவிடக்கூடிய அனுபவம் பெற்றிருந் தாள்.

சி. பி. சத்தியநாதன்

அடிக்குமேல் அடிவைத்து கெந் திக் கெந்தி நடந்து அன்னம்மாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள் மாரி முத்துக்கிழவி. மேல் மூச்சுக் கீழ் மூச்சு வாங்க, வந்ததும் வராதது மாக திண்ணையில் சக்கச் சளிய இரு ந்து விட்ட கிழவியைப் பார்த்து 'என்ன பெத்தா கரடி பிறைக் கண் டாப்போல இந்தப் பக்கம்?' என் ருள் அன்னம்மாவின் புத்திரியான கமலி.

'வருத்தமாகக் கிடந்தடிமனே' என்று கரகரத்த தொனியில் ஆரம் பித்து, தன்னைப் பிடித்துக் கொண்ட வயிற்றுளைவு வியாதி பற்றி விபரித்து, அதைத்தொடர் ந்து உடம்மை முறித்துப் படுக்கை யில் போட்டுவிட்ட 'டிங்கி'க் காய்ச்சல் பற்றியும் விஸ்தாரமாக எடுத்துச் சொன்னுள் மாரிக்கிழவி.

அவளுடைய சுருங்கிப்போன முகத் தையும், வகிடெடுத்து வாராது கோதிக்கட்டியிருந்த நரைபாய்ந்த சின்னஞ் சிறிய கொண்டையையும் குழிந்துபோய் ஆழத்திலே மின்னும் இடுங்கிய கண்களையும் பரிதாபமா கப் பார்த்துக்கொண்டிருந்த கமலி, 'மெய்தானு பெத்தா எங்களுக்குத் தெரியாமல் போயிற்றுதே! தெரிஞ் சிருந்தா அம்மையாவது வந்து உன்னப் பார்த்திருப்பாவு.' என்று மன்னிப்புக்கோருவதுபோல்சொன் ஞள். பதினைந்து வயதுகூட ஆகாத சிறுமி கமலி தன் தாயைப்போலவே உருக்கமாகப் பேசுகிருளே என மகிழ்ந்த கிழவி, தன் மனத்திற் குள்ளே சிறுமியை வாழ்த்தினுள்.

வேம்பு, மா, பலா மரங்கள் உதிர்க்கும் சுருகுகளுக்கு அன்னம் மாவின் வளவில் குறைச்சல் இல்லை.

வளவை கூட்டிப் பெருக்கி அலுத்துப்போன அன்னம்மா, ஒரு நாள் வீட்டிற்கு வந்த மாரிமுத்துக்கிழவியிடம் அந்த வேலையை ஒப்படைத்தாள். அந்தப் பெண்ணம் பெரிய வளவை தினசரி கூட்டிப் பெருக்குவதென்றால் ஆருக்கு முடியும். மாதத்தில் இரு முறையோ மூன்று முறையோ வளவைக்கூட்டிப் பெருக்கும் தன் கடமையை நிறைவேற்றுவதற்காக மாரிமுத்துக்கிழவி அன்னம்மாவின் வீட்டிற்கு விஜயம் செய்வாள்.

கிழவி எல்லா இடங்களிலும் போய் இப்படியான வேலைகள் செய்யமாட்டாள். அன்னம்மா உறவுக்காரியானதாலும், அவள் தங்கமான குணம் கிழவிக்குப் பிடித்துப் போனதாலுமே இங்கு வந்து போய்க்கொண்டிருந்தாள் அவள். கட்டிப்பாலும் சீனியும் கலந்து அன்னம்மா தரும் தேனீரிலே மாரிக்கிழவிக்கு ஒரு மயக்கம்.

இங்கு வந்து நிற்கும் இரண்டொரு நாட்களிலும், மாரிக்கிழவி, அன்னம்மாவின் குடும்ப அதிதியாகவும் சேவகியாகவும் இருப்பாள். அவளின் ஒத்தாசைகளால் வீட்டு வேலைகள் விரைவாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

'அம்மா எங்க பொயித்தாவு மனே புள்ள?' குனிந்து தன்காலில் ஏற்பட்டிருந்த புண்ணைப் பார்த்தவாறு கேட்டாள் மாரிப்பெத்தா.

'அம்ம, மாமிக்குச் சுகமில்லை யாம் எண்டு பாக்கப்போயிருக்காவு இரி பெத்தா இனி வந்திருவாவு' என்று பதில் கூறிய கமலி குசினிப் பக்கம் போனுள்.

'எனக்குத் தேத்தண்ணி ஒண்டும் வேணும்மனே. சும்மா இரி ... அம்ம வரட்டும்.' களைப்பாக இருந்தாலும் தாயில்லாத வேளையில் வந்து, இந்த சின்னஞ் சிறிசிடம் தேனீர் வாங்கிக் குடிப்பது முறையல்ல என்ற கண்ணிய உணர்வில் சொன்னுள் கிழவி. 'என்ன மாமி உன்னக் கனகாலமாக் காணல்ல வளவும் சருகேறி அடைஞ்சுபோச்சு என்று குசலம் விசாரித்த வாறே வந்தாள் அன்னம்மா.

அதென்னத்த மனே பேசுற ... நான் கிடந்த கிடை ஆர் அறிவா? தனது சுகவீனத்தையும் தேறுதலையும் மீண்டும் ஒரு முறை அந்த வீட்டில் விவரித்தாள் கிழவி.

அன்னம்மாவின் வீட்டைப் போலவே கிழவிக்கு மேலும் சில வீடுகள் வாடிக்கையானவை. ஏதோ ஒரு வகையில் அந்த வீட்டுக்காரர்களும் கிழவியின் உறவினர்கள்தாம் மாதத்தில் இரண்டு மூன்று நாட்களை ஒவ்வொரு வீட்டுக்குமாக ஒதுக்கி, அந்த அந்த வீடுகளிலேயே அந்த நாட்களைக் கடத்தி விடுவாள் கிழவி. எவரும் அவளைப் போ என்று விரட்டியதும் இல்லை. வா என்று நிர்ப்பந்திப்பதும் இல்லை. எனினும் அவள் வராமை கடந்த சில நாட்களில் அந்த வீடுகளில் ஏதோ ஒரு குறைவையே காட்டிற்று. கிழவி, தான் போய் வருவதாக விடை கோரியதும் ஐம்பது சதமோ ஒரு ரூபாயோ அங்கங்கே கிடைக்கும். மற்ற வீடுகளில் தரும் கூடிய தொகையே அன்னம்மா வீட்டில் தரும் குறைந்த தொகையாக இருக்கும்.

கிழவிக்கு புருஷனே பிள்ளை குட்டியோ இல்லை என்பதிலும் பார்க்க, அவளை நம்பி வாழ்பவர்களோ—அவளின் அன்புக்குப் பாத்திரமானவர்களோ இவ்வுலகில் இல்லை என்பதே பொருத்தம். அவளின் கருத்தும் அப்படியே! கன்னியாயிருந்து மொட்டாகி பின் மலர்ந்து விகசித்து மணம் என்ற வெயிலில் வண்டோடு கூடி மகிழ்ந்த நாட்கள் அவளின் வாழ்விலும் வந்து போகாமல் இல்லை. எனினும் அந்த நாட்7ள் எவ்வளவு விரைவாகச் சென்று விட்டன! இளமையிலேயே கைம்மை நிலையை எய்தி, கல்லும் முள்ளும் பள்ளமும் படுகுழியும் நிறைந்த பாதையில் தன் வாழ்க்கை வண்டியை ஓட்டி, இப்

பொழுது கிழவி என்ற நிலைக்கு வந்துவிட்ட அவள், எப்போதோ இறந்து போன தனது தமக்கையின் மகள் வீட்டையே தன் தங்குமிடமாக்கி அங்கே மாதத்தில் நான் கைந்து நாட்கள் தங்கி வருகிருள்.

'சரியா இளைக்குது மனே அன்னம்மா! இயின கந்தோருக்கொள்ளம் நடந்து போனதுக்கு!'

'ஏன் பிச்சச் சம்பளம் எடுக்கயா?'

'ஓம் மனே! இன்னும் சம்பளம் வரல்லயாம் போசுமாத்தர் சொன்ஞரு. அப்படியே இஞ்சால வந்திற்றன்.' தான் அரசாங்கத்தில் பெறும் தருமப் படிக்கு பிச்சைச் சம்பளம் என்று அன்னம் கூறியதைத் திருத்தும் முகமாகத்தான் சம்பளம் என்ற சொல்லுக்கு அழுத்தம் கொடுத்துச்சொன்னுள் கிழவி.

'நிச்சயமாகத் தெரியாம நீஏன் இந்த நேரத்தில புறப்பட்டு வந்த? ஆரிட்டயும் விசாரிச்சிற்று வாறதுக்கென்ன!'

'எனக்கென்ன தெரியும் வந்த மத்தப் பொண்டுகளோட நானும் வந்தன் ஒள்ளம் நெருக்கடிப்படாம முன்னல எடுத்திரலாமேயெண்டு.'

'நல்லா மெலிஞ்சி எலும்புந் தோலுமாப் போயிற்ரு மாமி! உடம்பில ஒள்ளுப்பமும் உசுப்பக் காணல்ல!'

'ஓம் மனே அடியோட பெலன் சவியில்ல......'

'வாற சம்பளக் காச எடுத்து என்னவும்......மோல்ட்ட மிலுக்குப் போத்தல் ஒண்ட வாங்கிக்குடி. நல்லாச்சாப்பிடோணும்அப்பதான் உடம்பு பெலன் சவி ஏறும்.' என்று தன் அனுபவத்தைச் சொன்னுள் அன்னம்மா.

'எங்க புள்ள அதெல்லாம் வேண்டுற...? ஒரு சீட்டொண்டத் தொடங்கிற்று...கிடக்கு......'

'என்ன சீட்டா?' அதிர்ச்சியைத் தாங்கொணுதவள் போல கேட்டாள் அன்னம்மா. ஏழு ரூபா ஐம்பது சதத்தை தன் ஒழுங்கான மாத வருமானமாகக்கொண்ட அந்தக் கிழவிக்கு என்ன சீட்டு? என்று மத்தியதர வர்க்கத்திற்குரியசெருக்கோடு மனதில் கேள்வி எழுப்பி தன் முன்னே இருந்த மாரிக் கிழவியைப் பார்த்தாள். கிழவி சீட்டுக் கட்டும் சமாச்சாரமெல்லாம் அவளுக்குத் தெரியாது.

'ஓம் புள்ள சீட்டுத்தான்-பத்து ரூவாச் சீட்டு.' ஆதங்கத்தோடு வார்த்தைகள் வெளிவந்தன.

'என்ன மாமி பத்து ரூபாச் சீட்டா? உனக்குப் பிச்சக்காசு ஏழு ரூபாயும் ஒரு சிலினும் தானே! நீ பத்து ரூபாச் சீட்டு எப்படிக் கட்டி வாரு?'

'என்ன செய்யிற மனே, இப்ப கயிற்றப்பட்டெண்டாலும் சீட்டக் கட்டுனு பின்னுக்கு ஒள்ளம் ஆறுதல். அதில வாற காசெடுத்து அக் கயிர பொட்டயிற்றக் குடுத்து வச்சிருந்தா, நம்மட கண்மூடுன புறகு சாச்செலவ யெண்டாலும் சீரா நடத்துங்கள்.' என்ருள் கிழவி அசைக்கமுடியாத நம்பிக்கையோடு

தமக்கை மகள்தான் கிழவிக்குச் சீட்டுக்கட்டும்படி ஆலோசனை கூறியிருந்தாள். மாதா மாதம் கிழவி தரும் இரண்டோ மூன்ரோ ரூபாய்களை தனது கணவனின் குடிப்பழக்கத்தாலும், குடும்பத்தில் நிலவிய நிரந்தர வறுமையாலும் சேமித்து வைப்பது சிரமம் என்று தான் சீட்டுக்கட்டும்படி புத்தி சொல்கிருள் என்று நம்பினுள் கிழவி. ஆனுல் மொத்தமான தொகை வந்தால் பாரிய கடன் ஒன்றை அடைத்து விடலாமேஎன்ற தன் உள்ளார்ந்த நோக்கத்தை மறைத்து, தன் சின்னம்மாவின் அந்திம காலத்திற்குச் சீட்டுக்காசு பயன் படும் என்று காரணம் காட்டியிருந்தாள் தமக்கை மகள் பற்றுக்கோடு எதுவுமின்றி வாழ்ந்த கிழ

விக்கு தமக்கை மகளின் ஆலோசனை புத்தியாகவே பட்டது. அன்றாடத் தேவைகளுக்கே போராடிக்கொண்டிருக்கும் மகள் தன் மரண வீட்டுச்செலவை எப்படி நடத்த முடியும்? என்று தன்னைப் பல நாட்களாக ஆட்டி அலைக்கழித்த கவலைக்கு ஒரு தீர்வுகாண முடியுமென்று எண்ணினாள். அந்த நம்பிக்கையோடுதான் கடந்த நான்கு மாதங்களாக ஓடி ஓடி உழைத்துச்சீட்டுக் கட்டி வருகிறாள். சீட்டுக் கட்ட ஆரம்பித்தது முதல் தான் வழக்கமாகச் செல்லும் வீடுகளோடு புதிதாக இன்னும் சில வீடுகளையும் சேர்த்துக்கொண்டு தொங்கோட்டமும் சில்லறைப் பாய்ச்சலுமாக இயந்திரம் போல் வேலை செய்து நான்கு மாதம் ஒழுங்காகச் சீட்டுக் காசைச் செலுத்திவிட்டாள். இந்த நான்கு மாத காலத்தில் அவள் தனக்கே உரிய சுபாவத்தினை மாற்றிக்கொண்டவளாக இருந்தாள். சாப்பாட்டில் கவனம் இன்றியும் ஓய்வு எடுத்துக்கொள்ளாமலும் ஒரே 'பிஸி'யாக இருந்தாள். உடற் சோர்வினால் எற்பட்ட வியாதிதான் அவளை இத்தனை பலஹீனமான வளாக ஆக்கி விட்டது.

கிழவியின் சீட்டுக்கட்டும் விவகாரம் பற்றியும், அவள் உடல் நிலை பற்றியும் எண்ணி தனக்குள்ளே பரிதாபப் பட்டுக்கொண்டிருந்த அன்னம்மா, 'எப்பிடி மாமி நீ பத்து ரூபா சீட்டுக்கட்டுறா? உண்ட சம்பளக்காசோட இன்னும் ரெண்டு ரூபாயும் ஒரு சிலினும் வேணுமெலுவா! நீ சாப்பிடறல்லயா? சோறு தாற அக்கயிர மகளுக்கு ஒண்டும் குடுக்கிறல்லயா?' என்று கேட்டாள்.

'ஒரு மாதிரியா நாலு மாதம் ஒப்பேத்திற்று வந்தன். போகாத ஊடுகளுக்கெல்லாம் போய் வேல செய்து வந்த காசிகளக் கூட்டம் பண்ணி சீட்டக் கட்டித்து அக்கயிர பெட்டைக்கும் ஏதும் குடுத்து வந்தன். இந்த மாதம் இன்னு வருத்தம் புடிச்சிற்று மிச்சக்காசிக்கு என்ன செய்யிறதெண்டு தெரியல்ல நல்லா வருத்தம் புடிச்சிற்று. போதாக்குறைக்கு கால்லயும் ஒரு புண் வந்திற்று நடந்துக்கயும் ஒண்ணு!'

'உன்ர சாப்பாட்டுப் பாடுகள் எப்பிடி மாமி?'

'அத என்னத்தப் பேசுற புள்ள ஊர்ல சரியான அரிசிப் பஞ்சம். கூப்பனுக்கு ஒரு சேர் சும்மா குடுக்கத் துவங்கின புறகு ஒருவரும் என்னச் சோறு தின்னக் கூப்பிடுறல்ல. சோத்தக் காணவும் சோட்டயாக் கிடக்கு அயின வருத்தமாகக் கிடக்கக்க அக்கயிர பொட்ட ரேஸ் பாண் தான் வேண்டித் தந்தவள்.' அரிசித் தட்டுப் பாட்டின் கொடுமையைப் பற்றி கிழவி விளக்க முயன்றதும், கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா என தன்னுள் அலுத்துக் கொண்டாள் அன்னம்மா. மத்திய தரம் என்ற இரண்டுங் கெட்டான் நிலையிலிருக்கும் அன்னம்மாவுக்கு கிராமத்தில் நிலவும் தட்டுப்பாடு பற்றிக் கிழவியா சொல்ல வேண்டும். கூப்பன் அரிசியை நம்பி வாழ்ந்த அவள் குடும்பம், இலவச அரிசியின் பற்றாக் குறைவினால் அரிசிக் காரக் கதிசா உம்மாவையே நம்பியிருக்க வேண்டியிருந்தது. கடந்த சில நாட்களாக சோ என்று பெய்து கொண்டிருக்கும் அடை மழையால் அரிசிக்காரக் கதிசாவைக் காணாது தவித்து, பின் தனது மகனை எங்கோ அனுப்பி ஒரு ரூபா அறுபது சதம் கொடுத்து ஒரு கொத்து அரிசி வாங்கியிருந்தாள். 'பகல் வேளை மட்டுமே சோறு' என்ற சட்டத்தை அவள் கணவன் வேலுப்பிள்ளை ஒவசியர் கொண்டுவர, அதை அமுலாக்குவதில் சிரமப்பட்டுக்கொண்டிருக்கும் அன்னம்மா, தன் வாழ்க்கையில் முதன் முதலாக ஏற்பட்டிருக்கும் சோற்றுப் பஞ்சத்தைப் பற்றி நூல் ஒன்றையே எழுதிவிடக் கூடிய அனுபவம் பெற்றிருந்தாள்.

'இந்த ஒரு மாதமா எல்லாருக்கும் பொறுப்புத்தான் மாமி!' என்று அன்னம்மா சொன்னதும், கிழவி, வாசலில் சுருண்டு தூக்கத்தில் ஆழ்ந்திருக்கும் நாயைத் தன் கையால் சுட்டிக் காட்டி, 'இந்த நாயெண்டாலும் ஒள்ளம் தேளுவல்ல,

அப்பிடியே இருந்த மாதிரி இரிக்கி. ஊர்ல உள்ள நாய்களப் பாரன்... எலும்புந் தோலுமாத் திரியுதுகள்... ஹ்ம்... மனிசனுக்கே சோறில்ல முறுக சாதிக்கு ஆரு சோறு வைப்பாங்க! ஊர்ப் பஞ்சம் நாயில தெரியும் என்றாள்.

'ஓம் மாமி! இந்த நாய்க்கு நாங்க தின்றத்தில எப்பிடியும் ஒள்ளுப்பம் வச்சிருவம்' என்று தன் வீட்டு நாய் மெலியாமைக்கு விளக்கம் தந்தாள் அன்னம்மா.

'அது தானே நானும் பாத்தன் இதிர உடம்பு உடயல்ல!' விளக்கத்தை ஒப்புக்கொண்டாள் கிழவி.

'அதுக்குள்ள நீ சீட்டுக் கட்டித்து அவதிப்படுறாய்!'

'சீட்டுக் கட்டாம என்னெய்யிற மனே? எனக்கு ஆரு இரிக்கா நாளைக்கு இருந்தாப்பல கண்ண மூடித்தா ஆரு வந்து எனக்கு அடக்கம் செய்யிற.'

'என்ன மாமி நீ சொல்ற கத! சுவர் இருந்தா சித்திரம் எழுதிக்கலாம். நீ எடுக்கிற சம்பளத்துக்கு மல சீட்டுச் கட்டுறு, மறுகா என்னத்தத் தின்னுற? இந்தப் பஞ்ச காலத்தில ஆரையும் நம்பி இரிக்கலாமா? போடிமாரெல்லாம் நெல்லையும் அரிசியையும் வச்சி இறுக்கிப் பூட்டித்தாங்க. இப்ப அரிசிய கள்ளக்களவாப் பொன்போல விக்காங்க! அதுக்குள்ள நீ அரசாங்கம் தாற ஏழு ரூபா அம்பது சதத்தையும் எடுத்துச் சீட்டுக் கட்டுறாய்' இப்படிச் சொல்கையில் தன்வீட்டுப் பொறுப்பையும் அரிசித் தட்டுப்பாட்டின் கொடுமையையும் அன்னம்மா நன்றாக அனுபவித்திருக்கிறாள் என்பது கிழவிக்குப் புரிந்தது. தலையைச் சொறிந்துகொண்டே 'நீ சொல்றதும் சரிதான் மனே' என்றாள். தமக்கை மகள் பேச்சைக் கேட்டுச் சிறிதும் யோசிக்காமல் காரியத்தில் இறங்கியது மடமையே என்று பட்டது அவளுக்கு, கடந்த ஒரு மாதமாகச் சோற்றுக்கே திண்டாடி வருவதும், அதனால் உடற் சுகம் கெட்டுப்போனதும், தனது சீவியத்துக்குப்பின், உயிர் போன கட்டைக்கு செய்ய வேண்டிய மரியாதைக்காக—சிறப்புக்காக மங்கியதும் உயிருக்கே உலை வைத்துவிடுமோ? என்று, மரணபயம் பற்றிக்கொள்ள, ஏதோ முடிவுக்கு வந்தவளாக அன்னம்மாவைப் பார்த்தாள் கிழவி.

சிறிது நேரம் இருவருக்குமிடையில் திரையாக நின்ற அமைதியைக் கலைத்து தீர்க்கமான தொனியில் அன்னம்மா சொன்னாள்:—

'யோசிச்சு என்ன பிரயோசனம் மாரி மாமி? நம்மப்படைச்ச ஆண்டவன் உசிரையும் உடம்பையும் ஒண்டாத்தான் படைச்சான். ஒரு நாள், இந்த உசிர உடம்பில இருந்து எடுப்பான். அது எப்ப எண்டு பிரமதேவனுக்கும் தெரியா இந்த அரும பெருமையான உசிரே எங்கயோ நம்மள அறியாம ஓடத்தான் போகுது. அதுக்குப் புறகு இந்த நாத்தக்கட்டைய ஆரு கவனிக்கப்போறா? ஏன் கவனிக்கோணும்? கவனிச்சுத்தான் என்ன புண்ணியம்? எப்பிடித்தான் சோடிச்சு விட்டாலும் கட்ட கட்டதான். உயிர் அதுக்குள்ள இரிக்கக்குள்ளதான் அதுர மானம் மரியாதையெல்லாம்! நான் எண்ட குடும்பக் கஷ்டத்தோட, இப்ப உனக்குஉதவி செய்ய ஏலாதெண்டு நீ நினையாத. உனக்கு அந்தச்சீட்டக்கட்டி முடிக்க உதவி செய்வன். ஆனா அப்பிடிச் செய்யிறது பிழை. அதுக்கு எண்ட மனச்சாட்சி ஒத்துக்கொள்ளாது. நான் உன்னப் பிழையான வழியில நடத்துறதா முடியும் அது. நான் உனக்கு அப்பிடித்தான் உதவி செய்தாலும், நீ நினைக்கிற மாதிரியே எல்லாம்நடக்குமா என்றது எனக்கு ஐமிச்சம். நீ விரும்பினா நாலு மாசமாக்கட்டின சீட்டுக்காசு நாப்பது ரூபாவையும் ஆருட்டயெண்டான வேண்டி எடுத்திற்று, அந்த ஆளச் சீட்டத் தொடந்து கட்டச்சொல்லு அப்ப உனக்கு சீட்டுக்காறியும் ஏசமாட்டாள். இல்லாட்டி உண்ட அக்

சுயிர மகளுக்கே அந்தச் சீட்டக் குடுத்திரு. அவள் கட்டட்டும்.'

குனிந்து கொண்டே இருந்த கிழவி தன்தலையை நிமிர்த்தி, 'அக்கர பொட்டைக்கு இப்ப திண்டுக்கயும் வழியில்ல. அதுக்குள்ள அவ என்ணெண்டு சீட்டுக்கட்டுற? இந்த மார்கழி மாதக் கருத்தலப் பஞ்சத் துக்குள்ள அரிசியையும் குறச்சிப் போட்டாங்க. ஆரு சீட்டெடுத்துக் கட்ட போருங்க? நான் மடத்தன மாக்கொண்டு அந்தச் சீட்டில விழுந் திற்றன். நீ சொன்னது குரு புத்தி போல! அந்தப்புத்தி எனக்கில்லயே மனே. நீ வேணுமெண்டா அந்தச் சீட்ட எடுத்துக் கட்டு மனே!'

தன் தவறை உணர்ந்தவளாய் நம்பிக்கையோடு அன்னம்மாவின் முகத்தை நோக்கினுள். மாரிமுத்துக் கிழவி.

*

# எழுத்தாளர்களின் இறுதிக்காலம்

## 1. டால்ஸ்டாய்.

பிரபுத்துவக் குடும்பத்தில், முப்பத்திரண்டு அறைகளோடு கூடிய மாளிகையில் பிறந்து வளர்ந்த டால்ஸ்டாய், தமது சிரஞ்சீவித்தும் வாய்ந்த நாவல்களினுல் வரக்கூடிய ஏராளமான வருமானத்தை வைத்துக்கொண்டு, தான் இறக்கும் வரையும் ஓர் பெரிய சீமானுகவே வாழ்ந்திருக்கமுடியும்.

ஆனுல்... நடந்தது என்ன?

இளமையில் போர்வீரனுகவும், சுக போகவாழ்க்கையில் ஈடுபாடு உடையவராகவும் காணப்பட்ட டால்ஸ்டாய், பிற்காலத்தில், அவரைப் பின்பற்றும் சீடர் பலரைக்கொண்ட ஞானியாகவும், ஐரோப்பியருக்கு ஏறக்குறைய ஒரு தீர்க்கதரிசியாகவும் திகழ்ந்தார்.

தமது அந்திம காலத்தில் தனி உடமையை வெறுத்து, தமது பண்ணைகளாலும் நூல்களாலும் கிடைத்துவந்த பெருந்தொகையான செல்வத்தையெல்லாம் பொது ஸ்தாபனங்களுக்கும், ஏழை உழவர்களுக்கும் எழுதிவைத்துவிட்டு, தமது சீவனத்துக்காக சப்பாத்துத் தைக்கும் தொழிலை மேற்கொண்டார். உலகின் மிகப்பெரிய நாவலை எழுதிய அந்த 'ராட்ஷச' எழுத்தாளன், தன் கடைசிக் காலத்தில் எழுதுவதே பாவம் என்று அதை ஒதுக்கிவிட்டார்.

இவைகளினுல் இவருக்கும் மனைவிக்கும் தகராறு முற்றியது. தமது குழந்தைகளின் எதிர்காலத்தை எண்ணிப்பாராது, தமது செல்வத்தை பொது ஸ்தாபனங்களுக்கும் ஏழை உழவர்களுக்கும் டால்ஸ்டாய் அளித்ததை அவருடைய மனைவி எதிர்த்தது நியாயமே என்று கார்க்கி கூறுகின்ருர்.

அது எப்படி எனினும், மனைவியிடமிருந்து ஒதுங்கிவாழ நினைத்த டால்ஸ்டாய், தனது, ரயில் பிரயாணம் ஒன்றின்போது சுகவீன முற்றதால், ஒரு ரயில் நிலையத்தில், கடுங்குளிருக்கும் போர்வை அற்றவராக – தன்னந்தனியே, ஓர் இரவு அனுதைபோல் இறந்தார் என்பதை மறுநாள் காலைதான் உலகம் அறிந்துகொள்ள முடிந்தது.

*

பாடும்மீன் சித்திரை இதழில் ஆரம்பமாகிறது,

ஈழத்தின் பிரபல நாவலாசிரியர்

## வ. அ. இராசரத்தினம் எழுதும்

# நாக கன்னி

ஈழத்தின் சரித்திரப் பின்னணியில், பண்டைத் தமிழரின் பண்பாடுகளான காதலும் வீரமும் இணைந்து செல்லும் அற்புதமான கதை. தனக்கே உரிய அருமையான நடையில் படைத்து வழங்குகிறார் ஆசிரியர்.




அழகுக்கு அழகு செய்யும்
தங்க நகைகளுக்கு

★ நம்பிக்கையும்
★ நாணயமும்
★ உத்தரவாதமுமுள்ள

# வசந்தா ஜுவல்லரீஸ்

44, பிரதான வீதி, கல்முனை.

எம்மிடம் ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்.

# இலக்கியத்தில் சமநிலை

★ சமூகத்தில் இன்பமாகவும் துன்பமாகவும் தோன்றுகின்ற இருவகை அனுபவங்களையும் சமன் செய்து, அமைதியை நிலை நாட்டும் நோக்கமே இலக்கியங்களின் உயிர் நிலையாக அமைந்துள்ளது. சமூக நிகழ்ச்சிகளின் படிமமாகத் தோன்றுகின்ற இலக்கியங்கள் அந் நிகழ்ச்சிகளில் நின்றும் மக்களைப் பாதுகாத்து நன்னெறியில் செலுத்துகின்ற நயங்கனிந்து — உணர்ச்சித் தேன் ஊறித் திகழ்கின்றன.

★ யுத்த முனைகளில் காணும் வெற்றி, மேலும் யுத்தங்கள் தோன்றுவதற்குக் காரணமான வெறும் வெற்றியே! முதலாவது உலக யுத்தத்தின் எதிரொலியே இரண்டாவது உலக யுத்தம். உண்மைக் கவிஞர்களும் எழுத்தாளர்களும் காணும் வெற்றியோ நிரந்தர சமாதானத்தை நிலை நாட்டி விடுகின்றது?

சொல்லினிய காவியத்தில்
தோய்ந்தறிவு நூலில்மனம்
நல்லவர்க்கு நாள்கள்
நனி கழியும் — அல்லாக்
கயவர்க்கு நாள்கள்
கலக விசனத்தில்
துயிலில் கழியுமெனச் சொல்.

இன் கவிப் புலவரின் இனிய வாக்குகள், செந்தமிழ்ச் செல்வரின் சீரிய மொழிகள் நீடு வாழ்ந்து மனத்திற்கு இன்பந் தருகின்றன. இன்பத்துடன் இலட்சியமும் காட்டி நிற்கின்றன. இன்பம் இருவகை. ஒன்று வெறும் இன்பம். அதாவது விட்டிற் பூச்சிக்கு விளக்கினுல் வரும் இன்பம் போன்றது. முன்பு இன்பமாய் இருந்து பின்பு துன்பமாய் மாறுவது. மற்றது பயன் தரும் இன்பம். முன்பு இன்பமாய் அமைந்து, பின்பும் நிலையான இன்பத்துக்கு வழிசெய்வது. இது இலட்சிய இன்பமாகும். வெறும் இன்பத்திற்கும் இலட்சிய இன்பத்திற்கும் முறையே தந்திரத்தையும் புத்தியையும் உவமையாகக் கொள்ளலாம். தந்திரம் நிலை இல்லாதது. அது தரும் வெற்றியும் நிலையில்லாததே. புத்தி நிலையுள்ளது. அது தரும் வெற்றியும் நிலையுள்ளதே. மக்கள் வாழ்வு இந்தத் தந்திரமும் புத்தியும் கலந்து நிகழ்வதாலே இலக்கியமும் உலகினை இருவகையாகப் பிரதிபலிக்கின்றது. ஒன்று வெறும் இன்ப இலக்கியம். மற்றது இலட்சிய இன்ப இலக்கியம். இலட்சிய


புலவர்மணி
ஏ. பெரியதம்பிப்பிள்ளை


இன்பங் கூறும் இலக்கியங்களே உலகில் முதலிடம் பெற்று நின்று இலங்குவதை நாம் காண்கிறோம்.

சமூகமானது ஓர் மூல இலக்கியமாய் அமைந்து நிற்க, அதைத் தனது முகக் கண்ணுலும், அகக் கண்ணுலும் நோக்குகின்ற கவிஞன் அல்லது கருத்தோவியன் சமூகத்தின் பிரதிருபத்தை சாயல் படி

வத்தை இலக்கியமாக நமக்கு உபகரிக்கின்ருன். இந்த உபகாரம் செய்யுள் வடிவாகத் திகழ்கின்றது. செய்யப்படுவன வெல்லாம் செய்யுளே. கவியும் செய்யுள்தான். வசனமும் செய்யுள்தான். இரண்டின் அமைப்பும் சிறப்புடையனவாகத் தோன்றினும், தனது சீரிய அழகும் குணமும் காரணமாகக் கவியானது செய்யுள் என்கின்ற பொது உரிமையினைத் தனக்கே சிறப்புரிமையாக்கிக் கொண்டது. தானும் செய்யுளே என்னும் உரிமையை, வசனமும் கவிக்கே விட்டுக் கொடுத்து விட்டது.

சமூகத்தில் இன்பமாகவும், துன்பமாகவும் தோன்றுகின்ற இரு வகை அனுபவங்களையும் சமன் செய்து, அமைதியை நிலைநாட்டும் நோக்கமே இலக்கியங்களின் உயிர் நிலையாக அமைந்துள்ளது. சமூக நிகழ்ச்சிகளின் படிமமாகத் தோன்றுகின்ற இலக்கியங்கள், அந் நிகழ்ச்சிகளில் நின்றும் மக்களைப் பாதுகாத்து நன்னெறியில் செலுத்துகின்ற நயங் கனிந்து—உணர்ச்சித் தேன் ஊறித்திகழ்கின்றன. இந்த உணர்ச்சித் தேன்சுவை உம்பருலகினும் காணமுடியாத தெய்வீகச் செழுஞ்சுவையாகும். உணர்ச்சி போற் பெரியது உலகம்.

நாம் வாழ்கின்ற இவ்வுலகிலே ஒன்றை மற்றென்று ஆதரித்து நிற்பதைக்காண்கின்ருேம். வறுமையை ஈகை தாங்குகிறது. அறியாமை, அறிவினுல் ஒளி பெறுகின்றது. கோழை வீரனுல் உறுதி அடைகின்ருன். இதே போல் மறுதலையாகவும் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அறம் மறத்தை நீக்குகின்றது. பொய்மை மெய் போக்குகின்றது. பொருமையைப் பொறுமை வெல்கின்றது. குறைபாடுகளை நன் முயற்சி தீர்க்கின்றது. சுய நலத்தைத் தியாகம் மேற் கொள்ளுகிறது. அடிமை—வாழ்வு நடைப்பிணம் போன்ற இழி நிலை வீரத்தால் விடிகின்றது. இந்த நிகழ்ச்சிகளை யெல்லாம் உணர்ச்சிக் கண் கொண்டு நோக்குகிருர்கள், கவிஞர்களும் எழுத்தாளர்களும் ஓவியர்களும். இவர்களின் கருணை உள்ளங்களிலிருந்து, கவிச் சித்திரங்களும், உரை நடைப் பாங்குகளும் உயிரோவியங்களும் உதயமாகின்றன. இன்பத்தில் இறுமாந்திருப்பவர்களையும், துன்பத்திலே துவண்டு தவிப்பவர்களையும், இந்த இலக்கியப் படைப்புக்கள் நல்லுணர்சியடையச் செய்கின்றன. செல்வன் இறுமாப்பிலிந்து விடுதலை பெறுகிருன். ஏழை தனது துன்பக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து நிற்கின்ருன். இந்த நிகழ்ச்சிகளைத்தான் இலக்கியங்களிலே நாம் பலகாலும் காண்கின்ருேம். நகையும் அழுகையும் கலந்த உலகினைச் சமன் செய்து வைப்பதிலே கவிஞர்களும், வசனகர்த்தாக்களும் ஓவியப் புலவர்களும் காண்கின்ற இவ் வெற்றியானது இரண களங்களில் காணும் வெற்றியினும் இனிய வெற்றியாகும். யுத்த முனைகளிற் காணும் வெற்றி, மேலும் யுத்தங்கள் தோன்றுவதற்குக் காரணமான வெறும் வெற்றியே. முதலாவது உலக யுத்தத்தின் எதிரொலியே இரண்டாவது உலக யுத்தம். இரண்டாவது உலக யுத்தம் இன்னும் முடிவு பெறவில்லையெனக் கருதலாம். உண்மைக் கவிஞர் முதலியோர் காணும் வெற்றி நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டி விடுகின்றது.

தமது சிந்தனு சக்தியினுல், கற்பனைத் திறனுல், கவித்துவக் கண்களினுல் சமுதாயத்தை நோக்குகின்ற இலக்கிய கர்த்தாக்கள், வெவ்வேறு குணுகுணங்களமைந்த கதா பாத்திரங்களைச் சிருட்டித்துக் கொண்டு, தமது கருத்துகளை அக்கதா பாத்திரங்கள் வாயிலாக வெளியிடுகின்ருர்கள். தாம் வாழுகின்ற சமூகம் எப்படியோ, அப்படியே இலக்கியங்களும் எழுத்தாளர்களால் படைக்கப் படுகின்றன, சமூகம் மேடு பள்ளமுடையது. இலக்கியமும் அவ்வண்ணம் அமைதல் நியதியே. சமூகத்தினிடையே தீய சக்திகள் உயர்வு தாழ்வுகளைச் சிருட்டித்துக் கொண்டிருக்க, இலக்கியங்களின் வாயிலாக எழுத்தாளரின் தூய சக்திகள், அவ்வுயர்வு தாழ்வு

களைச் சமன் செய்து நிற்பதை நாம் காணலாகும்.

சமூகத்தில் உண்டாகின்ற மேடு பள்ளங்களைச் சமன் செய்து, சீரிய நாகரிகப் பண்புவாய்ந்த நல்ல தோர் சமுதாயத்தை அமைத்தற்கு உதவுகின்ற இலக்கிய சேவை அமரத்துவம் பெற்றதாகும். மக்கட் சமுதாயமானது சூழ்நிலைக் கேற்ப உருவாகின்றது. அறிவு, அனுபவம், பழக்கங்கள் காரணமாக விருத்தியாகின்ற மனப் பண்பின் அளவாக, மக்கள் வாழ்க்கையில் இலட்சியங்கள் இடம் பெறுகின்றன. இலட்சியங்கள் பல வெனினும் இலட்சியப் பயன் ஒன்றே என்று நாம் உணர்தல் வேண்டும்.

தத்தம் மனவியல்புகளுக் கேற்ப இயன்ற இலட்சியங்களைக் கடைப் பிடித்து வாழ்கின்ற நல்லோரும், இலட்சியப் பாதையிலே செல்லு தற்கு இயைந்து, அந் நல்லோர் கூட்டத்திற் சேர்தற்கு விரும்பி முயல்கின்ற நன் மக்களும் சமூகத்திலே சிறப்புடைய அங்கத்தினராகத் திகழ்கின்றார்கள். சமூகத்திலுள்ள மற்ற அங்கத்தினர்களுக்கு இவர்கள் வாயிலாக நல்லியல்புகள் கை கூடுகின்றன. உலகம் வாழ்கின்றது. எல்லாரும் இன்பங் காண்கின்றார்கள்.

பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

என்னுந் தமிழ் மறையானது, உலகினை வாழ்வித்து நிற்கின்ற பண்பின், மக்கட் பண்பின் அருமையை அழகாகக் கூறுகின்றது. பண்பே உலகுக்கு உயிர் போன்றது. பண்பு வளர வளர இலட்சியங்களும் வளர்கின்றன. இலட்சியங்களை அலட்சிய புத்தியோடு நோக்குகின்ற மக்களும் மனமாற்றமடைகின்றனர். சமூகம் ஒரு புதுமலர்ச்சியடைகின்றது. பண்பு மணத்தை மேடு பள்ளம் நிறைந்த உலகம் சுவாசிக்கின்றது. சமநிலை காண விழைகின்ற சமுதாயம் அங்கே உருவாகின்றது.

—★—

## கலையும் விலையும்

— ★ —

ஓவியர் கொண்டியாராஜ் ஓர் அதிசய மனிதர். பல தெய்வ படங்களை அற்புதமாகத் தீட்டிய அவர், புதிதாக ஒரு சரஸ்வதியின் அல்லது இலட்சுமியின் படம் வரைய விரும்பினால் ஓர் ஐயாயிரம் ஆறாயிரம் ரூபாய் எடுத்துக்கொண்டு அப்படத்துக்கு ஏற்றதான பெண்ணைத் தேடிப் புறப்பட்டுவிடுவார்.

அத்தகைய ஒரு பெண்ணைத் தேடிக் கண்டுபிடித்து, அவளுடைய சம்மதத்தைப் பெற்று, ஒப்பந்தம் செய்து, அவளை வரையும் படத்திற்கு ஏற்றதாக அலங்கரித்து, வரைந்து, அந்த ஓவியத்தைப் புகைப்படம் பிடித்து 'புளக்' செய்யப்படும் வரையில் கையில் இருந்த ஐயாயிரம் ஆறாயிரம் ரூபாயும் கரைந்துவிடும்.

ஐயாயிரம் ஆறாயிரம் ரூபாயைச் செலவழித்து, ஓர் ஓவியர் படம் வரைந்தெடுப்பது அதிசயமாகத் தோன்றுகிறதல்லவா? ஆனால் அந்தப் படத்தின் 'புளக்' கை வைத்துக்கொண்டு, வியாபாரிகளைக் கூப்பிட்டு அதை ஏலத்தில் விட்டால் அதன் விலை எவ்வளவுக்குப் போகும் தெரியுமா?-இருபதினாயிரத்துக்குமேல்.

அந்த இருபதினாயிரத்தையும் வைத்துக்கொண்டு ஓவியர் தமாஷ் பண்ணித்திரிவார். ஆனால் அது ஐயாயிரம் ஆறாயிரத்துக்குக் கரைந்தவுடன் திரும்பவும் ஒரு பெண்ணைத் தேடிக்கொண்டு புறப்பட்டுவிடுவார்!

ஓவியக் கலைஞனுக்கு விலை அதிகம்தான். ஆனால் நிலை?



உங்களுக்குத்

தேவையான ...

★ பத்திரிகைகள்

★ அழகு சாதனங்கள்

★ திறம் சுருட்டு, புகையிலை

★ மற்றும் தேவையான
பல பொருட்களுக்கும்

இன்றே
எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.





# முருகன் ஸ்டோர்ஸ்

## கல்முனை.

''நோவன்னு''

# — பழி —

''ராணிக்கு,

என்னை நீ நம்பிக்கைத் துரோகி வஞ்சகன்என்றெல்லர்ம்இது படித்த பின்பு திட்டலாம்; சபிக்கலாம் ஆனால், அவையெல்லாம் என்னை இனிச் சிந்திக்கவைக்கவோ — நான் கொண்டுள்ள முடிவை மாற்றவோ . செய்யாது. ஆழமறியாது காலை வைத்து விட்டேன். 'ஆபத்தான காரியம் அது' என்பதை நான் இப்போதுதான் உணர்கிறேன். நமது 'தொடர்பு' கனவாகவே போகட்டும்! நீ எனக்கு நல்லவளாக இருந்தாலும்... ஊர் சிரிக்கும் உனது குடும்பத்தில் நானும் ஒருவனாக விரும்பவில்லை — இப்படிக்கு, உனக்காக பரிதாபப்படும் இதயன்.''

அன்னம்மாவின் பெற்றவயிறு பற்றியெரிந்தது. பாவம்! பெண், அவளால் வேறு என்னதான் செய்துவிட முடியும்? கணவனைப் பறிகொடுத்து மூன்றுவருட காலமாகி விட்டது. ஆயினும் அந்தத்துயர்— ஆறுத்துயராக அவள் இதயத்தில் வேரூன்றி விட்டது. அந்தத் துன்பச் சுமையை ஒருவாறுபல்லைக்கடித்துக் கொண்டு தாங்கி, வாழ்ந்து வரும் இந்த இலட்சணத்தில் தான், அவளது கண்ணுக்கு கண்ணான — உயிருக்கு உயிரான மகள் ராணியின் இளமை உணர்வுகள் — எதிர்காலக் கனவுகள் — வாழ்வு எல்லாவற்றையும் கருகிவிடச் செய்த — இதயனின் கடிதம், அன்னம்மாவின் துயர் படிந்த —உள்ளத்தைக் குழப்பி விட்டது.

''பிதாவே! எண்ட உசிர ஏனின்னும் போட்டு வெச்சிரிக்கியோ...? இந்தக் கண்ணளி வெல்லாம் நான் ஏன் பார்க்கவேணும்? நான் ஆர்ர எரணத்தில — மண்ணள்ளிப் போட்டன்...... என்னத்தான் வாழ உடல்ல... எண்ட புள்ளட சந்தோஷத்தையுமா...?'' அன்னம்மா — முந்தானைச் சேலையால் புனித்த கண்களில் புலம்பல்... விசும்பல்... இவை தானா அவள்தன் வாழ்க்கையில் கற்றகலை? ராணி — பாவம், அந்தப் பிஞ்சுமனம் ஏக்கத்தால் விம்மிவிம்மிப் புலம்புகிறது. அன்னம்மாவால் இதைத்தான் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

கடிதம்—அவன்தான் அவள் காதலன் எழுதிய கடிதம், ராணியின் விழிநீர்த்தி வலைகள் பட்டு..... நனைகிறது—எழுத்தும் கரைகிறது...!

ராணியின் மனம் அந்த ஒரு சில நிமிடங்களில்...... இதயனோடு பழகிய நாட்களை... அவனோடுஇன்பமாக கதைபேசி மகிழ்ந்த நாட்களை... ஆசைக்கனலை நெஞ்சில் கொழுந்துவிட் டெரியச் செய்த சுவைமிகு கடிதப் பரிமாறல் நிகழ்ச்சிகளை.. சுற்றிச் சுழல்கிறது. ஒரு நாள் — அவர்கள் அன்று தான் தனிமையில் சந்தித்த முதல் நாள். சந்திக்க வேண்டும். சந்திக்க வேண்டும்' என்று வெகு நாட்களாகவே தவியாய்த் தவித்திருந்த இரண்டு அன்பு — நேச மனங்களும் அன்று சந்திப்பு' நிகழ்ந்ததும், இருவருமே, நெருங்கமுடியாத ஒரு புதிய மயக்கத்தில் திளைத்து ஏதோ இன்பலாகிரியில் சஞ்சாரம் செய்வது போன்ற பிரமை வசப்பட்டு... வாய்திறக்கமுடியாது 'ஊமை'களாய்ப் பிரிந்துபோன... அந்த மனோரம்மியமான சம்பவத்தையும் ராணியின் மனம் உன்னி ... உன்னி.. வேதனையின் விளிம்பிலே நின்று தவிக்கிறது. தணற்புழுவின் தவிப்பு அவளுக்கு.

கரைந்தும் கரையாமலிருக்கும் அந்தக் கடித எழுத்துக்களில் மீண்டும் அவள் கண்கள் படர்கின்றன.

'ஊர்சிரிக்கும் குடும்பத்தில் ஒருவளுகை...' அதற்குமேல் அவளால் — இல்லையில்லை — அவள் கண்களால் ஒரு இம்மி கூட நகர முடியவில்லை. நெஞ்சம் வெடித்து விடுவது போன்று... சூடேறி... அந்த உஷ்ணம், காலிலிருந்து உடல் — உச்சந் தலையீருக வியாபிக்கிறது.

'ஊர் சிரிக்கும் குடும்பம்' என்று ஊருக்குள் எங்கும் பேசிய போது கூட ராணியின் மனம் அவ்வளவாக நோகவில்லை. வருந்தவில்லை. ஆனல், அதையே தன் இதயன் சொன்னபோதுதான் அந்த வார்த்தை எவ்வளவு கொடுமையானதென்பதை உணர்ந்தாள் ராணி. உண்மையில் அந்தக் குடும்பம் ஊர் சிரிக்க நடந்ததா? — அதுதான் இல்லை. ஊர் அப்படியாகக் கதை கட்டிச் சிரிக்கிறது......!

யோசப் என்பவருக்கு இம்மானுவேல் பாதிரியார் நெருங்கிய நண்பர். அவர்கள் இருவரும் ஒரே பாடசாலையில் — ஒரே வகுப்பில் பயின்றவர்கள், இம்மானுவேல், 'பாதிரியார்' ஆனபிறகு கூட யோசப்பை மறந்துவிடவில்லை. அவர்கள் நட்பு நீடித்தது. யோசப்பிற்கு திருமணமாகி ஒரு பெண் பிள்ளையும் உண்டு. அவன் மனையாள் தான் அன்னம்மா. மகள் தான் ராணி. ராணிக்கு வயது பதினைந்தாகும் போது, யோசப் இரத்தக் கொதிப்புக்கு இரையாகி விட்டார். புருஷனை இழந்த அன்னம்மா நிர்க்கதியாகி — மாளாத்துயரில் வாடிக் கலங்குவதை இம்மானுவேல் பாதிரியார் அறிந்து மனமிரங்கினர். அவ்வப்போது சிலபல சகாங்யகள் செய்து வந்த அவர், அன்னம்மாவை ஒரு 'இடியப்பக்காரி'யாகவும் ஆக்கி விட்டார். ஆம், ஒரு சிறு 'முதல்' நிதியாகக் கொடுத்துதவி ஏதாவது 'வியாபாரம்' செய்து வாழும்படி யோசனையும் சொன்னர் — பாதிரியார். அன்னம்மா, பாதிரியாரின் யோசனையை அனுசரித்து 'கடையப்பம்' சுட்டு விற்று, அக்கம் பக்கத்தாரிடம் கையேந்தி வாழும் இழி நிலைக்காளாகாமல் ஏதோ.. ஒரு படியாக சீவியம் நடத்தி வந்தாள்.

ராணியை கல்முனை 'கார்மல் கொன்வென்ற்'றில் கல்விபயிலச் சேர்ப்பித்தார் பாதிரியார். ஒரு குறையுமின்றி அன்னம்மாவின் குடும்பம் இயங்கி வந்ததனுலோ... என்னவோ அயல் வீடெல்லாம்' குசு குசு'க்கத் தொடங்கின. பாதிரியார் அன்னம்மா வீட்டுக்கு வந்து போவதை வைத்து ஊருக்குள் 'கயிறுதிரிப்பு' வேலை மிகவும் துரிதமாக நடந்தது. 'சாமியாரும் அன்னம்மாவும் குடும்பம் நடத்துருங்களாம்.' அன்னம்மாவுக்கு இது விஷயம் காதுக்கு எட்டியது. சாகாமல் இன்னும் இருப்பதே பெரும் பாவம் என்றெண்ணி சித்தம் தடுமாறி... வேதனைத்தீயில் வெந்து கருகினுள் அன்னம்மாள். பாதிரியாருக்கும் 'விஷயம்' எட்டி விட்டது. தன்னல் அன்னம்மாவுக்கு கெட்டபெயர் உண்டாகி விட்டதே அன்னம்மாவின் களங்கமற்ற வாழ்விற்கு வீண்பழிகள் நேர்ந்து விட்டதே எண்றெண்ணிக் கலங்கி அன்னம்மா வீட்டுக்கு வருவதை நிறுத்திக் கொண்டார் பாதிரியார். ஆனல் வராமல் விட்டாலும் பாதிரியாரின் அன்பு மனம் — கருணைக் குணம் இவர்களை நாடாமல் இருந்ததில்லை. நாடியது கடித ரூபத்தில்!

ராணி படித்து, பரீட்சையிலும் தேறி பாதிரியாரின் பேருதவியால் படித்த பாடசாலையிலேயே படிப்பிக்கும் தொழிலில் அமர்த்தப்பட்டாள். அவள் ஆசிரியையாகி சில மாதங்களின் பின் இளமை உணர்ச்சிகள் நெஞ்சில் 'சில்'லிட 'வாழ்வோம்வா' என அழைத்த இதயன் என்ற இளைஞனின் பார்வையின் வசமானுள் ராணி. அந்த இளைய உள்ளங்களின் இன்ப உறவு நீடித்து நெருங்கி.. ஒன்ருேடொன்று சேரும் தறுவாயில்தான்...

வெண்ணெய் திரண்டு வரும் போது தாழி உடைந்த கதையாகி விட்டது. ஆம். ஊர் ஊதி விட்டது இதயனின் காதில்! உறங்கியிருந்த ஊரில் குறட்டை விட்டிருந்த எரிச்சல் பிசாசுகள் பொருமைப் பூச்சாண்டிகள் விழித்துக் கொண்டன. இதயன் ஊர்சிரிக்கும் குடும்

பத்தில் ஒருவனுகச் சேரவிரும்பாது சிரிக்கும் அந்த ஊரில் ஒருவனுகி விட்டான். சேர்ந்து அவனும் சிரிக்கின்ருன்..!

ராணி கடிதத்தை வைத்துக் கொண்டு கண்ணீர் வடித்து வடித்து அழுவதை அன்னம்மாவினுல் பொறுக்கவே முடியவில்லை. 'பேசாம இரி புள்ள... குழறுனு எல்லாம் சரியாப் போயிருமா...? பாப்பம்.. ஆண்டவன் எப்ப கண் முளிச்சுப் பாக்கா ரெண்டு...?' சொல்லி விட்டுத் தனது முந்தானைச் சேலையினுல் கண்களில் நிரம்பியிருந்த நீர்த்துளிகளைத் துடைத்துக் கொண்டு குடிலுக்குள் நுழைகிருள்.

அம்மாவின் வார்த்தைகள் ராணியின் கவனத்திற்கு எட்டியதோ இல்லையோ... அவள் சிந்தனையின் தீவிரம் சற்றும் தடைப்படவில்லை. அவள் சிந்தனை அவள் சிந்தையையே சுட்டெரிக்கிறதா..? உடலெல்லாம் சூடு கொப்பளிக்கிறது. அவளது நினைவின் தீவிரம் எதிர்கால 'தாம்பத்திய' வாழ்வை இளமை உணர்ச்சிகளை தவிடு பொடியாக்கி விட்டபின்......

அநித்திய வாழ்வை வென்று விட்ட தெளிவு அவள் முகத்தில் பளிச்சிடுகிறது. இந்தப் பிரபஞ்சமே அவளது காலடியிற் சுழல்வது போன்ற பிரமை. கண்ணீரைத் துடைத்தாள். அந்தத் துடைப்பில் 'ஆசாபாசங்கள்' அழிகின்றன...! இப்போது அவள் கண்களில் ஒரு புது ஒளி...! பொலிவு...! அவள் பார்வைக்குத் தெரிவ தெல்லாம் தேவாலயம்... ஞானப் பிரகஸ் பதிகள்......!

அவள் சிந்தனை ஒருப்படுகிறது. சுமை நீங்கிய சுகம்... தெளிவு...! அந்தத் தெளிவில் எவருமே அசைக்க முடியாத ஒரு உறுதி... பிரதிக்ஞை...! அந்தப் பிரதிக்ஞையின் வடிவம்...... துறவு!

# வாடிய மலர்

இரண்டு புலவர்களுக்குள் தம்மில் யார் பெரியவர் என்ற விவாதம் உண்டாயிற்று.

தம்முடைய விவாதத்திற்கு மத்தியஸ்தம் வகிக்கும் படி கலைத்தெய்வமாகிய சரஸ்வதியை வேண்டினர்.

சரஸ்வதி மனமிசைந்தார். ஆனுல் இருவருள் யார் சிறந்தவர் என்று தேவியால் கூறமுடியாது போய் விட்டது. இரண்டு பேரும் அவ்வளவு திறமையாக, ஒருவருக்கு மற்றவர் விட்டுக் கொடுக்காமல் பேசினுர்கள்.

தேவியார் யோசித்துவிட்டு ஒரு யுக்தி செய்தார். இரண்டு மலர் மாலைகளை இருவருக்கும் அணிவித்து, தொடர்ந்து இருவரையும் விவாதிக்கச் சொன்னுர்.

தொடர்ந்து விவாதித்தார்கள். சிறிது நேரத்தின் பின் ஒருவருடைய மாலை கருகியது. மற்றவருடைய மாலை பழைய செழுமையோடு விளங்கியது.

இரண்டாமவருக்குத்தான் வெற்றி என்ருள் தேவி. ஏன்?

ஏனென்ருல் முந்தியவர் விவாதிக்கும் போது, அவர் கோபத்துக்குட்பட்டு, அதனுல் பிறந்த வெம்மையான மூச்சு மலரைக் கருக்கியது. மற்றவர் கோபப்படாமல் நிதானமாகத் தம் கருத்தைச் சொன்னுர்.

இந்த நிதானந்தான் விமர்சகருக்கு வேண்டியது.

# போடிமகள் பொன்னம்மா.

—(✱)—

ஓமெண்றன்.........

ஒலகங் கெட்ட கேட்டுக்கு!

எனக்கிந்தக் கத காலுகள்புடிக் காது கண்டயளோ!

என்ன கண்டறியாத கதகாலு கள்.........

.........சொறிஞ்சிக்க நகமில்லாமக் கெடந்தத்துக்கெல்லாம், ஒள்ளுப் பம் தராதலம் வந்திற்றெண்டாப் பல..., இதுகளும் சந்தி சவையில பந்தி பாவாடையில மனிசன் மாஞ்சாதியெண்டு ஏறத்துவங்கிற் ருப்பல இந்த ஊர உண்டாக்கின வன் ஆரு...? இதக்கட்டியாண்ட வன் ஆரு? நெனச்சிப் பாக்குது களா...ஓங்கா...காலங்கெட்டகேட் டுக்கு! அதுகளுக்கு வந்த பவுசும் தாக்கத்தும்! ஓமெண்றன்...

வெள்ளக் காச்சட்டையும் வீடு வளவு வெள்ளாமையும் வந்திற் றெண்டாப்பல..., இதுகள் பட்ட சிறுமானியங்கள் ஒண்டும் எங்க ளுக்குத் தெரியாதாகா...நாங்க எந் தச் சிங்கப்பூர் சீமையில இருந்து வந்தகா... ஆ? நான் லேசில வாயத் துறக்க மாட்டன்! துறந்தனே...... புறகு இவய சீலைக்க புடவைக்க ஒண்டையும் வச்சிரிக்கத் தேனு வல்ல! புட்டுப் புட்டு வச்சிருவன் வெட்டயால! இவியிர பொட்டுக் கட்டுகள் ஆருக்குத் தெரியாகா ... கதைக்க வந்தித்துகள்! ஓங்கா...... காலங்கெட்ட கேட்டுக்கு ஓமெண் றன்......

களமுதறிக் கஞ்சி குடிச்சதுகள் எங்க பெத்தம்மையிர கோடி வேலி கட்டிக் கொண்டு போய்ப் புளச்சது கள், அவண்ட இவண்ட கச்ச புளி ஞ்சி காச்சி குடிச்சதுகள் எல்லாம் இப்ப மனிசனுப்போச்சிகள். சோறு தின்ற வட்டிவையும் சேருவக்கால யும் கொண்டு குடுத்துப்போட்டு, பல்லக்காட்டி எண்ட மாமன் மானு கப் போடி பட்டற துறந்து அளந்து குடுக்க...... திண்டு புளச்சதுகளெல் லாம்...... அதுகள் கக்குன வெண் ணெரைய மறந்துபோய்... பேசுற பேச்சுகள்ற தராதலத்தப் பாரு... நுண்ணுரியத்தப்பாரு... ஓங்கா...... ஒலகம் கெட்ட கேட்டுக்கு! ஓமெண் றன்......

நான் இவியளுட்டயெல்லாம் என்ன கேட்டுப்போற...... எட்டில தப்புல... ஒரு காக்கொத்து அரக் கொத்தரிசி கேட்டுப்போனுப்பல... இவியளுக்கு தாறத்துக்கென்ன? சும்மாவா... கடனக் கட்டப் பட்டு இறுக்காமசெத்தா போயிருவன்...?

''என்னத்த நம்பி உனக்குக் கடன் தாறது? அரிசி அரிசியெண்டு வாங்கித்துப் போனுப்பல போதுமா வாங்கினத்தத் திருப்பித்தர வேணு மே! உன்னப்போல பொண் புரசு கள் உளைச்சிப் புளைக்கல்லயா? ஏன் நீயும் என்னவும் தொழிலச்செய்தா என்ன?'' எண்டு புது நாணயமான புத்தி சொல்லுதுகள்! அந்தக்காலத் தில எண்ட அப்பன் இதுகளுக்குச் சொன்ன கதயளப் பாடமாக்கி வச் சிருந்து இப்ப நமக்குச் சொல்லுது கள். ஓங்கா!... ஒலகங் கெட்டகேட் டுக்கு ஓமெண்றன்......

**அம்மாச்சி ஆறுமுகம்**

எண்ட அம்ம என்ன அப்பிடி இப்படியா வளத்தவள்...... அடல அடலயா சோத்தில பேத்து வச்சி

இளஉறத்தயிர்ல......ஆடையோட வெட்டி வச்சி, கதலி வாழப்பழம் ஒண்டொண்டுமுன் னங்கைப்பருப்பம் உரிச்சிப்போட்டு சக்கரப் பாணியில யும் கொட்டுவா அம்ம! ஆசையில போட்டுப் பிணைஞ்சி போட்டு அப் பிடியே வட்டியோட போட்டுத்து எழும்பிருவன்! ஏங்கா...... இந்தப் நசுக்குத்தின் திண்டுதானுகா நீ ஆளாச் சங்கையா ஆகிற எண்டு கேப்பாவு அம்ம. நானுட்டுத்து எழும்பின வட்டிய வழிச்சி நக்குன துகள்... நண்டியத்துப் பேசுதுகள். திண்டு கழிச்சதுகளிட்ட போக வேணும் கடன் கேக்க எண்டு முன் னுள்ளவன் சொன்னதுபொய்யாகா பின்ன...? அறங்கையும் அத்து நக்க புறங்கையும் அத்துக் கிடந்ததெல் லாம் இப்ப பெரிய எடுப்படிக்குது கள். ஓங்கா......! ஒலகம் கெட்ட கேட்டுக்கு . ஓமெண்றன்!

அவர் ஒராள்...அவர்ர வீட்ட வேலகாறிக்கு வரட்டாம். சோறுஞ் சீலயுமா நல்ல சொகமா இரிக்க லாமாம் மாதா மாதம் சம்பளமுந் தாராரும்...! கொள்ளி கொத்துற வன் எண்டும். கோடிக்கு தண்ணி வைக்கிறவன் எண்டும்......தேங்கா திருவுறவன் எண்டும் தட்டு வேலி கட்டுறவன் எண்டும் எங்கப்பண்ட அடும வேல வெட்டி செஞ்சி புளைச் சதுகள்... எத்தின ஆயிரம் பேர்... அப்பன் குடுத்த சோத்துக்கு கணக் கென்ன...சம்பளம் சாடிக்குக்கணக் கென்ன? அதெல்லாம் மறந்து போயுத்துகள்! இப்ப என்னடாண் டா அதுகள்ற அடுப்படி வேலைக்கு நம்மக் கூப்புடுதுகள்!

வெடியரசிப் போடியெண்டால் குடியெல்லாம் நடுங்கும். எண்ட அப்பன் அப்படி இப்பிடிப் போடி யாகா......? அவர் ஊர்ப்போடி! போடி மகன் போடி... ... பரம்பரப் போடி! அவர் இந்த ஊரக்க[illegible]டி யாண்டாப்பல இன்னும் ஒருவர் பாக்கயா......? அதில வேலல்ல! சுதந்திர நெல்லு மட்டும் வாசல்ல அஞ்சி அட்டுவம் அட்டுவம்எண்டா அப்பிடி இப்பிடி அட்டுவமில்லக்கண் டயோ... அட்டுவத்துக்கு மேல நாடங்கொடி எறிப்படந்து, காய்ச் சிச் சொலிச்சுட்டுக் கிடக்கும்! வயிர வனுக்கு அடுக்குச் சாத்தின பொல்லுகள் போல அங்க கண் கொண்டுகள் பார்க்கொண்ணு...... அதிர பசுந்து!

மாரி மழ வந்து அடச்சிப் புடிச் சிர வேணும்...கருத்தலப் பஞ்சம் வந்திரும் எங்கட வளவு வாசல் தாங்காது சனம்! அதுகள்ற பட்டி ணியக் கேட்டு அப்பன் சிரிக்சிப் போட்டு அட்டுவம் துறந்து அவர் அளந்து குடுத்த நெல்லுக்கு ஒரு கணக்கா வழக்கா......!

நெல்லு வித்துக் காசுகள் கை யில வந்திர வேணும் அப்பன் தட் டார மாங்குட்டிக்கி வியளம் சொல்லிக் கூப்புடுவாரு. ஒரு வரிசம் போட்ட நகை, அடுத்த வரிசம் போட்ட மாடம். அழிச்சி அழிச்சி வண்ணத்துக்கொண்டு வகைக் கொண்டு செஞ்சி தருவார். அம் மையும் நாங்களும் பொன்காச்ச மரந்தான்! கோயில் கொண்டாட் டம் கூத்துக் கீத்தெண்டு வெட்டக் கிறங்கிற்றுப்பாக்க வேணும்...ஊர் தேசம் ஒதுங்கி நிண்டு... பாக்கும் அம்மையிர காசி மேசன் பட்டுப் புடவ நக நட்டயெல்லாம் எண் டம்ம இந்த ஊர்ல ஒரு ராசாத்தி மாதிரி இருந்து அரசாண்டவள்! இண்டைக்கு, கழுத்தில கீர மணிக் கும் — காதில ஓலச் சுருளுச்கும் வழி யில்லாமக் கிடந்ததெல்லாம் இப்ப தராதலத்தில நிக்குதுகள்! நகயள இரவல் வாங்கிப் போட்டுப்போட்டு ஊரார்தேச்சுத்தள்ளுனஎத்தினவிரா கன் பொன்! எண்டு உங்களுக்குக் கென்னடி தெரியும்! நேத்து நீ கண்ட தங்க நகய நாய் வாற கடப் பில கட்டு! நாயிர... தேன் வச்சா நாய்தான் திரும்பி நக்கவேணும்! இயின திரியுறுரே மாய்ற்றரோ...... ஓய்ற்றராம்! இவருக்கென்ன நான் சும்மா கிடந்தா.? சட்டி பானை வைக்கட்டாம்! பொட்டி சுளகு இழைக்கட்டாம்! இடியப்பம் புட்ட விச்சி விக்கட்டாம்...... அதுகள்ல ஈனமில்லையாம்! ஓங்கா...... ஒலகம் கெட்ட கேடடுக்கு..... ஓமெண்றன் எண்டப்பன் வெடியரசிப்போடி! நான் கெட்டாலும் செட்டி கிழிஞ்

சாலும் பட்டு! இதுகள என்ட சாதி சனம் சந்தானம் அறிஞ்சா நஞ்சி தின்டு நாண்டுருவானுகள்! நான் பட்டினி கிடந்து செத்தாலும்... என்ட குலத்துக்கு ஈனம் உண்டாக்க மாட்டன். எங்கட தகுத்துகள இதுகளுக்கென்ன தெரியும்! அதுகள் செய்து புளைச்சத நமக்கும் சொல்லிப் பாக்குதுகள்!

ஊர்ல காசு தெண்டி என்டப்பன் கட்டிக்குடுத்த கோயில் கிணத்தில தண்ணியள்ளிக் குடிச்சிற்றுக் கிடந்ததுகள்... நாம ஒள்ளம் தண்ணியள்ளப் போனு வக்கணம் கதைக்குதுகள். ஏன் எனக்குக் கிணறில்லாமயா... துலாந்து துலாக்கால் கழண்டு போய்த்து. ஆண் துணை இல்ல... அதப்போட்டுக்க. மண்ணுக்க கிடந்தா இறந்து போகுமெண்டு போட்டு வண்ணானுக்குக் கொள்ளிக்கு வித்துப் போட்டன். அப்பிடி இப்பிடித் துலாந்தா அது திருக்கொண்ட வயிரம்! அப்பன் தேடிப் போட்டுக் கிடந்த படியா போன மாரிக்கு வித்துத் தின்டன். அதெல்லாம் இதுகளுக்கொரு பகுடி துலாந்தையும் வித்துத் தின்றதா? என்டு கேக்குதுகள்! கைவாளி கிணத்துக்க... அது ஆறேழு மாசத்துக்கு முந்தி விழுந்த! மாரி மழ... எடுத்துக்கல்ல. அதுக்காக அடுத்த வீட்ல தண்ணி அள்ளுறல்லயா?...

இடியப்பக்காறி கடன் கேப்பாளே என்டுபோட்டு நித்திரக்காறிபோல படுக்கன்... புட்டுக்காறி நேரத்தோட வந்து... ... தந்தான் வாங்கிப் போட்டன். இடியப்பக்காறிக்கும் புட்டுக்காறிக்கும் போட்டி! இந்த விடியச் சாமத்தில அடுத்த ஊர்ல இருந்து ... ... மழ தண்ணியெண்டு பாராம... புட்டும் இடியப்பமும் அவிச்சிக் கொண்டு வந்து விக்காளுகள் இதுகளும் ஒரு புளைப்பா! இடியப்பக்காறி வாறுள் போல... ஓ...... ஓ...! அவள்தான். பேசாமப் படுப்பம்... அதுக்குள்ள இந்த நாசமத்த கொட்டாவி...... கோயில்ல சங்கூதுறுப் பல!......

கடன்காறர் நடயா நடந்தாப் பல நான் என்ன செய்யிற. கடனக் கட்டப் பட்டுத் தின்டத, கடனக் கட்டப்கட்டுத்தான்இறுக்கவேணும் அதுக்காக... அப்பச்சட்டி வைக்க... அவியளுக்கு இவியளுக்கு ஊழியம் செய்யப் போகலாமா? அதெல்லாம் என்ட குலத்துக்கு ஈனமெண்டு தான் சிவனே விதியே என்டு... ... கிடக்கன். அதப்பாத்து இந்தஊர்ல இரிக்கிற கஞ்சாங் கொத்திகள் என்னெல்லாம் கதகாலுகள் கதைக்குதுகள்... ஓங்கா.....! ஓலகம் கெட்ட கேட்டுக்கு!... ஓமெண்றன்!

வெடியரசிப்போடியெண்டால் குடியெல்லாம் நடுங்கும்! என்டப்பன் என்ன அப்பிடி இப்பிடிப் போடியா? அவர் ஊர்ப்போடி! போடி மகன் போடி! பரம்பரப் போடி! அவர்ற மூத்த மகள் நான்! போடி மகள் பொன்னம்மா!

என்னப் பாத்துக் கதகாலுகள் கதைக்குதுகள்...... ஓங்கா.. ஓலகங் கெட்ட கேட்டுக்கு.. ஓமெண்றன்.

✻

பாடும்மீன் இதழில் பிரசுரிக்க கதை, கவிதை, கட்டுரைகள் அனுப்புவோர், கடதாசியின் ஒரே பக்கத்தில் தெளிவாக மையினால் எழுதி அனுப்பக் கோருகிறோம். தங்கள் விடயங்களைத் திரும்பிப் பெறவிரும்புவோர் போதிய தபால் தலை இணைக்கவேண்டும்.

# வெளுத்துக்கட்டு

— நீலாவணன் —

கேளப்பா ஊர்ப்போடி உலக நாதா,
கிட்டவந்து நான்கூறும் ரகசியத்தை;
ஆளப்பா ஊரை அழகாக; உன்னை
ஆரப்பா அதிகாரம் செய்தல் கூடும்?
ஏழை பர தேசி, பிற எழிய சாதி
எல்லோரும் உமக்குமரி யாதை செய்வார்!
நாளக்கட் டாட்டங்கள் போட்டுத் தூய்ய
தமிழ்பேச வல்லவனை நீ தலை சாயாதே!

எங்கையடா வண்ணானைக் காணவில்லை?
என்றேநீ அதட்டுகிற இடி யோசைக்குச்
சங்கை செய்வான் கம்மாஞ்சி சால்வை தாழ்த்தி
சவம் தூக்க வேணுமென்பாய்; போடியாரே,
எங்கடனைத் தாருமென்பான் வண்ணான் கூனி;
எதிர்த் தோடா பேசுகிறாய் கழுதை! நாயே,
உங்கள் ஊர் இல்லையிது கவனம்! என்பாய்;
ஓம் ஓம் ஓம்! என ஒதுங்கி நிற்பான் வண்ணான்.

அம்பட்டனை கடமைகளைச் செய்ய, ஏதும்
அசமந்தம் நேர்ந்தாலும் அலறித் துள்ளி,
அம்பட்டப் பயலே உன் அலுவல் என்ன?
அடித்தேனே பல்லுடையும் என்பாய்; அந்தத்
தம்பட்டம் கொட்டுபவன் தரித்தால், டேய் டேய்
தடிப்பயலே! பறைப்பயலே! தவிலைத் தட்டு!
தும்புக்கட் டடிதருவேன் என்பாய்; அஞ்சித்
துடி துடித்தே பறையடிப்பான் தொம் தொம்! தொம் தொம்!

சாவீடு கலியாண வீடு, கோயில்,
சபை சந்தி நீயின்றிச் சரிப்படாதே!
காவோடு போகின்ற கடையன் கூட
கையெடுத்துக் கும்பிடுவான் என்றால்... உன்றன்
நாவோடு பிரியாத நளினச் சொற்கள்
நாலைந்தே காரணமாம்! நன்றே! நெஞ்சில்,
நோவோடு பறைவண்ணான் போனால்... உன்னை,
நொட்டிவிட வா முடியும் போடியாரே!

ஃ ஃ ஃ

கன்னத்துக் கொண்டையினை வெட்டினாலும்,
கடுக்கனையும் காதை விட்டுக் கழற்றினாலும்,
இன்னும் இவை போன்ற பல பழைய கொள்கை
எவை எவையோ ஒழித்தாலும், எமது சாதி,
முன்னாளில் கடைப் பிடித்த கொள்கையெல்லாம்
முழுதாக அழியாமல் முதுசொம் காக்கும்
என்னருமை ஊர்ப்போடி! இது தான் செய்தி:
எதிர் காலம் பகை தீர்க்க எழுந்த துன்னை!

ஃ ஃ ஃ

'உழைப்பவர்தம் உலகமிது போடியாரே!
உம்போல உட்கார்ந்து ஊரை மேய்க்கும்.
பிழைப்புடையார் பெரியர்ராய் வாழ, நாங்கள்
பேசுதற்கும் உரிமையற்ற புழுக்கை யாமோ!
புழுக்களல்லர் தொழிலாளர்! கவனம்! நாளை
புரட்சி எழும் உம் திமிரைப் பொசுக்கித் தின்னும்!
இளக்காரம் பேசாதே! எதிர் காலத்தை
எதிர்க்க உன்னால் இயலாதே!' என்பார் போல...

ஃ ஃ ஃ

ஊதுகின்றான் பறைகுழலை; அதனை, ஓம் ஓம்
உண்மையெனத் தவிலடிப்பான் ஒருவன்! சாவில்
வாது செய்த வண்ணானே கல்லில் மோதி
வஞ்சினத்தைத் தீர்க்க அதோ பயிற்சி செய்வான்!
ஆதலினால்..., ஊர்ப்போடி உலக நாதா,
அவமானம் ஏதேனும் ஒருநாள் நேரும்!
வேதனையும் சோதனையும் விளையக் கூடும்!
விடாதே உன் வீரத்தை; வெளுத்துக் கட்டு!

சா. தருமலிங்கம்

# கூத்து!

—★—

'அவிண்ட கொண்டய கட்டிக்கட்டி ஓடக்குள்ள அந்த வம்பில பொறக்கி வண்டிக்காரச் சீனியிர ஓட்டப்பல்லன், எனக்குப் பின்னால வந்து ........ சட்டகிழிஞ்ச பொத்தலுக்குள்ள கைய விட்டு கிள்ளிப்போட்டு ஓடுறான்.'

எப்ப விடியும் எண்டு பாத்தா விடியுதுமில்ல.

நான் சின்னப் பெட்டதான். பெரியையாட வீட்ட வேலக்கிருக்கிற படியா நேரத்தோட எழும்பி எழும்பி எனக்கு நல்ல பழக்கம். ஐயாட பெண்சாதி அவவும் வாத்தியம்மாதான். விடியச் சாமம் நாலு மணிக்கு என்ன எழுப்பிப் போடுவா. நான் கட கடெண்டு வாசலக் கூட்டி, பல்லயும் தீட்டி முகம் கழுவிப் போட்டு வந்து, ஐயா வங்க எழும்ப முந்தி கோப்பிக்கும் தண்ணி கொதிக்க வச்சிருவன்.

பெரியையா வங்க மிச்சம் நல்லாக்கள். நான் ஒம்பது வயதில பெரியையா வீட்ட வேலக்கு வந்த. இப்ப மூணு வருஷம். எனக்கு மூணு வடிவான சட்டையும் தச்சு, காதில தோடும் செய்து போட்டிருக்காங்க. இன்னம் ரெண்டு மூணு வரிசம் போனா சம்பளமும் மாதம் மாதம் பத்து ரூவாத் தருவாங்களாம். அப்பன் இப்பானே சம்பளம் கேக்கார். நான் சின்னப்பெட்டயாம், அதால, ஐயாவங்க எனக்கு சம்பளம் இப்ப தரமாட்டாங்களாம். சம்பளமில்லாம சோத்துக்குத் தான் அம்ம என்ன பெரியையாவங்களுட்ட வேலக்கு விட்ட, பாவம் அப்பனுக்கு இப்ப தொழில் இல்ல. அதாலதான் பெரியையாட்ட சம்பளம் கேக்கார்.

பெரியையாவங்கட வீட்ட விட்டுத்து வாறண்டால் எனக்குக் கொஞ்சமும் விருப்பமில்ல. அப்பன் கூத்தாடுறதப் பாக்கத்தான் நான் இண்டைக்கு வந்த. கூத்துப் பாக்க எனக்கு மிச்சம் ஆச. வீமனுக்கு ஆடுறாராம். அப்பன் விருத்தம் எடுத்தாரெண்டா அது பாண்டிருப்பெல்லாம் அதிரும். பெரியையா வீட்ட, காதில அறஞ் சாப்பல கேக்கும். ராவைக்கெல்லாம் மத்தாளச் சத்தந்தான். அது கேக்கிற நேரமெல்லாம், கூத்து சலங்க கட்டுறண்டைக்கு நானும் போய்ப் பாக்க வேணுமெண்டு வாத்தியம்மாட்டச் சொல்லித்தான் இருந்த. அதுக்காகத்தான் அவங்க, நீ போய்க் கூத்துப் பாத்திற்று, நாளைக்குச் சாயங்காலமா வா எண்டு என்ன இண்டைக்கே எங்கட வீட்ட அனுப்பிப் போட்டாங்க.

வீட்ட வந்தன். ராத்திரி சாப்பிட ஒண்டும் இல்ல. என்னக் கண்டுத்து அம்ம பக்கத்து வீட்டில போய் கைமாத்துக்கு கூப்பன் மா வாங்கி வந்தா. அதுதானும் இப்ப அவங்க ஒவ்வொரு நேரமும் தின்ற. பாவம், அப்பனும் கூத்தாடிக் களச்சுப் போய் வந்து இந்த ரொட்டியத்தானா தின்ற?

விடிஞ்சதும் பெரியையா வீட்ட போனா தண்ணிச் சோறு கொண்டு வரலாம். அத அப்பனுக்குக் குடுத்தா சந்தோஷப் படுவார். எப்ப விடியப் போகுது? அதுதான்

பாத்திற்றுப் படுக்கன். பல பலத்து விடியுது. எங்க வீட்ட ஒருவரும் எழும்பல்ல. வெளியால வந்து வாசலப் பாத்தா உழுவாரெனெடுத்து, பாக்கயும் நரகலாகக் கிடக்கு. பாவம் அம்ம மெலிஞ்சு போய் நரம்பிழுபட்டுப் போய் கிடக்கா. எண்ட தம்பி தங்கச்சி நாலு பேரும் ஒரே குளப்படி. அதுகளோட மாரடிக்க ஆருக்கு ஏலும். அண்ணன், அவன் ஒரு காவாலி. ஊர்ல கோழி களவெடுக்கிறவனுகளோட கூடித்து பகலைக் கெல்லாம் கடதாசு விளையாடித் திரியுறான். வளவு வாசல் இப்பிடிக் கிடக்கு. நான் பெரியையாட வீடுவளவக் கூட்டிப் பெருக்கித்து, மூணு நேரமும் நல்லா வயிறு முட்டத் திண்டுத்து கிடக்கன்! இப்படியும் ஒரு எண்ணம் வருகுது எனக்கு. ஈக்கில் கட்டத் தேடினா, நாலு ஈக்கிலும் இல்ல; தேஞ்சு திரு முடியாக் கிடக்கு. அதால ஒரு மாதிரியா வாசல மூசு மூசெண்டு கூட்டிப் போட்டு பெரியையா வீட்ட போவம் எண்டு பாத்தா, அதுக்குள்ள அம்மைக்கும் அப்பனுக்கும் கொளுவித்து. அப்பன் தேத்தண்ணியும் குடியாம, விட்ட விடியங்காட்டில அம்மைக்கு ஏசிப்போட்டு, தண்டாயுதத்தத் தூக்கி அம்மையிர மண்டைக்கு நேர ஓங்கிப் பல்லக் கடிக்கார். பிறகு சலங்கக் கட்டையும் அவர்ர கூத்து முடியையும் தூக்கி எடுத்திற்று...... எல்லாத்துக்கும் மறுகா வாறண்டி எண்டு போட்டு வெளிக்கிட்டுப் போறார். அப்பன் கூத்தாட வெறு வயித்தோட போறெனென்னகா அம்மோ...? எண்டு அம்மையிற்றக் கேக்கன். அவர் அவண்ட கணபதியிர கடயில நல்ல புடி புடிச்சுக்கிற புள்ள எண்டு அம்ம சொல்றா.

வளவையும் கூட்டுறன். எல்லாம் முடிச்சுப் போட்டு வந்து முகத்தக் கழுவுறன் முத்துச்சாமி அண்ணாவி மாமாட மத்தாள அடி தோம் தோம் எண்டு காதப் பிச்செடுக்குது. சீதேவிப் பிள்ளையிர ஒழுங்கைக்குள்ளால கூத்துக் களரிக்கு ஓடுறன். தொடைக்கு மேல பறக்குது எண்ட சட்ட. அதக் கையால கூட்டி பிடிச்சுத்து ஓடக்குள்ள கொண்டையும் அவிண்டு போகுது.

★ ★ ★

வெம்பில தான் கூத்துக் களரி. சின்னப் பிள்ளயா இருக்கக்குள்ள அண்ணரோட கூடித்து நான் காரக்காய் ஆய வாற. காரக்காய் ஆயிற சாட்டில தவிட்டுப் புல்லுக்குள்ள இருக்கிற பஞ்சான் குருவி பிடிப்பான். இப்ப அந்தக் காரப் பத்தையளையும் காணல்ல. எங்கும் சனம் குடியேறிற்று. வேலிகளுக்குள்ள. குடிலும் கட்டியிருக்காங்க. கல்வீடுகளும் ஒண்டு ரெண்டு உண்டாகித்து. சவக்கால மாத்திரந்தான் வேலி இல்லாமக் கிடக்கு. இன்னம் கொஞ்ச நாள் போனா அதையும் பிடிச்சுருவானுகள் எண்டு பெரியையா சொன்ன.

சவக்காலைக்குக் கிட்டதான் கொஞ்சநாள் அப்பன் மாடுகட்டி-அந்த வெங்கார மணல்ல கொச்சி வழுதுல நாட்டிக் கால செய்த. காலத் துரவுகளையும் இப்ப மூடிப் போட்டாங்க. பயிருக்கு வாக்கிற துரவுத் தண்ணியில இறங்கி அப்பன் இல்லாத நேரம் பாத்து அந்த நாளயில நான் குளிச்சும் இருக்கன். குளத்துச் சுரி கொண்டு கொட்டிக் கலக்கித்தான் அப்பன் தண்ணி இறைக்கிற. அந்தத் தண்ணியில குளிச்சா மேலெல்லாம் கறுத்துப் பொருக்கு வெடிக்கிற. அந்தச் சுரியிர புண்ணியத்தாலதான் அந்த கடக்கரை மணல்ல பயிருக்கு தண்ணி இறைக்கிற தாம். இல்லாட்டி தண்ணிபாயாதாம். அதில பாடு பட்டுத்தான் அப்பனுக்கும் வெப்பு வச்சதாம் எண்டு அம்ம சொல்ற.

இப்ப ஒண்டும் இல்ல. எல்லாம் மாறிப் போச்சு இன்னும் கொஞ்ச நாளையால இதெல்லாம் றோட்டுக் கரை போல வந்திரும் எண்டு வாத்தியம்மா பெரியையாவோட கடக்கரைக்குப் போய் வரக்குள்ள சொல்றா. அதக் கேட்டு, எப்பிடி மாறினாலும் வெம்பு மணல் வெம்பு மணல் தானும் எண்டு பெரியையா

சொல்லுரர். புழுதி மணம் அவருக்குப் பிடியா தாக்கும். அந்த மணந் தான் எனக்கு நல்ல விருப்பம்.

★ ★ ★

வேப்பஞ் சருகும் அதிர காம்பு நெட்டியளும் நொறுங்கி மண லோட கலந்து போய்க் கிடக்கு. நான் அதுகள எத்தி எத்தி ஓடக் குள்ள ஒழுங்கையெல்லாம் புழுதி எழும்புது, ஓடித்துப் போகக்க வேப்பம் வேர்ல கால் இடறித்து காயும்பிஞ்சுமாக் சவண்டு போய்க் கிடக்கிற ஆமணக்கம் கந்துகளுக்கு மேலதான் குப்புற விழுந்தன் நான் விழுந்தத்த ஒருவரும் காணல்ல. துடிச்சு பதச்சு எழும்பிப் பாத்தா பின் பக்கத்தால இடுப்புக்குக் கீழ எண்ட சட்ட கொஞ்சம் கிழி ஞ்சு போச்சு. சட்டையெல்லாம் ஆமணக்கம்பால். பெரியையா ஏசு வாரே எண்டு பயத்தில நிக்கன், கூத்துக்களரியில பெரிய கொம்ப லும் கூக்குரலும் எழும்புது. அப் பண்ட சத்தந்தான் உரமாக் கேக் குது. சட்டயக் கவனிக்காம கூத் துக் களரிக்கு ஒரே ஓட்டமா ஓடு றன். அவிண்ட கொண்டயக் கட டிக் கட்டி ஓடக்குள்ள அந்த வம் பில பொறக்கி, வண்டிக்காரச் சீனி யிர ஓட்டப் பல்லன் எனக்குப் பின் னுல வந்து சட்ட கிழிஞ்ச பொத்த லுக்குள்ள கைய விட்டு கிள்ளிப் போட்டு ஓடுறுன். ஆளத் துரத்திப் பிடிச்சு முதுகில மொங்கு மொங் கெண்டு ரெண்டு குத்துக் குளிச போட்டன். தூண்டல்ல பட்ட அவல் பனையான் மாதிரிக் கிடந்து துடிச்சவன், எழும்பித்து வந்து, கொப்பன் தாண்டி கூத்தக் கெடுத் தான்! கொப்பந்தாண்டி கூத்தக் கெடுத்தான்! எண்டு என்னப் பாத்து ஏசி ஏசிக் குழறுறுன்.

கூத்துக்களரியில அப்பன் எங்க நிக்கார் எண்டு கண்டு பிடிக்க முந் தியே, அந்தக் கொம்பலுக்குள்ள, அப்பண்ட சத்தம் பெரிசாத்தான் கேக்குது.

'சீச்சீ, நான் கூத்தாடுறல்ல. நம்மில ஒருவரும் மினக்கெடத் தேவல்ல. அதில வேலல்ல. துப் பரவா ஆடமாட்டன்' எண்டு அப் பன் சொல்றதக் கேட்ட பிறகு தான் ஓட்டப்பல்லன் சொன்னது எனக்கு விளங்குது.

'அப்பிடியெண்டா வந்திருக் கிற நாலூர்ச்சனத்துக்குள்ள நம் மட ஊர்ர மானம் போறதா நாகன்?' எண்டு ஆரோ ஒராள் அப் பனிட்டக் கேக்கிர் கோபத்தோட தான்.

அப்பனுக்கு ஆத்திரம் பொங் குது. 'நான் வரிக்காசு கட்டல்ல எண்டாப்பல இவ்வள சனத்துக் குள்ள வச்சு சங்க குறைச்ச பிறகும் நான் கூத்தாடவா? நான் என்ன வந்தோட்டி வரத்தோட்டியா உங் கட வரிக்காசு தராம ஓடிப் போறத் துக்கு இண்டைக்கு நேத்துத் தராட் டியும் நாளைக்கி நாளையண்டைக்கு தராமப் போயிருவனே! இந்தச் சத்தா சமுத்திரத்துக்குள்ள வச்சு, டேய் நாகா என்ன உண்ட போக் கணங் கெட்ட வேல... வரிக்காசு கட்டாமக் கூத்தாடலாமா? எண்டு நீ மட்டும் கேக்கலாம் இலுவா! சீ! இனி உசுப்பையும் ஏலா! நான் இனித் துப்பரவா ஆட மாட்டன் களரியில கால் வைக்க மாட்டன், எண்டு ஈர்ச்சுங்கான் மீன் மாதிரி சுழண்டு வாருர். என்னக் கண்டு த்து, 'புள்ள நீ ஓடு வீட்ட' எண்டு உறுக்கிச் சொல்லுரர்.

'வரிகட்ட வழியில்லாதவனெல் லாம் என்ன துணிவில கூத்தாட வாற?'

'இவன் நாகன் ஆருக்காடுறுன்?

'வீமனுக்காம்!'

'எண்டம்மேய்!... அவர்ர ஒசி லுக்க! அவன ஆர்ரா வீமனுக் கெடுத்தவன்? வெயில்ல வாடின ஆமணக்கம் கம்பு போல, மேலெல் லாம் காஞ்சி கணம் வெடிச்சுக்கிடக் கான். இந்தச் சோகயன புடிச்சி வீமனுக்கு ஆட விட்டிருக்கானு களே?'

ஆரோ கதச்சதக்கேட்டு அவ டத்தில நிண்டாக்களெல்லாம் சத் தம் போட்டுச் சிரிக்காங்க. எனக்கு வெட்கமாக் கிடக்கு கண்ணுல தண்

ணியும் வரப்பாக்குது. நான் மெள்ளப்போய் அந்த வேப்பமர நிழல்ல வேலியோட ஒட்டித்து நிண்டு குளறுறன். ஒருவரும் காணமக் கண்ணத் துடச்சிற்று நிக்கன்.

'இல்ல இல்ல... நாகன், ஆள் அப்பிடி யெண்டாலும் அவண்ட கண்டமும் ஆட்டமும் திறந்தான். ச்சூ அவன் வாயத் துறந்து விருத்தம் எடுத்தானெண்டா... அங்கால நீலாவணத் தொங்கல்... இங்கால கரவாகு சோனக வட்ட பொறுக்க கேக்குமிலுவா...? ஆரோ ஒராள் இப்பிடியும் கதைக்கார். அதக் கேட்டு எனக்கு சரியான சந்தோஷம்! சிரிப்பும் வருகுது. நான் சிரிச்சத்த கண்டு, இதும் அவண்ட பொடிச்சிதான் எண்டு சொல்றுர் அந்த ஆள். அதக்கெட்டு வெக்கத்தில நான் அங்காலப் பக்கம் தலயக் குனிஞ்சித்து கெழியுறன்.

கொம்பல் இன்னும் ஓழியல்ல. வெயிலும் நல்லா ஏறித்து பெரியையாவுக்கு பள்ளிக்க தேத்தண்ணி கொண்டுபோற நேரம். கூத்து நடக்காது எண்டு போட்டு பந்தலுக்க இருந்தாக்கள் எழும்பித்து அப்பனுக்கு ஏசி ஏசிப்போறுங்க. எல்லாரும் அப்பனுக்குத்தான் ஏசுறுங்க. சோகயனப் பிடிச்சு வீமனுக்கு ஆடுறு எண்டா அவன்தான் என்ன செய்வான், நடங்க நடங்க எண்டு சொல்லிச் சிரித்துப்போறுங்க. அதக் கேட்டு எண்ட கண் நனஞ்சு வழியுது. விம்மலும் வரப்பாக்குது அடக்கித்து மாரியம்மன் கோயில் பக்கம் பாக்கன். அந்த வேகா வெயில்ல அஞ்சாறு தேஞ்சுபோன ஒட்டல் மாடுகள்தான் தெரியுது! அது களக்கூர்குறிப்பாப் பாத்திற்று நிக்கக்குள்ள......

மகள் இங்க வா...... நீ ஓடிப்போய் நான் சொன்ன எண்டு, பெரியையாட்டகாசு முப்பது ரூபா வாங்கித்து ஓடிவா பாப்பம்...சுணங்காமச் சுறுக்காக ஓடிவா மகள்! எண்டு அப்பன் எனக்குக் கிட்ட வந்து உரத்த சத்தமா — பவுறுச் சொல்லுறுர். சொல்லிப் போட்டு இவனெல்லாம் எத்தினையாம் ஆண்டில கூத்தக் கண்டவனுகள்? எண்டப்பன் பரம்பரையாக் கூத்தாடுவன். தனக்கும் வரிகட்டி தன்னோட ஆடுன ஆக்களுக்கும் வரிகட்டிக் கூத்தாடுவண்டா எண்டப்பன்!...... எண்டு கொம்புறது, வேலிமூலையால நான் கிறுகி ஓடக்குள்ள நல்லாக் கேக்குது. ஓடி வா...மகள் சுறுக்கா வா எண்டு மறுகாலும் என்னப் பாத்து சத்தமா சொல்றுர் அப்பன். இருங்க...இருங்க இனிக்கூத்து நடக்கும்! எண்டு களரியச்சுற்றி நிக்கிற ஆக்கள் கதைக்கிறதும் காதில விழுகுது.

★ ★ ★

பெரியய்யா சொன்ன கதய அப்பனுட்ட, கூத்துக்களரியில போய்ச் சொன்ன அவளவும் காணும். பெரியையாவுக்கும் கொம்புவார். எனக்கும் அடிச்சாலும் அடிப்பார். அதுக்குப் பயத்தில பிறகு நான் கூத்துக் களரி பக்கம் போகல்ல. கூத்துபாக்க எண்டு வந்தும் பாக்க கிடைக்கல்ல. அப்பா சொன்ன வியளத்த பெரியையாட்ட போய்ச் சொன்னன். இப்பிடிக் காசு கீசெண்டு கேட்டு வாறதெண்டால் நீ இங்கவேலைக்கு வேணும் எண்டு பெரியையாவும் அம்மாவும் ஏசுறுங்க. அதப்போய் அப்பனுட்ட எப்பிடி நான்சொல்ற? அம்மையோட வீட்டிலதான் நிக்கன். அப்பாட கூத்து நல்லசோக்கா இருந்துதாம் எண்டு ஆக்கள் வந்து சொன்னுங்க. நாங்க மத்தியானம் தேத்தண்ணி வச்சுத்தான் குடிச்ச. கிளாக்கர் வீட்ட போய் அம்ம மா இடிச்சுக் குடுத்துப் போட்டு அரிசி வாங்கி வந்து கருக்கலுக்க ஆக்கிறு. பெரியையா வீட்ட போகப் புறப்பட்டனன்ன, ராவைக்கு நிண்டு சோறு திண்டுத்து விடியப் போ எண்டு அம்ம தடுத்துப்போட்டா.

எனக்கும் பிள்ளைகளுக்கும் சோறு தந்து போட்டு அப்பன் வரல்லயே எண்டு அம்ம காத்திற்று இருக்கா. கூத்தாடுன சதிரம் களச்சுப்போய் வருவார் எண்டு பெரிய மண் குடத்தில கொதிக்க வச்ச தண்ணி அடுப்பும் நூந்து ஆறிப் போய்க் கிடக்கு. அடுப்பக் கூட்டிப்

பத்தவச்சுப்போட்டு,வாசலல்ல கால நல்லா நீட்டிப் போட்டுத்து கை விளக்கையும் வச்சித்து அம்ம என்னவோ யோசினயில இருக்கா. எங்கயும் குடிச்சித்துக் கிடிச்சுந்துக் கிடக்குதோ மனிசன். ஆருக்குத் தெரியும்! எண்டு ஒருதரம்சொல்ரு.

ஊர்ல உள்ள நாயெல்லாம் ஒரு தரம் ஊளை வச்சு கத்தி ஓஞ்சு போகுதுகள் ... எனக்கு கொட்டாவி வருகுது. அப்பிடியே கண்ண மூடித்துப் படுத்தாப்பல நித்திரையாப் போனேன்,

வெகு நேரத்துக்குப் பிறகு. என்னவோ சத்தம் கேட்டுக் கண்ண முழிச்சா... திண்ணயில அம்மைக்கு ஏசி ஏசி அப்பன் சோறு தின்னுறுர். அம்மையும் சரிக்குச் சரியாத்தான் கதைக்கா.

'அடியேய்...எனக்குத் தெரியா உன்ட உடுதுணிய வச்செண்டாலும் எனக்கு முப்பது ருவாக் காசு புரட்டித் தரத்தான் வேணும். கூத்துக்கு வரிகட்டாம எண்ட மானம் போகுது'

'உடுதுணியும் இருந்தாத் தானே! உடுத்த துணிக்கு மறு துணி இல்லாம நான் கிடக்கன். என்ரேட சருவப்படாது எண்டயோ. நானு உன்னக் கூத்தாடப் போகச் சொன்ன?

'அதெல்லாம் எனக்குத் தெரியாடி, எப்பிடியும் நீ நாளைக்கு முப்பது ருவா எனக்குத் தரத்தான் வேணும்'

'அதுக்கு நான் இனி மாப்பிள தான் கொள்ளவேனும்' இப்பிடி அம்ம சொன்னதுதான் தாமதம், அப்பனுக்குப் பொல்லாத விசர் எழும்பித்து. சோறு திண்ட தகரக் கோப்பையும் செம்பும் எறிந்துக் கொட்டில போய் மோதி கலார் எண்டு சத்தம் கேக்குது, தூஷணத் தால அம்மைக்கு அப்பன் கண்ட மாதிரி ஏசுறுர். அம்மையும் சும்மா இருப்பம் எண்டு இல்லாம அவருக்குச் செவ்வைக்குச் செவ்வை நல்ல கேள்விதான் சேக்கா.

'வரிகட்ட வழியில்லாத உனக்கு, கூத்தும் கும்மாளமும் என்னத்துக்கு?'

'வழி உள்ளவன் மாத்திரந் தானடி கூத்தாடுறுன். அவன் அவண்ட இனசனம், மாமன் மச்சான் அஞ்சப் பத்தாக்குடுக்கானுகள். இண்டைக்குத்தான் ஒவ்வொருவனும் எத்தின சால்வையைக் கட்டிப் போட்டான்! எவ்வளவு மாலயப் போட்டுக் குவிச்சானுகள். எவளவு சீன வெடியத்தான் கொளுத்தித் தள்ளுறுனுகள். நமக்கும் இருக்கானுகள் மச்சான் மார். எண்ட வரவுக்கு ஆருடி ஒரு சீன வெடிக் குஞ்சு சுட்டவன்? தூ......!'

'ஏன் உண்ட அண்ணன் தம்பி மார் வந்திருப்பாங்களே. அவங்க உனக்கு வெடி சுடல்லயா?'

'எல்லா நாயளையுந் தாண்டி சொல்றன்.'

'அதுதான் சரியான வேல. வழியில்லாத நமக்கு கூத்தும்... நெளிப்பும் என்னத்துக்கு அதெல்லாம் கையில மடியல உள்ளவன் செய்யிற வேல'

ஓமோம்... நல்ல வேலதான் என்று கிணத்தடிப் பக்கம் போய் திரும்பி வந்து, வாசல் விளக்கு வெளிச்சத்தில அம்மைக்கு எதிர வந்து இருக்கார் அப்பன். அம்மையப் பாத்துக் கொடுப்புக்குள்ள சிரிச்சித்து, அடியே எண்டப்பன் ஆடின கூத்துகளப்பத்தி உனக்கென்னவும் தெரியுமா? எண்டு கேக்கார்.

'மகளைப் பாத்தா, அப்பனக் கேக்க வேணுமா?' அம்மையும் சிரிச்சித்துச் சொல்ரு.

'அடியேய்... என்னப்போல பிச்சக்காறக் கூத்தாடல்லடி எங்கப்பன். வீடு நிறைய நெல்லக் கட்டி வச்சித்துத்தான் கூத்து. மோட்டு வட்டக் கண்டத்தில மட்டும் முப்பது ஏக்கர். இனி ஆலடி வட்ட கரவாகு வட்டயில அப்பனுக்குத்தானேடி அப்ப காணி பூமி'

'உங்கட அந்தக் காணி பூமி ஆதன பாதனங்கள் எல்லாம் இப்ப

எங்க போயித்து? எண்டு அம்ம கேக்க அதுக்கு மறுமொழி ஒண்டும் சொல்லாம, விலாவில கடிச்ச நுள ம்ப அடிச்சுப்போட்டு அப்பன் விலாவத் தடவுறார்.

'அதெல்லாம் இப்ப வோவார் கைக்கு போச்சு. கடசி காலத்தில...' எண்டு அப்பன் முணு முணுக்கார்.

உண்ட அப்பண்டயத்தான் நீயும் உண்ட அண்ணன் தம்பி மாரும் கூடி அழிச்சயள். எங்கப்பன் தந்த முப்பது மரக்கால் தற அதை யும் வித்துத் துலேச்சிப் போட்டாய். இப்ப எண்ட புள்ள குட்டிக்கு என்ன கெதி. நடுத்தெருவும் கை தராது. அதுக்குள்ள நீ கூத்தாடி வரியும் கட்டவேணும். எண்டு அம்மா ஏசுறு.

'விட்டுத் தள்ளுடி. எல்லாம் போவார் கைக்குப் போயித்து. இனிப் பேசி என்ன புண்ணியம்...? என்ன வாயில போடயும் ஒண்டு மில்லப் போல கிடக்கு? எண்டு கேட்டுத்து அப்பன் முதுகச் சொறி யுறுர்.

'ஏன் ஏன் எல்லாரு இருக்கு' எண்டு சொல்லிப்போட்டு வந்து திண்ணேயில ஏறுரு அம்ம.

வெத்திலேத் தட்டத்துக்குள்ள வெறும் பாக்குப் புளகு ரெண்டு துண்டை தேடி எடுத்திற்று, நாளே க்கு வரிக்காசு முப்பது ரூபா கட்ட வே ணு மே... ...' எண்டு அப்பா தொடங்குறுர்.

' நம்மட மேசிலார் ஊருக்க வீடு கட்டுறுர். அவரோட போனு கல்லக்கில்லத் தூக்கி குடுத்தாலும் ஒரு நாளேக்கு மூணு ரூவா தருவார். அம்பாரையில கூலி வேலேக்கு ஆள் எடுக்காங்கயாம். நீயும் போனு... என்ன'? எண்டு அம்மா கேக்கா.

'அடியேய் நான் ஆடுற கூத் தென்ன... அதக் குறயில விட்டுப் போட்டு உனக்கு அம்பாரையில உழைச்சு வந்து கொட்டச் சொல் ருய் என்ன? எண்டப்பன் என்ன அந்த வேலேயளுக்கு விடல்லடி. அண்டைக்குந்தான் இண்டைக்குந் தான்... நான் இந்தச் சில்லறை வேலேக்கெல்லாம் போற நாகன் இல்ல கண்டயோ. கதைக்கிறத்த யோசிச்சு கத... கவனம்... பிறகு...' எண்டு பல்லக்கடிச்சார் அப்பன்.

'இம்... ம்... பெரிய யோக்கியந் தான். இண்டைக்கு நாளேக்குப் பக்குவப் படப்போற புள்ளய ஊரா வீட்டில வேலேக்கு விட்டி ருக்கிற மாத்திரம் திறந்தான்!' அம்ம சொன்னதக் கேக்க எனக்கு நெஞ்சுக்குள்ள அடிக்குது.

மெய்தான்... புள்ள எங்க... போயித்தாளா? ஆளக்காணல்ல. எண்டு அப்பா கேக்க, அவள் போக ல்ல அன்னு வீட்டுக்க படுக்கார் எண்டு சொல்ரு அம்ம.

புள்ள... புள்ள... எங்க நான் உன்னிட்ட சொன்னது. வாங்கி வந்தயா மனே? அப்பண்ட சத்தத் தக் கேட்டு கண்ண இறுக்கி மூடி த்து நித்திர காறிபோல படுக்கன். அவள் நித்திர நீ கேக்கிறத்த விடிஞ்சதே கேக்கலாம். சும்மா இரு. எணடு சொல்ரு அம்ம. நான் குறட்ட விடுறன்.

★ ★ ★

விடிஞ்சதும் அப்பண்ட பயத்தோட தான் எழும்புறன். பெரியையா காசி தரல்ல என்டால் அப்பா கொம்புவார். என்னயும் இனி அங்க போக விட மாட்டார். அவ ர்ர கண்ணில சத்தியாம ஓடிருவம் எண்டு குசினிப் பன்னுங்கால நுழை ஞ்சி, கோடிப்பக்கமாக நடக்கன். கடப்படிக்குப் போறத்துக் கிடை யில, ஒரு கை எண்ட தோளப் பிடிக்குது. நான் திடுக்கிட்டுத் திரு ம்பிப் பாத்திற்று அப்பிடியே விறச் சுப் போய் நிக்கன். கள்ளனப் போல எண்ட காதில கிடந்த தோட்டக் கழத்துறுர்.

'அம்மையிற்றச் சொல்லாத மனே புள்ள. இதப் பாக்க அப்ப னுன தோடு வாங்கித்தருவன். பெரி யையா கேட்டா கூத்துப் பாக்கக் குள்ள காணவத்துப் போச்செண்டு சொல்லு!'

கா தோ ட கா தா க ரகசியம் சொல்லிப் போட்டு விறு விறு எண்டு நடக்கார் அப்பன். *

காமம் செப்பாது

# கரவெட்டி தந்த கவிஞர் 'கவீ'

## 'ஈழத்து இலக்கிய வளர்ச்சி'யில் இருட்டடிக்கப்பட்டது

# ஏன்?

—★—

'ஆறுமுக நாவலர் தொடக்கம் இன்றைய இளங் கவிஞர்கள் வரை ஆராய்ந்து, பழமையையும் புதுமையையும் ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் காட்டி இருக்கிறார் கனகசெந்திநாதன்'

'கனக செந்திநாதன் ஒரு நடமாடும் வாசிகசாலை'

'ஒரு பெண்ணிற்குச் சீதனமாகக் கொடுக்கக்கூடிய செல்வத்தைத் தமிழ்ப் புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்குவதில் செலவு செய்தவர்.'

'ஈழத்து இலக்கிய உலகத்துடன் இருபத்தைந்தாண்டுகள் தொடர்ச்சியான தொடர்பு கொண்டுள்ளவர்'

'ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் வெளிவரும் புத்தகங்களையும் பத்திரிகைகளையும் ஒழுங்காக வாசித்து வருபவர்.'

'கரவைக் கவி கந்தப்பனார் என்ற பெயரில் ஈழத்து, தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் ஒரு மைல் கல்லாக அமைந்து விட்டவர்.'

1964ம் ஆண்டு ஈழத்தில் வெளியான, ஈழத்து இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் ஆசிரியரான கனக செந்திநாதன் அவர்களைப்பற்றி காணப்படும் குறிப்புகள் தாம் மேலே தரப்பட்டிருப்பவை.

'ஈழத்து இலக்கிய வளர்ச்சி' வெளிவந்தது முதல், அது இலங்கைச் சாகித்திய மண்டலத்தின் நேர்மையும் நிதானமும் வாய்ந்த பக்கச் சார்பற்ற நன்மதிப்பைப் பெற்று தன்னை நிலைநாட்ட முடியாது தோற்றுப் போனது வரை, ஈழத்து இலக்கிய உலகில் அது உண்டாக்கிய குழப்படிகளை வாசக உலகம் நன்கறியும்.

'எட்டாத பழம்புளிக்கும் என்ற பழைய நரிக்கதையை ஞாபகமூட்டுவது போல, ஈழத்து இலக்கிய வளர்ச்சி ஆசிரியரும் அவருடைய குழுவினரும் வட்டம் அமைத்து, சாகித்திய மண்டலத்துக்கு வசை பாடி வருகிறார்கள்' என்று ஈழத்து இலக்கிய உலகம் பேசிக்கொள்வதும் வாசகர்கள் காதில் கேட்காமல் இருக்க முடியாது.

சான்றோர்களே வரலாறு கூற வல்லவர்கள். சான்றோர் என்பவர் யார்? சமன் செய்து சீர் தூக்கும் கோல்போல் அமைந்தொருபால் கோடாமை சான்றோர்க்கு அணி' என்கிறது வள்ளுவம். ஒருபால்

**சங்கு சக்கரன்**

கோடாத சான்றோர் செய்யக்கூடிய செம்மையான சிரஞ்சீவியான முயற்சிதான் ஒரு நாட்டின் வரலாற்று முயற்சிகள். வரலாறுகளைத் திரித்து மறைத்து எழுதும் சூனியக்காரர்களை எதிர்காலம் மன்னிக்காது.

வரலாறுகளும் கல்வெட்டுகளும் இன்று வாழ்கின்ற நமக்கு அல்ல. அது நாளைவர இருக்கின்ற நமது எதிர்கால சந்ததியினருக்காக முன்னைப் பழமையை முழுமையாக அறிய, அதிலிருந்து அவர்கள் முன்னேறி வளர, வாழ, தமது வாரிசுகளுக்கு விட்டுச் செல்லக் கூடிய முதுசொமாக அமைய வேண்டியவை வரலாறுகள். பொய்யை மெய்யென்று சொல்வன்மை கொண்டு சோடித்துக் காட்டுபவர்களாலோ, போக்குகளுக்குத் தலைமை தாங்கி நிற்பவர்களாலோ ஒரு உண்மையான வரலாற்றை உருவாக்கிவிட முடியாது. உயிரோடு வாழும் பொழுதே மாலை மரியாதை—தலைப்பாகைகளை பெற்றுவிட வேண்டும். என்று ஆசைப்படுபவர்களாலும் சாய்வுகள் அற்ற வரலாறுகளை இயற்றிவிட முடியாது இத்தகையவர்களால் எழுதப்படும் வரலாறுகள் நிலைத்து நிற்பதும் இல்லை. சான்றோரால் ஏற்றுக் கொள்ளப் படப்போவதும் இல்லை.

கனக செந்திநாதன் எழுதிய ஈழத்து இலக்கிய வளர்ச்சியைப் படித்து முடிக்கும் போது, அது ஓர் வரலாற்று ஆசிரியனைப்பற்றி, மேற் சண்டபடியெல்லாம் நம்மைச் சிந்திக்க வைப்பது சற்று ஆச்சரியமானதுதான்.

கரவெட்டிக் கவி கந்தப்பனார், அதாவது கரவைக் கவி கந்தப்பனார் கனக செந்திநாதன் அவர்கள் அவருடைய சமகாலத்திலே வாழ்ந்திருந்து பல நல்ல கவிதைகளைப் படைத்து வழங்கிய 'கவீ' என்ற பெயர் பூண்ட கவிஞரை அறிந்து கொள்ளாமலேயே இரசிகமணியாகி விட்ட அதிசயத்தை எண்ணி கரவெட்டி சிரிக்கா விட்டாலும் கவிதையை அறிந்தவர்கள் சிரிக்காமல் இருக்க முடியாது.

'கவீ' யார்?

'கவீ' ஒரு பண்டிதர். பழமையைச் சரியாக அறிந்து, அதன் மூலம் சரியான புதுமைகளைத் தோற்றுவிக்கத் துடிக்கும் புதுமைப் பண்டிதன் 'கவீ' யின் அடக்கமான தமிழ்ப் பணிக்கு — கலைப் பணிக்கு— அவர் காரிய சாதனைகளுக்கு கரவெட்டி வாணி கலைக்கழகம் ஓர் நிதர்சனம்.

'கவீ' ஓர் புதுமைப் பண்டிதன் என்பதற்காகவோ, ஈழத்தின் சாந்திநிகேதனாக விளங்கும் கரவெட்டி வாணி கலைக் கழகத்தின் இயக்குநராக விருந்து அடக்கமான — அருந் தொண்டாற்றி வருவதற்காகவோ பண்டித மாணவர்களுக்காக சுயமாக அவர் வகுத்தமைத்து, சுதந்திரன் பத்திரிகை வாயிலாக வெளிவந்த புதுமையான பாடத்திட்டத்திற்காகவோ, ஈழத்து இலக்கிய வளர்ச்சியில் 'கவீ' க்கும் ஓர் இடம் போட்டுக் கொடுத்திருக்கலாம் என்று நாம் ஒரு நாளும் கூற மாட்டோம்.

'கவீ' என்ற ஈழத்தின் தரமான கவிஞன் ஒருவனை, கரவெட்டியில் பிறந்த கவிஞனை, கரவைக்கவி கந்தப்பனாராகிய கனக செந்திநாதன் தமது நூலில் இருட்டடித்து விட்டாரே! ஏன்? தன் கூடப்பிறந்த ஒரு தரமான கவிஞனை, தமிழ்நாடு வரை அறியப்பட்ட ஒரு கவிஞனை அறிந்து கொள்ளாமல் போன ஒருவர் 'ஈழத்து இலக்கிய வளர்ச்'சியை எப்படிச் சரியாகக் கணிக்க முடியும்? என்பது தான் நமது சந்தேகம். (இந்த இடத்தில், கதிரை மலைப் பள்ளு நாடகம் எழுதிய பண்டிதர்க்க எழுத்தாளரான பண்டிதர் க. வீரகத்தியைப் பற்றி நாம் பேசவில்லை. 'கவீ' என்ற கவிஞரைப் பற்றியே பேசுகிறோம்.)

*1951—1960* கால எல்லையுள், கவிஞர்கள் என்று, கனக செந்திநாதன் தயாரித்து வழங்கியுள்ள, பரம ஹம்சதாசன் முதல் வன்னியூர்க் கவிராயர் ஈறுகவுள்ள வரிசையில் இடம்பெறத்தக்க கவிஞர் தான் 'கவீ' என்பதை நிரூபிக்க நமக்குப் போதிய ஆதாரம் இருக்கிறது.

*51 — 60* ஆம் ஆண்டுகளுக் கிடைப்பட்ட காலத்தில் 'கவீ' எழுதியுள்ள கவிதைகள் பல. சுதந்திரன். வீரகேசரி, தினகரன், ஆகிய ஈழத்தின் தேசிய இதழ்கள் 'கவீ'

யின் கவிதைகளைப் பிரசுரித்துள்ளன. அவற்றையெல்லாம் ஈழத்து இலக்கிய உலகில் தொடர்ச்சியான தொடர்புடைய எம்போன்ற வாசகர்கள் நன்கு அறிவார்கள்.

ஒருவன் எவ்வளவு எழுதினான் என்பது முக்கியமல்ல, அவன் என்ன எழுதினான், எப்படி எழுதினான் என்பதுதான் முக்கியம். தரமான ஒரு கவிஞனைத் தெரிந்துகொள்ள அவன் எழுதிய வரி ஒன்றே போதியது. கவிதை எழுதும் திறமையுடைய அனைவரும் கவிஞர்களே. கம்பனும் கவிதான். கனக செந்திநாதன் காட்டியுள்ளவர்களும் கவிஞர்களே. இவர்களுள் நிலைத்து நிற்பவர் யார் என்பதைத் தீர்மானிப்பது, காலம் என்ற கல்நெஞ்சு படைத்த, ஒரு பால் கோடாத விமர்சகனின் எதிர்கால வேலை.

வரலாற்று ஆசிரியன் ஓர் விமர்சகனாகவும் இருக்கலாம், விமர்சனம் தெரிந்த ஒருவன்தான் வரலாற்று ஆசிரியனாக இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கமுடியாது.

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தோன்றிய இலக்கியப் படைப்பாளிகளையும், அவர்களின் படைப்புகளையும். அக்காலத்தில் ஏற்பட்ட சமூக அரசியல் பொருளாதார வளர்ச்சிகளோடு ஒப்பு நோக்கி, தனிப்பட்ட காழ்ப்புகள் சாய்வுகளுக்கு இடம்கொடுக்காமல் தொடர்ச்சியாக — இரசனையாக எடுத்துக் கூறுவது வரலாற்று ஆசிரியனின் கடமையே ஒழிய, படைப்பாளியின் அணியையோ, அவன் படைப்புகளின் தரத்தையோ எடைபோட்டு, தனக்கு மரியாதை செய்பவரைச் சிலாகித்தும், மற்றவரை மறைத்தும் திரித்தும் எழுதுவது அல்ல. அது வரலாற்றுக்குச் செய்யப்படும் மாபெரும் துரோகமாகும்!

'**கவீ**' யின் கவிதைகளில் இயற்கை அமைதி இலங்குகிறது; செயற்கைச் செப்பம் இல்லை. கற்பனைவளம் இருக்கின்றது. கருத்தற்ற தொடர்கள் இல்லை. அழகிய சொற்கள் மிளிர்கின்றன. அரும் பொருளற்ற அயற்சொற்களைக் காணவில்லை. உண்மை உணர்ச்சி இருக்கின்றது. போலி வருணனை இல்லை. இத்தகு கவிதைகளை இனிது பாடும் இக்கவிஞர் நீடு வாழவேண்டும்.''

'வாணியெனும் தோணி' என்ற 'கவீ' யின் கவிதை பற்றிய விமர்சனத்திலே இப்படிக் கூறியுள்ளார், தமிழ்நாடு தருமையாதீனத் தமிழ்க்கல்லூரி முதல்வர் — சொற்கொண்டல் - வித்துவான் சொ. சிங்கார வேலனார், எம். ஏ. அவர்கள்.

'கவீ' யின் மற்றொரு கவிதையான பிறப்பு இது: பால் போல நிலவு காய்கிறது. பசுமையான முற்றம். மனைவியோடு அமர்ந்திருக்கிறான் அவன். இரவு பசியாறிய பின் ஆறுதலாக அமர்ந்திருக்கிறார்கள் அத்தம்பதியர்.

கணவன் அருகமர்ந்து உரையாடி மகிழும் அந்த மனைவியோ நிறைமாதப் பிள்ளைத் தாச்சி. அந்த சேல்விழியாள் கணவன் செவியைப் பிடித்துக் கிள்ளுகிறாள். தன் வயிற்றுள் அடங்கி இருக்கும் வால் முளையாப் பருவத்து கால்முளையின் போராட்டத்தை கணவனுக்கும் காட்டுகிறாள் அவள். அடிமை வாழ்வுத் தளையை உடைத்தெறிந்து, கருச் சிறையை விட்டு வெளியேறும் வேட்கையோடு, வழி தேடித் தேடி வயிற்றுள் நடைபெறும் சுதந்திரப் போராட்டம் கண்டு, அது உருவான வரலாற்றை ஒருமுறை மனக் கண்ணில் மீட்டு உரையாடி மகிழ்ந்தவாறே துயில் போகின்றனர் அத்தம்பதியர். பழைய ஒரு நாள் இரவின் இனிமைச் சுகம், நெஞ்சிலே கசிவு கூர்கின்றது.

இரவின் பயணம், ஒரு சாம எல்லையைத் தாண்டுவதற்குள், பலமுறை அவள் அவனை எழும்புகிறாள். சீ என்று சினவாது சேவையாகக் கருதி அவளைச் சிறு நீருக்காக வெளியில் அழைத்துப் போகிறான் அவன். குறு நீலக் கண்ணாள் வயிற்குக்குள் 'குத்துகுது' என்று குறைவு செய்கிறாள். அனுங்கிக் குழறுகிறாள். ஓடோடியும் சென்று, அயலவர்களை அழைத்து வருகிறான்.

அவன். ஆதாரமாக அவள் பற்றிக் கொள்ள வளையில் கயிறும் கட்டியாயிற்று. வெளியே வந்து வானத்தைப்பார்க்கிருன். உருவேதும் தெரியாது இருண்டுகிடந்த வானத்திலே வெடி வெள்ளி காலித்து விட்டது. இருண்ட கருச்சிறையின் கால் முளையா வால்முளையா அந்த விடி வெள்ளி!

சின்னக் குட்டி ; அவள் தான் அந்த ஊர் மருத்து விச்சி, அரிசினப் பெண் என்று கவிஞன் நாகரிகமாகச் சொன்னுலும் கூட, நமது பாஷையிலே அவள் பறைச்சின்னக் குட்டி தான். தீண்டத்தகாதவள் ஆனுல் பெற்றவளிலும் பார்க்கப் பேரன்பு-தலையன்பு பூண்ட தெய்வம் அவள். தங்க விக்கிரகங்களை முதன் முதலில் தன் கையினுலே தொட்டு அளைந்து எடுக்கின்றவளாகிய மருத்து விச்சி சின்னக் குட்டியின் வீட்டை நோக்கி ஓடுகிருன் அவன். 'மம்மர் நோய்' என்றறிந்ததும் ஓட்டமும் நடையுமாக அவன் வீட்டுக்கு வந்து சேர்கிருள் சின்னக்குட்டி. அவனை ஓர் இனம்புரியாத கவலை பற்றிக் கொள்கிறது. எங்குமாய் யாவுமாய் நிறைந்த திருவருட் சோதியின் கருணையை வேண்டி, ஏங்கி இறைஞ்சுகிருன் அந்தக் கணவன்.

'புல்லிநுகர்கின்ற இன்பமும், புருஷனும் போதும் போதும் என்று மனைவி புகையும் படியான துன்பந்தான். பிரசவம்......

'பல்லொடு பல்லுகள் கிட்டின.
பாரிய வயிறு துடித்தது.
சொல்லொடு சொல்லுகள்
மோதின; சுந்தரி சோர்ந்து
துவண்டனள்.
கல்லும் கனியக் கரைந்தனள்.

கண்மணி அஞ்சி மிரண்டனன்.'
ஆறுபோல் வேர்வை பெருக்கெடுக்கிறது. உடம்பெல்லாம் அசந்து உருகுகிறது. சோறு படைக்கின்ற கைகள் சோர்கின்றன. கணவனைச் சொக்க வைத்த அந்த குறு குறுக்கும் நீல விழிகளோ சுழல ஆரம்பித்து விட்டன.

கணவன்மார்களாக இருப்பவர்கள் காலங்காலமாகக் கண்டு கண்டு அனுபவித்துச் சகிக்கின்ற ஓர் சோக சித்திரம் நம் மனத்திரையில் விரிகிறது. அதனேடு நேரடியான தொடர்பு கொண்டு உதவி நிற்கின்ற கணவனுடைய வீருனமனமோ வாடுகிறது. அந்தத் துன்பத்துக்கு இரங்கியோ வானமும் அழுது கண்ணீர் வடிக்கிறது.

மனையாளின் கதறல் முருகப் பெருமானுகிய சேந்தன் செவியிலும் பட்டிருக்க வேண்டும். அவன் அருள் பாலித்து விட்டான். அதோ அவன் கருணை தான் பிறந்து விட்டது. குழந்தை அழுகிறது. அதிர்வெடி போல் கணீரென்று அந்த ஓசை கணவன் செவியில் படுகிறது. 'ஐயா ஐயா!' என்று அன்பொழுக அழைத்த அரிசனப் பெண் சின்னக் குட்டி சொன்னுளே ஒரு சொல்! 'ஆம் பிள்ளை' ஐயா என்ருள் அவள். பறைச்சின்னக்குட்டியின் பாஷையிலே ஆண்பிள்ளை என்று அதற்குப் பொருள். கவிஞனின் மொழியிலோ ஆகும் பிள்ளை — ஆண்பிள்ளை என்றெல்லாம் ஆம்பிள்ளைக்கு அர்த்தம். 'பேடுநீங்கிப் பிறத்தல் அரிது' என்றுதானே பெண்ணுகப் பிறந்த ஔவையும் சொல்கிருள். மெய் மறந்தான் அந்தக் கணவன்.

கவிஞன் காட்டுகின்ற யதார்த்த பூர்வமான, அனுபவச் சொற் சித்திரத்திலே ஈடு பட்டு அவன் பின்னுல் வந்து விடுகிருேம். பால்போல நிலவெறிக்கும் பைங்கண் முற்றத்திலே ஆரம்பித்த இந்த வாழ்க்கைச் சித்திரம், வளர்ந்து வளர்ந்து வந்து, ஓர் பரவச நிலையை நமக்கு ஏற்படுத்தி உள்ளத்தை நெகிழ வைக்கிறது. உணர்ச்சியில் கனிந்து நிற்கும் நாமும் ஆண்பிள்ளை பெற்றெடுத்த அந்தக் கணவனின் பரவச நிலையோடு ஒன்றி நிற்கிருேம். நம்மையெல்லாம் தன்வயமாக்கிவிட்ட அந்தக் கவிஞன், அரிசனப் பெண் சின்னக் குட்டியைப் பார்த்து, ஆண் குழந்தை பெற்றெடுத்த வீருப்போடு பேசுகின்ருன்.

'அன்னுய், நீ செய் உதவிக்கு ஆற்றும் கைமாறு எதுவுண்டு? ஒன்றுமே இல்லை. வாதை போக்கும் பொன்போன்ற அருமையானவ

ளாகிய உன்னை, புறம்பாக்கி வைத்திருக்கின்ற தீண்டாமை நோயை, இதோ எங்கள் சேய், தகர்த்து சின்னு பின்னமாக்குவான்]' அதுவே உனக்குத்தகுந்த கைம்மாறு; அந்தத் தீண்டாமையைத் தகர்த்தெறிவதற்காகவே எங்கள் செல்வச் சேய் வளர்வான். என்கிறுன் அந்தக் கணவன். அதையே அவளுக்கு கொடுத்து விடுகிறுன். எத்தனை அழகான — அருமையான — முற்போக்கான கைம்மாறு! உணர்ச்சியால் நெகிழ்ந்திருக்கின்ற நம் மனப்பாத்திகளிலே ஓர் முற்போக்கான இலட்சிய விதையைப் புதைத்துவிடும் கவிஞனின் சாதுரியத்தை நாம் பாராட்டுகிறோம். கன்னல் மொழியாள் சின்னக்குட்டியும் கைகூப்பி கவிஞனின் இலட்சிய சபதத்திற்கு, ஆசி கூறி வாழ்த்துகிறுள்.

காலை அழகு மகிழ்ச்சியைத்தருகிறது. பிரசவம் என்ற மாயவித்தையை நடத்தி முடித்த தாயோ, தன் கன்றை அணைத்தபடி சாலை ஓதுக்கிற் சோர்ந்து படுத்திருக்கிறுள் இரவு முழுவதும் போராட்டம் நடாத்தி சாவைப் புறங்கண்ட அவளைக், கவிஞன் 'சீமாட்டி' என்று சொல்லாவிட்டால் அவன் வாய் தான் அழுகிப் போகாதா! மெல்ல விழிகளைத் திறந்து அவனைப் பார்க்கிறுள் அந்தச் சீமாட்டி, காலைச் சூரியன் ஒளியிலே, புல்லு நல் இன்பமும் புருஷனும் போதும் போதும் என்று புகைந்த அவள் சபதமெல்லாம் பனியாகிப் போன விடம் தெரியவில்லை. கணவனைப் பார்த்து நெஞ்சின் உவகையைத் தெரிவிக்கிறுள் அவள். 'பிறப்பு' ஒருதரமான கவிதையாக நமக்குக் கிடைக்கிறது.

# பிறப்பு

## கவீ

பால்போல நிலவெறிக்கும் பைங்கண் முற்றம்
பசியாறிப் பாவையுட னிருந்த வேளை,
சேல்போல விழியாள்என் செவியிற் கிள்ளிச்
சேய்புரியும் சேட்டைகளின் சேதி சொல்ல,
வால்முளையாப் பருவத்தும் வயிற்ற டங்கி
வாழடிமை தளைஇரிய வாசல் பார்க்குங்
சால்முளையின் போராட்டங் காதிற் கேட்டுக்
களிப்போடு கண்ணயர்ந்தோம் கசிவுகூர.

சிறுநீருக் கெழுப்பினுள் செல்வி பல்கால்;
சீயென்று சினவாது சேவை செய்தேன்;
குறுநீலக் கண்ணு ளோர்யாமம் போலக்
''குத்துகுது'' என்றுமெலக் குரைவு வைத்தாள்;
அருகோர அயலவரை அழைத்து வந்து,
அவள்பிடிக்க கைவளையிற் கயிறுங் கட்டி,
உருவேதும் தெரியாத உயர்ந்த வானில்
உயர்வாக விடிவெள்ளி தோன்றக் கண்டேன்.

எங்களூர் 'மருத்துவிச்சி சின்னக்குட்டி,
ஈன்றாளிற் தலையன்பு இசைந்த மேலோள்,
மங்காத 'அரிசனப்பெண்' மனையிற் சென்று
மம்மர்நோய்— மனையாளின் மாய்ச்சல் சொல்ல,
தங்கமாய்ச் சிசுவெடுக்கும் தமிழ்மூ தாட்டி
தயங்காது விரைந்தா ளென் தவிப்பு நோக்கி,
எங்குமாய் யாவுமாய் நிறைந்த ஜோதி
இன்னருளுக்(கு) ஏக்கற்று இல்லஞ் சேர்ந்தேன்.

## வேறு

பல்லொடு பல்லுகள் கிட்டின;
பாரிய வயிறு துடித்தது;
சொல்லொடு சொல்லுகள் மோதின;
சுந்தரி சோர்ந்து துவண்டனள்;
கல்லுங் கனியக் கரைந்தனள்;
கண்மணி அஞ்சி மிரண்டனள்;
புல்லுநல் லின்பமும் புருஷனும்
போதும் போதுமெனப் புகைந்தனள்.

ஆறென வியர்வை பெருகவே,
அங்க மெலாம் அசந் துருகவே,
சோறுதரு கைகள் சோரவே,
சொக்கவைத்த கண்கள் சுழலவே,
வீறுடை யென்னுளம் வாடவே,
வேதனைக் கூக்குரல் கேட்டதோ
ஆறாகக் கண்ணீர் வடித்தது
வானம்; வனிதை வருந்தினள்.

## வேறு

செய்யாள் கதறி யழுதவொலி சேந்தன் செவியிற் பட்டதுவோ!
அய்யன் அருளே; அழகான அருமைச் செல்வம், அதிர்வெடிபோல்
செய்யா நின்ற கணீர்நாதம் செவியிற்சேர, மெய்ம்மறந்தேன்;
ஐயா, ஐயா, ஆம்பிள்ளை' என்றாள் அன்னை மருத்துவிச்சி.

''அன்னாய் நீசெய் உதவிக்கு ஆற்றுங் கைமா றெதுவுண்டு?
பொன்னார் வாதை போக்கும்உனைப் புறம்பே வைத்த தீண்டாமை
சின்னா பின்ன மாக்குவனால் எங்கள் செல்வச் சேய்'' என்றேன்;
கன்னல் மொழியாள் கைகூப்பிக் காதல்கூர ஆசித்தாள்.

காலே அழகு களிகொள்ளக் கன்றும் தாயும் கண்ணயரும்
சாலே ஒதுக்குள் சென்றேனே; சாவை எதிர்த்த சீமாட்டி
கோலக்குழவி தனேயணேத்து வாலே நினேவு வட்டமிட,
நீல விழிகள் திறந்தேதன், நெஞ்சின் உவகை தெரிவித்தாள்.

'கவீ' இக்கவிதையைப் சுமார் பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னர் எழுதினர். 20—11—1955ல் வீரகேசரி ஞாயிறு வெளியீடு கவிதா மண்டலத்திலே வெளியான முதல் கவிதைதான் இது.

இன்று ஆலயப் பிரவேச உரிமை கோரி, சத்தியாக்கிரகம் ஊர்வலங்கள் ஐயர் அறிக்கைகள் அதற்கு எதிர் அறிக்கைகள், அரசாங்க அதிபர் தலேயீடு என்றெல்லாம் யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற சிறுபான்மைத் தமிழர் போராட்ட அணியிலே 'கவீ' யின் 'ஆம்பிள்ளே' யும் ஒருவனுக இருக்கலாம் அல்லவா.

பிறப்பைப் போலவே பலதரமான கவிதைகளே 'கவீ' எழுதியுள்ளார் அவை ஈழத்தின் பல, தேசிய இதழ்களில் வெளிவந்துள்ளன. எல்லாவற்றையும் எடுத்துக்காட்ட இந்த இடம் போதியதன்று பிறப்பு 'கவீ' என்ற ஒருபானேச் சோற்றுக்கு ஒரு சோறு!

இத்தகைய, தரமான கவிதைகளே எழுதியுள்ள 'கவீ' என்ற கவிஞரை..... ,

ஆறுமுக நாவலர் முதல் இன்றைய இளங்கவிஞர்கள் வரை ஆராய்ந்து வைத்திருக்கும் நடமாடும் வாசிகசாலேயான, கனக செந்திநாதன், ஒரு பெண்ணிற்குச் சீதனம் கொடுக்கக் கூடிய செல்வத்தை தமிழ்ப்புத்தகங்களும் பத்திரிகைகளும் வாங்குவதில் செலவு செய்து, ஈழத்து இலக்கிய உலகுடன் இருபத்தைந்தாண்டுகள் தொடர்ச்சியான தொடர்பு கொண்டுள்ள கனக செந்திநாதன், ஈழத்திலும் தமிழ் நாட்டிலும் வெளிவரும் புத்தகங்களேயும் பத்திரிகைகளேயும் ஒழுங்காக வாசித்து, ஈழத்துத் தமிழ் இலக்கிய விமர்சனத் துறையில் ஒரு மைல்கல்லாக அமைந்து விட்ட கரவைக் கவி கந்தப்பனுராகிய கனக செந்திநாதன், அறியாமற்போனது விந்தையிலும் விந்தையன்றே! தன்னுட்டிலே பிறந்து தரமான கவிதைகள் எழுதி தமிழ் நாடுவரை அறியப்பெற்ற கவிஞர் 'கவீ' யைத் தெரியாத ஒருவர், ஈழத்தின் இலக்கிய வளர்ச்சியைக் கணிக்க முனேந்ததும் முன்வந்ததும் வேடிக்கையே! கதிரை மலேப் பள்ளு நாடகம் எழுதிய பண்டிதர் வீரகத்தி என்று தமது வளர்ச்சி நூலில் ஒருவரி எழுதிய கனக செந்திநாதன் 'கவீ' யை மறந்து போகலாம்; கவிதையிலே ஆர்வமுடைய என்போன்ற ஒரு இலக்கிய வாசகன் 'கவீ' யையும் அவர் எழுதிய நூற்றுக்கணக்கான கவிதைகளேயும் மறந்து விட வேண்டுமா? தரமானவர்களே, இருட்டடிப்புச் செய்து தமது சொந்தக் காழ்ப்புகளே தீர்த்துக் கொள்வதுதான் ஈழத்து இலக்கிய வளர்ச்சியா? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா. தன் சகோதரனேயே மறைத்து விட்ட கனக செந்திநாதன் மற்றவர்களே என்ன செய்திருப்பார் என்று சொல்ல வேண்டியதில்லே. இப்படித்தான் நமது இலக்கிய வளர்ச்சி இருக்க வேண்டுமா? ஈழத்து அறிஞர் உலகு சிந்திக்குமாக!

## பாடும்மீன் சந்தாரர் விண்ணப்பம்

பெயர்: ......................................................................

முகவரி: ......................................................................

......................................................................

தயவு செய்து என்னையும் பாடும்மீன் பத்திரிகையின் சந்தாதாரராகச் சேர்த்துக் கொள்ளவும். இத்துடன் பாடும்மீன்............ வருடச் சந்தாவாகிய ரூபா....................யும் அனுப்பி வைக்கிறேன்.

............................ ......................................

திகதி ஒப்பம்.

---

## இலங்கையில் பாடும்மீன் கிடைக்கும் இடங்கள்

ஸ்ரீ முருகன் ஸ்டோர்ஸ்
கல்முனை.

சிவநடராசா ஸ்டோர்ஸ்
மட்டக்களப்பு.

கலைச்சோலை
புத்தக நிலையம்
திருகோணமலை.

முஸ்லிம் ஹொட்டல்
கண்டி.

பூபாலசிங்கம் புத்தகசாலை
யாழ்ப்பாணம்.

ராஜேஸ்வரி பவான்
நொறிஸ் வீதி,
கொழும்பு.

மனோகரா ஸ்டோர்ஸ்
அக்கரைப்பற்று.

இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு விற்பனை ஏஜெண்டுகள் தேவை தொடர்பு கொள்ளுங்கள்.

பாடும்மீன், பெரியநீலாவணை, கல்முனை.

# STAR RADIO SERVICE

RADIO SALES
&
SERVICE
LOUDSPEAKER
&
LIGHT MACHINE




FOR HIRE

## *Star Radio Service*

*20, Police Station Road, ; Kalmunai*

---

றேடியோ விற்பனையும் பழுது பார்த்தலும்
லைட் மெசின், ஒலிபெருக்கி
வாடகைக்கும்
சிறந்த இடம்




## ஸ்ரார் றேடியோ சேவிஸ்

20, பொலிஸ் வீதி, : கல்முனை.

*For all your Photos*

**RANEE STUDIO KALMUNAI.**



★ நவநாகரிக முறையில்
★ உங்கள் எழில் உருவங்களை
★ சிறந்த முறையில்
★ பிரதிபலிக்கச் செய்வது

**ராணி ஸ்ருடியோ,**

**கல்முனை.**


இப்பத்திரிகை, கல்முனை தமிழ் இலக்கியக் கழகத்துக்காக பாண்டிருப் பில் வசிக்கும் கழகச் செயலாளர் சா. தருமலிங்கம் அவர்களால் மட் களப்பு கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.